# சித்திரக் கலை

## ஆசிரியர் வழிகாட்டி

(2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

# தரம் 10



அழகியற் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
www.nie.lk

# சித்திரம்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 10

**(2015 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)**

**அழகியற் கல்வித்துறை**
**மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்**
**தேசிய கல்வி நிறுவகம்**
**இலங்கை**
**www.nie.lk**
**info@nie.lk**

**சித்திரம்**
தரம் - 10
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2014

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

**அழகியற் கல்வித்துறை**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

***பதிப்பு :***
***பதிப்பகம்***
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

இலங்கையின் இடைநிலைக் கல்வியில் புதிய தேர்ச்சி மையப் பாடத்திட்டத்தின் முதற் கட்டம் 2007 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கொருமுறை மேற்கொள்ளப்படும் கலைத்திட்ட மறுசீரமைப்பின் மூலம் இது அறிமுகப்படுத்தப்பட்டது. தேசிய மட்டத் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்யும் நோக்கின் அடிப்படையில் தேசிய கல்வி ஆணைக்குழுவின் விதப்புரைகளுக்கமைய அப்போது நடைமுறையிலிருந்த உள்ளடக்கம் சார்ந்த கல்வி முறைமை இதன் மூலம் மாற்றியமைக்கப்பட்டது.

தேர்ச்சி மையக் கலைத்திட்டத்தின் இரண்டாம் கட்ட மறுசீரமைப்பானது 2015ஆம் ஆண்டிலிருந்து தரம் 6, 10 ஆகிய வகுப்புக்களுக்கு அமுல்படுத்தப்படவுள்ளது. இந் நோக்கத்தை அடையும் பொருட்டுத் தேசிய கல்வி நிறுவகம் ஆய்வை அடிப்படையாகக் கொண்ட பேறுகளையும் ஆர்வலர்களுடைய பல்வேறு ஆலோசனைகளையும் பலதரப்பட்டவர் களிடமிருந்தும் பெற்றுக்கொண்டது. அவற்றின் அடிப்படையில் நியாயப்படுத்தப்பட்டதொரு செயன்முறையை அறிமுகப்படுத்தியதுடன் அதற்கமைவான பாடத்திட்டங்களையும் மேற்படி தரங்களுக்காக விருத்தி செய்துள்ளது.

இந்த நியாயப்படுத்தற் செயன்முறையிற் கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது நிலைக்குத்தான ஒருங்கிணைப்பு முறை பயன்படுத்தப்பட்டு, கீழிருந்து மேல்நோக்கிய அணுகுமுறையில் அனைத்து பாடங்களுக்குமான தேர்ச்சி மட்டங்கள் முறைமையாக விருத்தி செய்யப்பட்டுள்ளன. மேலும்,அடிப்படை விடயங்களிலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் வகையில் அவை ஒழுங்குபடுத்தப்பட்டும் உள்ளன. பாட உள்ளடக்கத்திற் காணப்படும் கூறியது கூறல் மற்றும் பாட உள்ளடக்கச் சுமை என்பவற்றை இழிநிலைக்கு இட்டுச் செல்லவும் மாணவர் நேயமானதும் நடைமுறைக்கேற்றதுமான கலைத்திட்டமொன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்குத் தேவையான வழிகாட்டல்களை வழங்கவும் பாடத்தைத் திட்டமிடவும் கற்பிக்கவும் செயற்பாடுகளை முன்னெடுக்கவும் அளவீடு மற்றும் மதிப்பீடுகளை மேற்கொள்ளவும் உதவுமுகமாக ஆசிரியர் வழிகாட்டியிற் புதிய வடிவமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இவ் வழிகாட்டல்கள் ஆசிரியர்கள் வகுப்பறையில் மென்மேலும் உற்பத்தித் திறனுள்ளதும் விளைதிறன் மிக்கதுமான வகையிற் துலங்குவதற்கு உதவும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் மாணவர்களது தேர்ச்சிகளை விருத்தி செய்யும் வகையிற் தர உள்ளீடுகளையும் மேலதிக செயற்பாடுகளையும் தெரிவு செய்வதில் ஆசிரியர்களுக்குச் சுதந்திரத்தை வழங்கியுள்ளது. இப்புதிய ஆசிரியர் வழிகாட்டிகள் பாட உள்ளடக்கச் சுமையை விடுத்து, விதந்துரைக்கப்பட்ட பாடநூல்களின் மூலம் பாட உள்ளடக்கத்தைப் பூரணப் படுத்தியுள்ளது. ஆகவே, ஆசிரியர்கள் புதிய ஆசிரியர் வழிகாட்டிகளைப் பயன்படுத்தும் அதேவேளை கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தினாற் தயாரிக்கப்பட்ட பாடநூல்களையும் பொருத்தமான வகையிற் பயன்படுத்துதல் வேண்டும்.

ஆசிரியர் மையக் கல்வி முறைமையிலிருந்து மாணவர் மையக் கல்வி முறைமைக்குத் தளமாற்றம் செய்வதும் வேலையுலகிற்கு ஏற்ற வகையிற் பொருத்தமான மனித வளங்களை விருத்தி செய்வதும் தேவையான தேர்ச்சிகளையும் திறன்களையும் பாடசாலையிலிருந்து வெளியேறும் மாணவர்கள் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான செயற்பாடு சார்ந்த கல்வி முறைமையை விருத்தி செய்வதும் மேற்படி நியாயப்படுத்தப்பட்ட பாடத்திட்டம் மற்றும் ஆசிரியர் வழிகாட்டியின் புதிய வடிவமைப்பு என்பவற்றின் அடிப்படை நோக்கங்களாகும்.

புதிய ஆசிரியர் வழிகாட்டியை உருவாக்குவதிற் பங்களிப்புச் செய்த தேசிய கல்வி நிறுவகத்தின் கல்விசார் அலுவல்கள் சபை மற்றும் பேரவை உறுப்பினர்களுக்கும் அனைத்து வளவாளர் களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகின்றன.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்தி புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காக பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரியவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காக கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்ட பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதிசெய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

# பாட அறிமுகம்

பாடசாலைக் கலைத்திட்டத்தில் அடங்கியுள்ள பாடங்களுள் அழகியற் பாடங்கள் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளன. மனிதனின் புலனுணுர்வுகளை முனைப்புறுத்தும் ஆற்றலை அழகியல் கொண்டிருப்பதே அதற்கான காரணமாகும். அழகியற் பாடங்களுள் ஒன்றான சித்திரக் கலைப் பாடம், மனிதனின் புலனுணர்வுத் திறன்களை மாத்திரமன்றி ஆக்கியல் திறன்களையும் விருத்தி செய்வதற்கு பெரிதும் துணையாகின்றது.

நல்ல சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கு நல்ல பிரசைகள் தேவை. அதற்குரிய அத்தியாவசியத் தேர்சசிகளை அடிப்படையாகக் கொண்டு சித்திரக் கலைப் பாடக் கல்வியினூடாக அத்தேர்ச்சிகளை விருத்தி செய்ய வழிகாட்டும் நோக்குடனேயே இக்கைந்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

மாணவரிடத்தே அத்தியாவசிய தேர்ச்சிகளை அடைவதற்காகப் பாடத்தோடிணைந்த ஏழு (7) தேர்ச்சிகள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தேர்ச்சிகள், அந்தந்த வயது மட்டத்துக்குப் பொருத்தமானவாறு தேர்ச்சி மட்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன. அத்தேர்ச்சி மட்டங்களின் கீழ் 10 ஆந் தரத்துக்கென விதந்துரைக்கப்பட்டுள்ள விடய உள்ளடக்கத்தை வகுப்பறையில் நடைமுறைப்படுத்த வேண்டிய விதத்தை முன்மாதிரியாக எடுத்துக் காட்டுவதே இந்த ஆசிரியர் வழிகாட்டியின் எதிர்பார்ப்பாகும்.

பணிப்பாளர்
அழகியற் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்

# கலைத்திட்டக் குழு

## ஆலோசனையும் அங்கீகாரமும்
- கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம்

## பாடஇணைப்பாக்கம்
- திரு.எம்.ஜீ.ஏ.கே.யூ.பண்டார, சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திரு. ஞானசிரி கமகே, விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை

## பாட நிபுணர்கள்.
- கலாநிதி.டி.சனாந்தன், சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
- பேராசிரியர்.சுசிரிபால மாலிம்பட, சிரேஷ்ட விரிவுரையாளர்,
  அழகியல் பல்கலைக்கழகம்
- பேராசிரியர் ரம்பயவர்தன பொடிநிலமே சிரேஷ்ட விரிவுரையாளர்,
  அழகியல் பல்கலைக்கழகம்
- திரு.பி.அகிலன் சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## உள்வாரி வளப்பங்களிப்பு
- திரு.எம்.ஜீ.ஏ.கே.யூ.பண்டார, சிரேஷ்ட விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திரு. ஞானசிரி கமகே, விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திரு.ரவீந்திர தேனுவர, உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திருமதி. சமரி தபஸ்வரகே, உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை
- திருமதி. எம்.பீ.பிரேமதிலக்க, உதவி விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை

## வெளிவாரி வளப்பங்களிப்பு
- கலாநிதி.உபாலி ரஞ்சித் ரணவக்க, கோட்டக்கல்வி அலுவலகம், புலத்சிங்ஹள
- திருமதி.டீ.எம்.குமாரி திசாநாயக்க, சித்திரக் கலை ஆசிரியர்,
  ஸ்ரீசுமங்கள சிரி மகாவித்தியாலயம்
- திரு.எச்.எம்.எஸ்.பீ.எச்.பண்டார, சித்திரக் கலை ஆசிரியர்
  சாந்த சில்வெஸ்டர் வித்தியாலயம், கண்டி
- திரு.எச்.என்.அனுரபிரியந்த ஆசிரியர் ஆலோசகர்,
  வலயக் கல்வி அலுவலகம் ஸ்ரீஜயவர்தனபுரம்
- திருமதி.எஸ்.ஏ.ஹர்றா மனோஜனி, ஆசிரிய ஆலோசகர்
  வலயக் கல்வி அலுவலகம் ஹோமாகமை
- திருமதி.எச்.ஏ.சஞ்ஜீவி மஞ்ஜரி, ஆசிரியர் ஆலோசகர்,
  வலயக் கல்வி அலுவலகம், கொழும்பு
- திரு..என்.ராஜன், ஆசிரியர் ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம் தென்மராட்சி
- திருமதி.எம்.ஈழமுருகன், ஆசிரியர் ஆலோசகர், வலயக் கல்வி அலுவலகம்
  வலிகாமம்

## மொழிபெயர்ப்பு
- திரு.எம்.எச்.எம்.யாக்கூத், முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி
- திருமதி.யூ.விவேகானந்த, ஆசிரியை, சிங்கள வித்தியாலயம், திக்கோயா

## கணினி அச்சுக்கோர்ப்பு
- திருமதி.நாதியா ஹிஸான், தேசிய கல்வி நிறுவகம்

## நானாவித உதவிகள்
- திருமதி.ஈ.எம்.விக்ரம நாயக்க, அழகியற் கல்வித்துறை
- திரு.பிரேமானந்த பெரேரா, அழகியற் கல்வித்துறை

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

இந்த ஆசிரியர் வழிகாட்டி 2015ஆம் ஆண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள 10ஆந் தர சித்திரக் கலைப் பாடத்திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன. வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை வெற்றிகரமாக நடத்துவதற்குத் துணைபுரிவதற்காகவே இந்த ஆசிரியர் வழிகாட்டி உங்களுக்கு வழங்கப்பட்டுகின்றது. இதனைப் பயன்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் குறித்து விசேட கவனஞ் செலுத்துவது பயனுடையதாகும்.

- பாடசாலையின் ஆண்டு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அமைய நேரத்தை முகாமை செய்து கொள்ளல்.
- பிரதானமான 7 தேர்ச்சிகளின் கீழ் வரிசைப்படுத்தப்பட்டள்ள உள்ளடக்கத்தின் 1.0 தொடக்கம் 5.0 வரையிலான செயற்பாடொன்று தரப்பட்டுள்ளது. அந்தந்தத் தேர்ச்சி மட்டத்துக்கு அமைவாக, விதந்துரைக்கப்பட்டுள்ள தலைப்புக்களை அல்லது வேறு தலைப்புக்களை அடிப்படையாகக் கொண்டு ஏனைய செயற்பாடுகளை திட்டமிட்டு அமைத்துக் கொள்ளல்.
- 6.0 ஆம் 7.0 ஆம் தேர்ச்சிகளுக்காக செயற்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ள போதிலும், பொருத்தமான ஆக்கபூர்வமான முறையியல்களைப் பயன்படுத்தி குறித்த பாடவிடயங்களை அடையத்தக்கவாறு செயற்பாடுகளை மாற்றியமைத்துக் கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.
- விதந்துரைக்கப்பட்டுள்ள மற்றும் தாமே தயாரித்த செயற்பாடுகளைச் செயற்படுத்தும் போது பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்துவது பயனுடையதாகும்.

  I. அழகியல் சார்ந்த அல்லது பாடத்துடன் இணைந்த சுவாரசியமான முன்னிலையொன்றின் மூலம் களியூட்டத்தக்கவாறு பாடத்தை தொடங்குவதன் மூலம் மாணவரை பாடத்தின்பால் ஈர்த்தல், முன்னறிவை வினவியறிதல், ஊக்கமளித்தல் ஆகியன மூலம் பாடச் செயற்பாட்டை அணுகுதல்.
  II. மாணவரது இயல்பான ஆற்றல்களை இனங்கண்டு, ஆக்கபூர்வமாக கற்றல் கற்பித்தல் முறைகளைக் கையாண்டு, பின்னூட்டலும் முன்னூட்டலும் வழங்கி செயற்பாட்டை இறுதிவரை இட்டுச் செல்லல்.
  III. முன்வைப்புக்கள், மதிப்பீடு, மீட்டாய்வு, பின்தொடர் வேலைகள், ஒப்படைத்தல் போன்றவற்றை உள்ளடக்கி ஒட்டுமொத்தப் பாடத்தை நிறைவு செய்தல்.

- இந்த ஆசிரியர் வழிகாட்டி ஒரு வழிகாட்டல் மாத்திரமேயாகும். பாடம் சார்ந்த நூல்கள் இணையத்தளங்கள் போன்ற ஊடகங்களை உசாவுவதன் மூலம் ஆசிரியரும், மாணவரும் அறிவூட்டம் பெறுவதால் கற்றல் - கற்பித்தற் செயன்முறையை மேலும் செம்மையாக்கிக் கொள்ளலாம்.
- அறிமுகம் செய்யப்பட்டுள்ள 7 தேர்ச்சிகளும் தனியாளின் ஆளுமை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு கட்டியெழுப்பப்பட்டுள்ளனமையால் 7 தேர்ச்சிகளுக்குமுரிய விடய உள்ளடக்க முறைமையை வகுப்பறையில் நடைமுறைப்படுத்தல் அவசியமாகும்.

பின்வரும் அட்டவணைக்கேற்ப செயற்பாடுகளை மூன்று தவணைகளாகப் பிரிக்கவும்.

| 1 தவணை | | | 2 தவணை | | | | 3 தவணை | |
|---|---|---|---|---|---|---|---|---|
| செயற்பாட்டு இலக்கம் | | | செயற்பாட்டு இலக்கம் | | | | செயற்பாட்டு இலக்கம் | |
| 1.1.1 | 3.1.1 | 7.1.1 | 1.13 | 3.1.2 | 6.2.1 | 7.2.3 | 1.1.5 | 3.2.2 |
| 1.1.2 | 4.1.1 | 7.1.2 | 1.1.4 | 3.1.3 | 6.2.2 | | 1.1.2 | 4.2.1 |
| 2.1.1 | 5.1.1 | 7.1.3 | 1.2.1 | 4.1.2 | 6.3.3 | | 2.2.4 | 6.1.4 |
| 2.1.2 | 6.1.1 | 7.2.1 | 2.2.1 | 4.1.3 | 7.1.3 | | 2.2.5 | 6.1.5 |
| | 6.1.2 | 7.2.2 | 2.2.2 | 5.2.1 | 7.2.1 | | 2.2.6 | 6.1.6 |
| | | 7.2.3 | 2.2.3 | 6.1.3 | 7.2.2 | | 3.2.1 | 7.2.4 |
| | | | | | | | | 7.3.1 |

# உள்ளடக்கம்


| | பக்கம் |
| --- | --- |
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | i |
| பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | iv |
| அறிமுகம் | v |
| வளவாளர்கள் | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான வழிகாட்டல்கள் | vii |
| பாடத்திட்டம் | ix–xxiii |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | 1–111 |

# சித்திரக் கலை

## பாடத்திட்டம்

# அறிமுகம்

பாடசாலை முறைமையில் நடைமுறைப்படுத்தப்படும் ஒட்டுமொத்தக் கலைத்திட்டத்தில் "சித்திரக் கலை" பாடம் சிறப்பான ஒன்றாகும். படைப்பாக்கமும், இரசனையும் முதன்மையிடம் பெறும் சித்திரக் கலைப்பாடத்தினூடாக ஆற்றப்படும் சமூகப் பணி மிக முக்கியமானதாகும். சித்திரக் கலையினூடாக தனியாளிடத்தே சமனிலையான ஆளுமை விருத்தியடையும்.

சித்திரக் கலைப் பாடத்திட்டத்தில் பாடம் சார்ந்த ஏழு தேர்ச்சிகள் மூலம் பிள்ளையிடத்தே அறிவு, திறன்கள், மனப்பாங்குகளையும், நற்பழக்கங்களையும் விருத்தி செய்வது குறித்துக் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. பாடம் சார்ந்த ஐந்து தேர்ச்சிகளும், கலை வரலாறு மற்றும் இரசனைக்காக இரண்டு தேர்ச்சிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன. அதற்கமைய அந்தந்தத் தரத்தில் வயது மட்டத்துக்குப் பொருத்தமானவாறு தேர்ச்சி மட்டங்களுக்கு அமைவாக விடய உள்ளடக்கம் வரிசைப்படுத்தப்பட்டுள்ளது.

பாடத்திட்ட மறுசீரமைப்பின் போது பின்வரும் விடயங்களிற் கவனஞ் செலுத்தப்பட்டது.

- சர்வதேச சித்திரக் கலையின் புதிய போக்குகள்.
- இத்துறையில் வெளியிடப்பட்டுள்ள புதிய கருத்துக்கள்.
- பாடசாலையில் வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயன்முறை தொடர்பாக நடத்தப்பட்ட அவதானிப்புக்களும் ஆய்வுகளும்.

முதலாவது தேர்ச்சியின் கீழ் அடங்கியுள்ள மனித உருவங்களும் விலங்கு உருவங்களும் வரைவதற்குரிய அடிப்படைப் பயிற்சிக்காகப் புதிய தேர்ச்சி மட்டம் உருவாக்கப்பட்டது. இரண்டாவது தேர்ச்சியின் கீழ் அடங்கியுள்ள இயற்கைச் சூழலிலும் மனிதனாலாக்கப்பட்ட சூழலிலும் உள்ள அடிப்படையான தளவுருவங்கள், வடிவங்களுக்கான தேர்ச்சி மட்டம் உருவாக்கப்பட்டது. புதிய தொழில்நுட்ப மற்றும் வேலை உலகுக்குத் தேவையான அறிவு திறன்களை அடையத்தக்க வகையில் மூன்றாம் நான்காம் தேர்ச்சிகளின் கீழ் தேர்ச்சி மட்டங்கள் உருவாக்கப்பட்டன. மாதிரியுருக்கள் ஆக்குவதன் மூலம் முப்பரிமாண இயல்பு பற்றிய எண்ணக்கருவை மேலும் தெளிவாக முன்வைப்பதற்காக ஐந்தாவது தேர்ச்சியின் கீழ் தேர்ச்சி மட்டங்கள் உருவாக்கப்பட்டன. கலை வரலாறு மற்றும் இரசனை தொடர்பாக அறிவை வழங்குவதற்காகவும் பல்வேறு படைப்புக்களைக் கற்றல் மூலம் பெற்ற அறிவைப் பயன்படுத்துவதற்குச் சந்தர்ப்பமளிப்பதற்காகவும் ஆறாம், ஏழாம் தேர்ச்சிகளின் கீழ் தேர்ச்சி மட்டங்கள் உருவாக்கப்பட்டன.

## தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபருக்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

I. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும், இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

II மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

III. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

IV. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்

V. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

VI. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தி.

VII. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

VIII. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

### I. தொடர்பாடல் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப்பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

### II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

### III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.

பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.

அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்

அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்

பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## சித்திரக்கலைப் பாடத்தின் குறிக்கோள்கள்.

1. சுற்றாடல் சார்ந்த நயப்பாற்றலை வளர்த்தல்.
2. ஆக்கச் சிந்தனையையும் ஆக்கியல் திறன்களையும் வளர்த்தல்.
3. வினைத்திறனான வாழ்க்கைக்குத் தேவையான திறன்களையும் மனப்பாங்குகளையும் வளர்த்தல்.
4. எமது நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பண்பாட்டுப் பெறுமானங்களின் தனித்துவத்தை இனங்காணுதலும் மதித்தலும்
5. திறனாய்வு ஆற்றலை வளர்த்தல்.
6. எதிர்கால வேலையுலகின் அறைகூவல்களை எதிர்கொள்ளத்தக்கவாறான ஆற்றல்களைக் கொண்ட சமநிலையான ஆளுமையை விருத்தி செய்தல்.

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 01 சூழல் சார்ந்த கருப்பொருள்களின் கீழ் சித்திரங்களை வரைவர். | 1.1 மனித, விலங்கு உருவங்களை உள்ளடக்கிய சூழலை விரிவாக ஆராய்ந்து சித்திரம் வரைவர். | • சூழலுடன் இணைந்த மனித விலங்குச் செயற்பாடுகள்.<br>• வெவ்வேறு சூழல்களின் தன்மை<br>• சித்திர அடிப்படைக் கோட்பாடுகளைப் பயன்படுத்துதல்.<br>• அளவும் கனவளவும்<br>• தூர நோக்கு<br>• முப்பரிமாண தன்மை<br>• அளவுத்திட்டம்<br>• சமனிலை<br>• உணர்வு வெளிப்பாடு<br>• ஆக்கபூர்வமான முழு நிறைவு<br>• வர்ணப் பயன்பாட்டின் வெவ்வேறு நுட்பமுறைகள்<br>• பல்வேறு படைப்பாக்கப் பாணிகள் | • சித்திரக் கலைக் கோட்பாடுகளைப் பயன்படுத்தி மனித, விலங்கு உருவங்களை உள்ளடக்கி, சித்திரங்கள் வரைவார்.<br>• கண்டிக்கலை, மலைநாட்டுப் பாரம்பரியக் கலை இயல்பு-களைப் பயன்படுத்திப் புதுமைப்பாடாக ஆக்கபூர்வமாகச் சித்திரங்களை வரைவார். | 16 |
| | 1.2 கண்டிக்கால மலைநாட்டுப் பாரம்பரிய ஓவியங்களின் பாரம்பரியமான கலைப் பண்புகளின் ஊடாக சித்திரம் வரைவார். | • பாரம்பரியமான சித்திரத் திரட்சிக் கோட்பாடுகளைப் பயன்படுத்தல்<br>– அளவுத்திட்டமும் கனவளவும்<br>– இருபரிமாண தன்மை<br>– சமனிலை<br>– வெளிப்பாட்டுத்திறன்<br>– ஆக்கபூர்வமான முழு நிறைவு<br>• கோடுகளைப் பயன்படுத்துதல்<br>• வர்ணப் பயன்பாடும் நுட்பமுறைகளும் (நீர் வர்ணம், பஸ்டல்)<br>• தளப் பயன்பாடு | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 2.0 சுற்றாடலில் காணப்படும் பொருள்களை திரட்டுச் சித்திரங்களாக வரைவர். | 2.1 இயற்கையான மற்றும் மனிதனாலாக்கப்பட்ட பொருள்களை அவதானித்து பருமட்டாக வரைவார். | • வெவ்வேறு இயற்கை மற்றும் மனிதனால் ஆக்கப்பட்ட பொருள்களைக் கோடுகள் சார்பாகக் கற்றல்.<br>– கோட்டின் பல்வகைமை<br>– ஒளியும் இருளும்<br>– முப்பரிமாண இயல்புகள்<br>• திரட்சிக்காக அடிப்படைக் கோட்பாடுகள் பயன்படுத்தல். | • இயற்கையான மற்றும் மனிதனால் ஆக்கப்பட்ட பொருள்களின் பல்வகைமையும் அவற்றின் தன்மையையும் நன்கு அவதானிப்பார்.<br>• தளத்துக்குப் பொருத்தமானவாறு அளவு ரீதியான மற்றும் தூரநோக்கு இயல்புகளைச் சரியாகப் பயன்படுத்தி, பொருட் கூட்டங்களை வரைவார். | |
| | 2.2 இயற்கை மற்றும் மனிதனாலாக்கப்பட்ட பொருள்களைத் திரட்சியாக வரைவார். | • அளவுத்திட்டமும் கனவளவும்<br>– தூரநோக்கு<br>– முப்பரிமாண இயல்புகள், ஒளியும் இருளும்<br>• சமனிலை<br>• தளத்தைப் பயன்படுத்துதல்.<br>• மேற்பரப்பின் தன்மை (இழையமைப்பு)<br>• வர்ண பயன்பாடும் நுட்பமுறைகளும்<br>– நீர்வர்ண<br>– பஸ்ரல்<br>– அக்கிரலிக்கு | • வெவ்வேறு நிற ஊடகங்களுக்குப் பொருத்தமான நுட்பமுறைகளைப் பயன்படுத்திப் பொருட்களின் முப்பரிமாண இயல்புகளும், தன்மைகளும் வெளிப்படுமாறு வர்ணந்தீட்டுவார்.<br>• வர்ணதீட்டும் சுயாதீன நுட்பமுறைகளைச் சிறப்பானவாறு பயன்படுத்துவார்.<br>• கோட்பாட்டறிவு சார்ந்த பாட விடயங்களை நடைமுறையிலும் சரியாகவும் பயன்படுத்தி ஆக்கம் புரிவார்.<br>• நியமமான மதிப்பீட்டு நியமங்களைக் கருத்திற் கொண்டு படைப்புக்களை மதிக்கவும் நயக்கவும் முற்படுவார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 3.0 பயன்பாட்டுத் தேவைகளுக்காக ஆக்கம் புரிவர். | 3.1 புதிய திட்ட எண்ணக்கருக்களை பயன்படுத்தித் தேவைகளுக்காகப் புதிய பாவனைப் பொருள் -கள் ஆக்குவர். | • பயன்பாட்டுத் தேவைகள்<br>• திட்ட எண்ணக்கருக்கள்<br>• விருத்தி செய்யப்பட்ட உருவங்கள்<br>• முப்பரிமாண, இருபரிமாணத் திட்டங்கள்<br>– பதாதைகள்<br>– விளக்குகள் | • பண்டங்கள், அலங்கார ஆக்கங்களுக்காக புதிய திட்டங்களையும் எண்ணக்கருக்களையும் பயன்படுத்துவார்.<br>• இயற்கை சூழல் சார்ந்த ஆக்கங்கள் புரிவார்.<br>• நாளாந்த வாழ்க்கையில் அடக்கத்துடன் செயற்படுவார்.<br>• தம்மிடம் ஒப்படைக்கப்படும் வேலைகளை ஒழுங்காகப் பூர்த்தி செய்வார். | 12 |
| | 3.2 புதிய திட்ட எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி, பயன்பாட்டுத் தேவைக்களுக்கான பரந்த அலங்கரிப்புக்கள் ஆக்குவர். | • அலங்கரிப்பு அலகுகள்<br>• இரு பரிமாணத் திட்டங்கள்<br>• வர்ணங்கள்<br>• சமனிலை<br>• சந்தம்<br>• ஒருமைத்தன்மை<br>• துணி அலங்கரிப்பு<br>– சிறுவரின் தேவைகள்.<br>– வளர்ந்தோரின் தேவைகள். | | |
| | 3.3 இயற்கை உருவங்களையும். வர்ணங்களையும் பயன்படுத்தி, பாவனைப் பொருள்களையும் அலங்கரிப்புக்களையும் அமைப்பர். | • பயன்பாட்டுப் பாவனைப் பொருள்கள்<br>• இயற்கை உருவங்கள்<br>– ஆக்கபூர்வமான திட்டங்கள்<br>– ஆக்கபூர்வமான அலங்கரிப்பு அலகுகள்.<br>• இயற்கை உருவங்களுக்கான நிறங்களைப் பயன்படுத்துதல்<br>– குறித்த வர்ணத்திட்டம்<br>– மலர்கள் இலைகளைக் கொண்ட அலங்காரங்கள்<br>– மின்விளக்கு மறைப்புகள் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 4.0 உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக கிறபிக் ஆக்கங்கள் படைப்பர். | 4.1 வெவ்வேறு உற்பத்திகள் மற்றும் சேவைகளை விளம்பரப்படுத்துவதற்கான கிறபிக் ஆக்கங்கள் படைப்பர். | • தேவை<br>• திட்டம்<br>• அச்சிடுவதற்கு பொருத்தப்பாடு<br>• உட்பொதிந்த அர்த்தம்.<br>• ஆக்கபூர்வமான எழுத்துக்கள்<br>• வர்ண ஊடங்கள்<br>– பெயர்ச்சுட்டிகள் (லேபல்)<br>– சுற்றுறைகள்<br>– இலச்சினைகள்<br>– சுவரொட்டிகள்<br>– அழைப்பிதழ்கள் | • வெவ்வேறு உற்பத்திப் பொருட்களையும் சேவைகளையும் விளம்பரப் படுத்துவதற்காக அச்சிடுவதற்குப் பொருத்தமான ஆக்கபூர்வமான செய்திகள் அடங்கிய பெயர்ச்சுட்டிகள், சுற்றுறைகள், இலச்சினைகள், சுவரொட்டிகள் அழைப்பிதழ்கள் படைப்பார் | |
| | 4.2 பாடலுக்கு கவிதைக்குப் பொருத்தமான ஒப்புச் சித்திரங்கள் படைப்பர். | • ஒப்புச் சித்திரத்தின் இயல்புகள்<br>– ரேகையாக்கம்<br>– தளவுரு முகங்கள்<br>– வர்ணங்கள் | • பாடல்கள், கவிதைகளுக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டுச் சித்திரங்கள் வரைவார். | |
| 5.0 வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவர். | 5.1 ஆக்கபூர்வமான தள உருவங்களைப் பயன்படுத்தி புடைப்புச் செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார். | • ஆக்கபூர்வ தள உருவங்களைப் பயன்படுத்தி புடைப்புச் செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குதல்.<br>– வெவ்வேறு ஊடகங்கள்.<br>– பொருத்தப்பாடு<br>– திரட்சி<br>– ஆக்கபூர்வத்தன்மை | • ஆக்கபூர்வமான தளவடிவங்களைச் சேர்மானஞ் செய்து படைப்புச் செதுக்கல்கள் படைப்பார்.<br>• படைப்பாக்கத்துக்காக வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்துவார். | 06 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 5.2 உருவமைத்தல் நுட்பமுறைகளைப் பயன்படுத்தி மனிதத் தலை ஆக்குவார். | • மனிதத் தலை ஆக்குதல்<br>– வெவ்வேறு ஊடகங்கள்.<br>– பொருத்தப்பாடு<br>– திரட்சி<br>– ஆக்கபூர்வத்தன்மை | • உருவமைக்கும் நுட்பமுறைகளைப் பயன்படுத்துவார்.<br>• நுட்பமுறைகள் தொடர்பான விளக்கத்துடன் மனிதத் தலையொன்றினை ஆக்குவார்.<br>• படைப்பாக்கத்தின் போது ஊடகங்கள் தொடர்பான விளக்கத்துடன் செயற்படுவார். | |
| 6.0 சமய பண்பாட்டு அம்சங்கள், உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புல கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளை சுய படைப்பாக்கத்துக்க -ாகப் பயன்படுத்துவார். | 6.1 தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் ஆக்கங்களை நயப்பர். | • கருப்பொருள், கலைப்பாங்கு, ஊடகமும், நுட்பமுறைகளும், உணர்வு வெளிப்பாடு, திரட்சிமுறை, கலைப் பண்புகள் ஆகியவற்றைக் கற்றல்<br>• எம்.சார்ளிஸ்<br>– சித்தார்த்தகுமாரனும் மகா பிரஜாபதி கோத்தமியும்<br>– மலர் மீது (பியும்பிட்ட ) வருகை<br>• சோலியஸ் மென்டிஸ்<br>– ஹேமமாலாவும் தந்த குமாரனும் தந்ததாதுவைக் கொண்டு வருதல்.<br>– சங்கமித்திரை ஸ்ரீ மகா போதிமரக் கிளையைக் கொண்டுவருதல்.<br>• ஜோர்ஜ் கீற்<br>– மார யுத்தம் (பொரல்லை ) கோதமி விகாரை)<br>– நாயிகா சித்திரங்கள் | • சமயக் கருப்பொருள்களைக் கொண்ட நவீன சுதேச கலைஞர்களின் படைப்புக்களின் சிறப்புக்களை விவரிப்பார்.<br>• அச்சமயக் கலைப் படைப்புக்களுக்கு ஏதுவாக அமைந்த செல்வாக்குகளை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்வார்.<br>• புதிய சமயச் சித்திரப் பாரம்பரியங்களின் அடிப்படை அம்சங்களையும் கோட்பாடுகளையும் விவரிப்பார்.<br>• சுயபடைப்பாக்கத்துக்காகச் செல்வாக்குப் பெறுவார். | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • டேவிட் பெயின்டர்<br>– சீடர்களின் பாதந்தோய்த்தல்<br>– வெற்றிகரமாக ஜெரூசலத்தினுள் நுழைதல<br>• துரை சுவாமி<br>-கூவும் சேவல்<br>-விநாயகர்<br>(சட்டநாதர் கோயில்)<br>பெ.சுப்பிரமணியம் (மணியம்)<br>• காவிரியின் தோற்றம்<br>(கைலாசபிள்ளையார் கோவில்(நல்லூர்)<br>-வள்ளியை யானை துரத்துதல்<br>(பரராசசேகரப்பிள்ளையார் கோவில் (இணுவில்)<br>. | | |
| | 6.2 தெரிவு செய்த, வெளிநாட்டு கலைஞர்களின் கலைப் படைப்புகளை நயப்பர். | • விடயப்பொருள், கலைச் செல்வாக்கு (பாணி) ஊடகம், நுட்பமுறைகள், உணர்வு வெளிப்பாடு, சித்தரிப்பு முறை, கலைப்பண்புகள் ஆகியவற்றை ஆராய்தல்.<br>• லியனாடோ டாவின்சி<br>– குன்றின் உச்சியில் தேவமாதா<br>– இறுதி இராப்போசனம்<br>– மொனாலிசா<br>• மைக்கல் ஆஞ்சலோ<br>– ஆதாமைப்படைத்தல்<br>– இறுதித் தீர்ப்பு<br>– பியெட்டா<br>டேவிட்<br>• ர.ஃபாயல் சன்ரினோ<br>– ஏதன்ஸ் பாடசாலை<br>– மேரி மாதாவை சிம்மாசம் ஏற்றுதல்.<br>– குழந்தை சார்ந்த ஜோன், பாலகன் இயேசு, மேரி, மாதா | • மறுமலர்ச்சி கலைப் படைப்புகளுக்காகச் செல்வாக்குச் செலுத்திய சமூக பின்னணியை விவரிப்பார்.<br>• மறுமலர்ச்சிக் கலைஞர்களின் கலைப் படைப்புக்களை ஒப்பீட்டு ரீதியில் பகுப்பாய்வார் | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| 7.0 வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றுதட கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார். | 7.1 கம்பளைக் கால கட்டட நிர்மாணங்கள், சித்திரங்கள், சிலைகள் செதுக்கு வேலைப்பாடுகளைக் கற்பர். | • வரலாற்றுப் பின்னணி, கருப்பொருள், கலைப்பாங்கு, தாக்கம், ஊடகம், நுட்பமுறைகள் கலைப் பண்புகள் ஆகியவற்றைக் கற்பார்.<br>• கடலாதெனிய விகாரை<br>• லங்காதிலக்க விகாரை<br>• கட்டட நிர்மாணம்<br>• செதுக்கல் வேலைப்பாடுகள்<br>• சுவரோவியங்கள்<br>• சிற்பங்கள்<br>• படைப்பாக்கக் கலைஞர்கள்<br>- கணேஷ்வராச்சாரியர்.<br>- ஸ்தபதிராயர்<br>• எம்பக்கைத் தேவலாயம்<br>• கட்டட நிர்மாணம்<br>• செதுக்கல் வேலைப்பாடுகள்<br>• படைப்பாக்கக் கலைஞர்கள்<br>- தெல்மட மூலாச்சாரி | • கம்பளைக் கால கட்ட நிர்மாணம், சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கு வேலைப்பாடுகள் வரலாற்றுத் தகவல்களை விவரிப்பார். | |
| | 7.2 கண்டிக் கால மலை நாட்டுப் பாரம்பரிய கட்டடக் கலைப் படைப்புக்கள், சித்திரங்கள், சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகளைக் கற்பர். | • வரலாற்றுப் பின்னணி, கருப்பொருள், கலைப்பாங்கு, ஊடகம், நுட்பமுறைகள் கலைப் பண்புகள் ஆகியவற்றைக் கற்பார்.<br>• தலதா மாளிகை,<br>• மதவளை ரம்பிட்டை விகாரை,<br>• தெகல்தொறுவை ரஜமகா விகாரை,<br>• தம்புள்ளை விகாரை,<br>• கட்டட நிர்மாணம்<br>• செதுக்கல் வேலை | • கண்டிக்கால மலைநாட்டுப் பாரம்பரிய கட்டட நிர்மாணம் சித்திர சிற்ப செதுக்கு வேலைப்பாடுகளின் சிறப்புக்களை இனங்காண்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | | • சுவரோவியங்கள்<br>• சிற்பங்கள்<br>• ஆக்கக் கலைஞர்கள்<br>– நிலகம ஜீவன் நைதே உட்பட அவ்வழிவந்த கலைஞர்கள் (தம்புள்ளை)<br>– தெவரகம்பொல சில்வத்தனை (தெகல்தொறுவை)<br>– தேவேந்திர மூலாச்சாரி (பத்திரிப்பு) | • அவற்றைக் கொண்டு படைப்பாக்கம் புரிவார். | |
| | 7.3 இந்து நதிக் கரைக் காலத்தைச் சேர்ந்த கலைப் படைப்புக்களைக் கற்பார். | • வரலாற்றுப் பின்னணி, கருப்பொருள், கலைப்பாங்கு, ஊடகம், நுட்பமுறைகள்<br>– கட்டட நிர்மாணம்<br>• உள் நகரம்<br>• வெளி நகரம்<br>– சிற்பங்கள்<br>• பூசகர் உருவம்<br>• நாட்டிய மாடும் பெண்<br>• கவந்தஉருவம் (முண்டப்படிமம்)<br>–<br>• பசுபதி<br>• ரிஷப உருவம் | • இந்து நதிக்கரைக் காலத்தைச் சேர்ந்த கலைப்படைப்புக்களின் சிறப்பான கலைப் பண்புகளைக் விவரிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளை |
|---|---|---|---|---|
| | 7.4 எகிப்திய, கிரேக்க கலைப்படைப்புக்களை கற்பர். | • வரலாற்றுப் பின்னணி, கருப்பொருள், கலைப்பாங்கு, ஊடகம், நுட்பமுறைகள், கலைப் பண்புகள் ஆகியவற்றைக் கற்பார்.<br>• எகிப்திய சிற்பங்கள்<br>– நெ.்.பர்டிட் (NEFERTITI)<br>– எழுதுநர் (SCRIBE)<br>– ஸ்பிங்க்ஸ் (SPHINX)<br>• எகிப்திய சித்திரங்கள்<br>– மீடமின் வாத்துக்கள் (GEESE of MEDUM)<br>– பறவை வேட்டை (FAWILING SCENE)<br>• கிரேக்கச் சிற்பங்கள்<br>– வீனஸ் டி மெலோ (VENUS DE MELOS)<br>– பரிதிவட்டம் எறிபவன் (DISCOBODLUS)<br>– ஹர்மீஸ், டயோனீசஸ் (HERMES AND DIONESUS)<br>– அத்தீனா தேவதை (ATHENAPATHENON)<br>– லஒகூன் (LAOCOON) | • எகிப்திய கிரேக்க கலைப்படைப்புக்களின் சிறப்புக்களை ஒப்பீட்டு ரீதியில் பகுத்தாய்வார். | |

# கற்றல் - கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்.

**தேர்ச்சி 1.0** : சூழல் சார்ந்த கருப்பொருள்களின் கீழ் சித்திரங்களை வரைவார்.

**தேர்ச்சி மட்டம் 1.1** : மனித, விலங்கு உருவங்களை உள்ளடக்கிய சூழலை விரிவாக ஆராய்ந்து சித்திரம் வரைவார்.

**செயற்பாடு** : " மீனவர் வாழ்க்கையை நோக்குவோம்."

**பாடவேளை** : 2

**கற்றற் பேறுகள்:**
- மீனவர் சமுகத்தினரின் வாழ்க்கை முறையை விபரித்துக் கூறுவார்.
- மீனவர்கள் தமது வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்களை விபரிப்பார்.
- மீனவர்களது வாழ்க்கையைப் பற்றிப் பரிவுடன் பேசுவார்.
- மீனவர்களின் வாழ்க்கை முறையை உணர்வு பூர்வமாகச் சித்திரமாக வரைவார்.
- வரைந்தவற்றை இரசித்து நயப்பார்.

**தர உள்ளீடு:**
- மீனவரின் செயற்பாடுகளைக் காட்டும் உருவப் படங்கள், சித்திரங்கள்.
- பாடவிருத்திக்குத் தேவையான பொருட்கள், உபகரணங்கள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படிமுறை 1.1.1.1**
- மீனவர் பாடலொன்றைச் செவிமடுக்கச் செய்து பாடத்தில் பிரவேசிக்குக.
- மீனவர் எதிர்நோக்கும் சவால்களைப் பற்றிக் கலந்துரையாடுக.
  சூழலின் அமைப்பு - வீடுகள், ஆடையணிகள், உபகரணங்கள்.
- பலமெய் நிலைகள், உணர்வுகள், செயற்பாட்டு முறைகள் என்பன பற்றியும் கலந்துரையாடுக.
- மீனவரது நாளாந்த வாழ்க்கைச் சம்பவங்களைக் காட்டும் வகையிற் சித்திரங்கள் வரையலாம் என்பதை வலியுறுத்துங்கள்.

(05 நிமிடம்)

**படிமுறை 1.1.1.2**
- மீனவர் வாழ்க்கையுடன் தொடர்புள்ள காட்சியொன்றைச் சித்திரமாக வரைய அறிவுறுத்துக.
- உபகரணங்களைச் சரியாகப் பாவிக்க வழிகாட்டுக.
- உபகரணங்களை, வாழ்க்கையுடன் தொடர்புள்ள காட்சியொன்றின் பருமட்டான படத்தை வரையச் செய்க.
- பொருத்தமான நுட்பமுறையைப் பயன்படுத்தி தொகுத்த சித்திரத்தை வர்ணம் தீட்டுக.
- சித்திரக் கோட்பாடுகளைப் பயன்படுத்துவது தொடர்பாக அறிவூட்டல் செய்க.

(60 நிமிடம்)

**படிமுறை 1.1.1.3**
- எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட சித்திரங்களைக் காட்சிப்படுத்துக.
- சுயமதிப்பீடு செய்ய வாய்ப்பளிக்குக.
- நிர்மாணங்கள் சிறப்புடன் அமையத் தேவையான கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- காட்சிப்படுத்திய சித்திரங்களில் காணப்படும் சித்திரக் கோட்பாடுகள் பற்றிச் சுருக்கமான கருத்தைத் தெரிவிக்க.

prof 4

(15 நிமிடம்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடாத்துங்கள்.

- மீனவர் வாழ்க்கையின் பல நிகழ்வுகளைப் பற்றிப் பேசுதல்.
- தனக்கு விருப்பமான காட்சியொன்றை வரையத் தெரிவு செய்தல்.
- கோட்பாடுகள் வெளிப்படும் விதத்தில் சித்திரத்தை நிர்மாணித்தல்.
- மற்றையவர்களின் ஆக்கங்களை இரசித்து நயத்தல்.

**கீழே உள்ள தலைப்புகளின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்க.**

| | | |
|---|---|---|
| 1.1.2 | சுதந்திரமாகத் திரியும் காட்டு மிருகங்கள். | - 2 பாடவேளைகள் |
| 1.1.3 | பிரியமான சம்பாஷனை ஒன்று. | - 2 பாடவேளைகள் |
| 1.1.4 | கிராமிய விளையாட்டொன்றின் உள்ளங்கவர்ந்த சந்தர்ப்பமொன்று. | - 2 பாடவேளைகள் |
| 1.1.5 | சனநெருக்கமான வீதியொன்று | - 2 பாாடவேளைகள். |

prof 4

**தேர்ச்சி 1.0** : சூழல் சார்ந்த கருப்பொருள்களின் கீழ் சித்திரங்களை வரைவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2** : கண்டிக்கலை மலை நாட்டுப் பாரம்பரிய ஓவியங்களின் பாரம்பரியமான கலைப்பண்புகளின் ஊடாக சித்திரம் வரைவார்.

**செயற்பாடு 1.2.1** : “ சமயக் கிரியைகளில் ஈடுபட்டிருக்கும் பக்தர்கள்.”

**பாடவேளைகள்** : 3

**கற்றற் பேறுகள்:**

- பல இன மக்களின் சமயங்களுடன் தொடர்புள்ள நிகழ்வுகள், சூழல் நிலைமைகள் பற்றி விளக்குவார்.
- சமயக் காரியங்களில் அணியப்படும் ஆடை, ஆணிகள் மக்களின் இனத்துக்கேற்ப வேறுபடுகிறதெனக் கூறுவார்.
- சமயக் காரியங்களைக் காட்டும் காட்சிகளைப் பாரம்பரியச் சித்திரங்களுக்கு ஒத்ததாக வரையலாம் என ஏற்றுக்கொள்வார்.
- கண்டிக் காலத்து சித்திரங்களுக்கு ஒத்தபாணியில் சித்திரங்களை வரைவார்.
- சித்திரங்களை இரசித்து நயப்பார்.

**தர உள்ளீடுகள்:**

- வெவ்வேறு சமயக் கிரியைகளைக் காட்டும் சித்திரங்கள்.
- கண்டிக் காலத்து மலை நாட்டுப் பாரம்பரியத்தின் விகாரை ஓவியங்கள் அடங்கிய மாதிரிச் சித்திரங்கள்.
- பாட அபிவிருத்திக்குதவும் கட்புல, செவிப்புல ஊடகங்கள் (உபகரணங்கள்)
- இணைப்பு 1.2.1க்குரிய ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகள்.

**செயற்பாட்டைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படிமுறை 1.2.1.1**

- உமது பாடசாலை மாணவர்கள் வழிபடும் ஒரு மதத்துக்குரிய சின்னத்தை வகுப்பில் காட்சிப்படுத்தி பாடத்துள் பிரவேசிக்க. (இந்நிகழ்வு எந்த மதத்தினரையும் புண்படுத்தாதவாறு பார்த்துக் கொள்க.)
- பல விதமான மத வழிபாடுகளைச் சித்தரிக்கும் மாதிரிப் படங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக. அவற்றில் உள்ள மனிதர்களின் மெய்நிலைகள், அணிந்திருக்கும் ஆடையணிகள், அலங்கரிக்கப்பட்டிருக்கும் விதம், சூழல் நிலை, பின்னணி என்பவற்றில் அவதானம் செலுத்த வைக்க.
- கண்டிக் காலத்து மலைநாட்டுப் பாரம்பரிய முறையில் வரையப்பட்ட விகாரை ஓவியங்களைக் காண்பித்து அவற்றின் சிறப்புத்தன்மை, கலாசார முக்கியத்துவம் என்பன பற்றிக் கலந்துரையாடுக
    - சித்திரக் கோட்பாடு (கண்டிக் காலத்து மரபுச் சித்திரங்கள்)
    - இரேகைகளும் வர்ண உபயோகமும்
    - ஆடையணிகள்
    - அலங்கார வடிவங்கள்
- இணைப்பு 1.2.2க்குரிய உருவப் படங்களைப் பயன்படுத்துக.

(15 நிமிடங்கள்)

prof 4

**படிமுறை 1.2.1.2**

- இணைப்பு 1.2.1.1க்குரிய ஆய்வுச் செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவங்களின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- சித்திரம் வரையத் தேவையான உபகரணங்களை பாவிக்கும் முறை பற்றி அறிவுறுத்துக.
- மத வழிபாடுகளுடன் தொடர்பான காட்சிகளைச் சித்தரிக்கும் மாதிரிச் சித்திரங்களை காட்சிப்படுத்துக.
- கண்டி காலத்து மலைநாட்டுப் பாரம்பரிய முறையில் வரையப்பட்ட சித்திரங்களின் மாதிரிகளை காட்சிப்படுத்துக.
- மாதிரிச் சித்திரங்களுக்கு ஒத்ததாக உமது உள்ளத்தைக் கவர்ந்த மத வழிபாட்டுடன் தொடர்பான காட்சியொன்றைப் பென்சிலால் வரையச் செய்க.
- பென்சிலால் வரையப்பட்ட சித்திரத்தைக் கண்டிக் காலத்து மலையகப் பாரம்பரிய முறைக்கேற்ப வர்ணம் தீட்ட வழிகாட்டுக.
- வரையப்பட்ட சித்திரங்களை வகுப்பில் காட்சிப்படுத்த ஏற்பாடுகள் செய்க.

(90 நிமிடங்கள்)

**படிமுறை 1.2.1.3**

- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சுய மதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்க.
- நிர்மாணித்தவை சிறப்புடன் அமைய வேண்டிய கருத்துக்கள் புலப்படுமாறு கலந்துரையாடுக.

(05 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- பலவிதமான மதங்களுடன் தொடர்பான நிகழ்வுகளைக் குறிப்பிடுதல்
- பாரம்பரிய சித்திர முறையினைப் போணிக்காத்தல் அவசியம் என ஏற்றுக்கொள்ளுதல்.
- கண்டிக் காலத்து மலைநாட்டுப் பாரம்பரிய முறையில் சித்திரங்களை வரைதல்.
- சித்திரங்களை இரசித்து நயத்தல்
- பாரம்பரிய முறையில் வரையப்பட்ட சித்திரங்களினால் பெற்ற அறிவினைத் தேசிய சர்வதேச சித்திரப் போட்டிகளில் பயன்படுத்துதல்.

இணைப்பு 1.2.1.1

## ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம் :

- வகுப்பில் காட்சிப்படுத்தும் மத வழிபாடுகளுடன் தொடர்பான நிகழ்வுகளைச் சித்தரிக்கும் சித்திரங்களை நோக்குக.
- அவற்றில் காணப்படும் சம்பவங்கள், மனித மெய்நிலைகள், பண்புகள், பௌதீகச் சூழல் என்பவற்றை நோக்குக.
- கண்டிக் காலத்து மலைநாட்டுப் பாரம்பரிய முறையில் வரையப்பட்ட மாதிரிச் சித்திரங்களுக்கு ஒத்ததாக தெரிவு செய்யப்பட்ட தலைப்புக்குப் பொருந்தும் காட்சியைச் சித்திரமாக வரைக.
- சித்திரத்தைக் கண்டிக் காலத்துப் பாரம்பரிய முறைக்கு ஒத்த பாணியில் இருக்குமாறு வர்ணம் தீட்டுக.
- நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

prof 4

**கீழே உள்ள தலைப்பின் கீழ் மேல் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்க.**

1.2.2 செழிப்பான பூமியும் உழவனின் கரங்களும் 3 பாடவேளைகள்.

**தேர்ச்சி 2.0** : சுற்றாடலில் காணப்படும் பொருள்களை திரட்டுச் சித்திரங்களாக வரைவார்.

**தேர்ச்சி மட்டம் 2.1** : இயற்கையான மற்றும் மனிதனாலாக்கப்பட்ட பொருட்களை அவதானித்து பருமட்டாக வரைவார்.

**செயற்பாடு 2.1.1** :
- சதுரமுகி வடிவமான ஒரு பொருள், வாளியொன்று கண்ணாடிப் போத்தல் ஒன்று, செவ்விளநீர் ஒன்று இவற்றை ஒழுங்கிணைத்துச் சித்திரமாக வரைவோம். கோட்டுச் சித்திரங்களை வரைவோம்.

**பாடவேளை** : 2

## கற்றற் பேறுகள்:
- ஒருங்கிணைத்த பொருள்களின் மேற்பரப்புத் தன்மை, அமைப்பு என்பவற்றின் வேறுபாட்டை விளங்கிக் கூறுவார்.
- பரிமாணத்துடன் தளத்தைச் சரியாகப் பயன்படுத்தி பொருட் தொகுதியை வரைவார்.
- சித்திரக் கோட்பாடுகளுக்கமைய இவற்றை தளத்தில் இரேகைகளால் வரைவார்.
- பலவகைப் பென்சில்களைப் பாவித்து இரேகைகளின் பண்புகள் சரியாக வெளிப்படும் விதத்தில் பொருட்தொகுதியை வரைவார்.
- மற்றவர்களது நிர்மாணங்களை இரசித்து நயப்பார்.

## தர உள்ளீடு:
- சதுரமுகி வடிவமான ஒரு பொருள்.
- ஒரு வாளி.
- ஒரு கண்ணாடிப் போத்தல்.
- ஒரு செவ்விளநீர்.
- பொருள்களை வைக்கப் பொருத்தமான பலகை ஒன்று.
- வரைதற் தாள்கள்
- 2B, 3B, 4B, 6B வகைப் பென்சில்கள்.
- இணைப்பு 2.1.1.1க்குரிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:
## படிமுறை 2.1.1.1
- பொருள்த் தொகுதியைச் சகல மாணவரும் பார்வையிடக் கூடிய விதத்தில் கண் மட்டத்துக்குக் கீழே வைக்க.
- அவற்றில் காணக்கூடிய பல்வேறுபட்ட இயல்புகளைப் பற்றிக் கவனம் செலுத்தவைக்க.
- பொருள்களின் பண்புகள், ஊடுருவித் தெரியும் தன்மை, பளபளக்கும் தன்மை பற்றிக் கலந்துரையாடுக.
- தளத்தைச் சரியான விதத்தில் பயன்படுத்தும் முறை பற்றி விளக்குக.
- பொருள்களைப் பார்த்து வரையும் போது பின்பற்ற வேண்டிய சித்திரக் கோட்பாடுகள் பற்றிக் கலந்துரையாடுக.

prof 4
- பல்வகைப் பென்சில்களால் இரேகைகளின் தன்மையை வெளிப்படுத்தும் விதம் பற்றி விளக்குக.

(10 நிமிடங்கள்)

## படிமுறை 2.1.1.2

- இணைப்பு 2.1.1.1க்குரிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- வரைதற் தாள்கள், பென்சில் என்பன வழங்குக.
- செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- நிர்மாணிப்புக்களை வகுப்பில் முன்வைக்க.

(60 நிமிடங்கள்)

## படிமுறை 2.1.1.3

- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- குறை நிறைகளைக் காண்பித்து தேவையான முன்னூட்டல்களையும் பின்னூட்டல்களையும் வழங்குக.
- கீழே உள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி கலந்துரையாடலை நிகழ்த்துக.

பொருள்களின் வடிவம், அமைப்பு என்பன வேறுபடும் தன்மை பற்றி சிறந்த நிர்மாணிப்புக்காக பொருள்களை நன்றாக நோக்குதல் முக்கியம் என்பது பற்றியும், தூரதரிசனம், மேற்பரப்புத் தன்மை, முப்பரிமாணத் தன்மை என்பன இரேகைகளால் காட்டலாம் என்பது பற்றியும் வலியுறுத்துதல்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- பொருள்களின் தன்மை வேறுபாட்டை விபரித்துக் கூறுதல்.
- இரேகைகள் மூலம் பொருள்களின் தன்மையைக் காட்டும் விதத்தை விளக்குதல்.
- பல வடிவம் கொண்ட பொருள்களை இரேகைகளால் வரைதல்.
- நோக்குவதன் மூலம் பொருள்களைத் தளத்தின் மீது ஒருங்கிணைத்தல்.

இணைப்பு 2.1.1.1

## ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம் :

- உமக்கு முன்னால் வைக்கப்பட்ட பொருள்களை நன்றாக நோக்குக.
- அவற்றின் வடிவம் அமைப்பு மீது கவனஞ் செலுத்துக.
- ஒவ்வொரு பொருளினதும் வேறுபாட்டை அறிக.
- பரிமாணம், ஆழம், மேற்பரப்புத்தன்மை என்பன மீது கவனஞ் செலுத்துக.
- முப்பரிமாண இயல்பு, ஒளி இருள் வெளிப்பாடு குறித்துக் கவனஞ் செலுத்துக.
- உமது ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**கீழே உள்ள தலைப்பின் கீழ் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்க.**

2.1.2 ஒரு செங்கல், பூச்சாடி ஒன்றில் நடப்பட்ட ஒரு பூவுடனான அந்தூரியம் செடியொன்று, உரிக்காத தேங்காய் இவற்றை ஒங்கிணைத்து இரேகைகளால் வரைவோம்.

- 2 பாடவேளைகள்.

prof 4

**தேர்ச்சி 2.0** : சுற்றாடலில் காணப்படும் பொருள்களை திரட்டுச் சித்திரங்களாக வரைவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : இயற்கை மற்றும் மனிதனாலாக்கப்பட்ட பொருள்களைத் திரட்சியாக வரைவார்.

**செயற்பாடு 2.2.1** : கனவுரு வடிவமான பெட்டியொன்று, களி மண் பாத்திரத்தில் உள்ள அலரிப் பூங்கொத்து, உதைப்பந்து இவற்றை ஒழுங்கிணைத்து சித்திரம் வரைவோம்.

**பாடவேளைகள்** : 2

## கற்றற் பேறுகள்:

- பலகை மீது வைக்கப்பட்ட பொருள்களின் அமைப்பு மேற்பரப்புத் தன்மை ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றதெனக் கூறுவார்.
- அடிப்படையாகக் கோட்பாடுகளுக்கமைய ஒழுங்கிணைத்து பொருள்களை இலகுவில் வரையலாம் என ஏற்றுக்கொள்வார்.
- தளத்தைச் சரியாகப் பயன்படுத்தி ஒருங்கிணைத்த பொருள்களை வரைந்து வர்ணம் தீட்டுவார்.
- தன்னடக்கத்துடன் செயற்பாட்டில் ஈடுபடுவார்.
- அறிவுரைகளுக்கேற்பச் செயற்டுவார்.

## தர உள்ளீடு:

- கனவுரு வடிவமான பெட்டியொன்று.
- களி மண் பூச்சாடியொன்று.
- 5 இலைகளைக் கொண்ட தேமாப் பூங்கொத்து.
- உதைபந்து.
- இணைப்பு 2.2.1.1 க்குரிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தற் படிவத்தின் பிரதிகள்.
- சித்திரம் வரைவதற்குத் தேவையான பொருட்கள்.
- பொருள்களை ஒருங்கிணைத்து வரைந்த மாதிரிச் சித்திரங்கள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

### படிமுறை 2.2.1.1

- பொருள்களை ஒருங்கிணைத்து கண்மட்டத்துக்குக் கீழே சகல மாணவரும் பார்வையிடக் கூடிய விதத்தில் வைக்க.
- அவற்றின் பல்வேறுபட்ட பண்புகள், அளவுகள் பற்றி மாணவரிடம் வினவுக.
- தளத்தைச் சரியாக உபயோகித்து பொருள்களின் பண்பு, மேற்பரப்புத் தன்மை, அளவிடை, அமைப்பு என்பவை வெளிப்படும் விதத்தில் வரையப்பட்டுள்ள விதத்தினை மாதிரிச் சித்திரங்களைக் காண்பித்து உரையாடுக.
- வெவ்வேறு வகையான பென்சில்களை உபயோகித்து பொருள்களின் தன்மையை செம்மையாகக் காட்டலாம் என்பது பற்றி கலந்துரையாடுக.

(10 நிமிடங்கள்)

### படிமுறை 2.2.1.2

prof 4

- இணைப்பு 2.1.3.1 க்குரிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- வரைதற் தாள்கள், பெஸ்டல் /நீர்வர்ணம், தூரிகை, நீர், வர்ணம் கலக்கப் பொருத்தமான உபகரணங்கள் என்பவற்றை மாணவர்களுக்கு வழங்குக.
- மாணவர்களை செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

- தேவையான அறிவுரைகளையும் வழிகாட்டல்களையும் வழங்குக.
- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(60 நிமிடங்கள்)

## படிமுறை 2.2.1.3

- பூரணப்படுத்தியவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சுய மதிப்பீட்டிற்கு வாய்ப்பளிக்க.
- குறை நிறைகளைக் காண்பித்து தேவையான முன்னூட்டல்களையும் பின்னூட்டல்களையும் வழங்குக.
- தளத்தைச் சரியாகப் பயன்படுத்துதல், பரிமாணம், பின்னணி, ஒளி நிழல் காட்டல், வர்ண உபயோகம், தூர தரிசனம், முப்பரிமாணத்தன்மை என்பவற்றை விளக்கிக் கலந்துரையாடுக.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- பொருள்களினதும் பூங்கொத்தினதும் பண்புகளை விளக்குதல்.
- பரிமாணத்துக்கேற்ப வைக்கப்பட்டிருக்கும் பொருட் தொகுதியை வரைதல்.
- இரேகைகள், வர்ணங்கள் மூலம் ஒளி நிழல், முப்பரிமாணத்தன்மையைச் சரியாகக் காட்டுதல்.
- வர்ணத்தை உபயோகித்து ஊடுருவித் தெரியும் விதத்தில் வர்ணம் தீட்டுதல். வர்ணம் தீட்டும் போது பல நுட்பமுறைகளைப் பயன்படுத்துதல்.
- மற்றவர்களது ஆக்கங்களை இரசித்து நயத்தல்.

இணைப்பு 2.2.1.1

## ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம் :

- உமக்கு முன்னால் வைக்கப்பட்ட பொருள்களை நன்றாக நோக்குக.
- பொருள்கள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கும் விதத்துக்கேற்ப அவைகளின் கொள்ளளவு மீது கவனஞ் செலுத்துக.
- அவற்றின் அமைப்பு, பரிமாணம், தூரதரிசனம், முப்பரிமாணத் தன்மை, ஒளி நிழல், ஆழம் மேற்பரப்பின் அமைப்பு என்பன மீது கவனஞ் செலுத்துக.
- பொருட் தொகுதியை இரேகைகளால் வரைக.
- தளத்துக்குப் பொருந்தும் விதத்தில் பின்னணியை வர்ணம் தீட்டுக.
- உமது ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

**பின்வரும் தலைப்புக்களின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்.**

2.2.2 அகராதியைப் போன்ற பெரிய அளவிலான ஒரு புத்தகம், கண்ணாடிப் போத்தல் ஒன்றில் இடப்பட்ட செவ்வரத்தம் பூவுடனான சிறிய கிளையொன்று, பாப்பாசிக்காயொன்று இவற்றை ஒழுங்கமைத்துச் சித்திரமாக வரைவோம்.

prof 4

-02 பாடவேளைகள் -

2.2.3 கனவுரு வடிவான ஒரு பெட்டி, உருளை வடிவான பாத்திரமொன்றில் இடப்பட்ட அகன்ற இலைகளுடைய குறோட்டன் கிளையொன்று, உரிக்கப்பட்ட தேங்காயொன்று, ஒரு துணித்துண்டு இவற்றை ஒழுங்கமைத்துச் சித்திரமாக வரைவோம்.

- 02 பாடவேளைகள் -

2.2.4 கனவுரு வடிவான ஒரு பொருள், கூசா ஒன்றில் இடப்பட்ட பூங்கொத்து ஒன்று. பூசணிக்காய் அல்லது அதே வடிவமுடைய வேறு ஒரு காய் இவற்றை ஒருங்கிணைத்துச் சித்திரமாக வரைவோம்.

- 02 பாடவேளைகள் -

2.2.5 பிளாஸ்டிக் குவளை(ஜ்ழ), உருட்டப்பட்ட நிலையிலுள்ள கடதாசி, பழம் ஒன்று (தோடை, விளாம்பழம், அப்பிள்) சீத்தைத் துணித்துண்டு இவற்றை ஒருங்கிணைத்துச் சித்திரமாக வரைவோம்.

- 02 பாடவேளைகள் -

2.2.6 கனவுரு வடிவமான ஒரு பொருள், கோளவடிவமான ஒரு பொருள், கண்ணாடிக் குவளை ஒன்றில் இடப்பட்ட ஏழிலைப் பாலைப் பூங்கொத்து ஒன்று, சீத்தைத் துணித்துண்டு இவற்றை ஒருங்கிணைத்துச் சித்திரமாக வரைவோம்.

- 02 பாடவேளைகள் -

prof 4

**தேர்ச்சி 3.0** : பயன்பாட்டுத் தேவைகளுக்காக ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 3.1** : புதிய திட்ட எண்ணக்கருக்களை பயன்படுத்தித் தேவைகளுக்காகப் புதிய பாவனைப் பொருள்கள் ஆக்குவார்.

**செயற்பாடு 3.1.1** : "விளக்கொன்று நிர்மாணிப்போம்."

**பாடவேளைகள்** : 02

## கற்றற் பேறுகள்:

- விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கும் பல்வேறுபட்ட சமய, கலாசார விழாக்களைப் பற்றி விபரித்துக் கூறுவார்.
- பலவித மூலப்பொருள்களால் நிர்மாணிக்கப்பட்ட விளக்குகள் பயன்படுத்துவதை ஏற்றுக்கொள்வார்.
- தனக்கு விரும்பிய ஒரு மூலப்பொருளைப் பயன்படுத்தி விளக்கொன்றை நிர்மாணிக்க திட்டமிடுவார்.
- மூலப்பொருள், கலைத்தன்மை, நிகழ்வுக்குப் பொருந்தும் தன்மை என்பவற்றைக் கவனித்து, விளக்கொன்றை வரைந்து காட்டுவார்.
- நிர்மாணிப்பை இரசித்து நயப்பார்.

## தர உள்ளீடு:

- சிறிய தேங்காய் எண்ணெய் விளக்கு, தேங்காய் எண்ணெய்.
- பல வடிவங்களைக் கொண்ட விளக்குகளைச் சித்தரிக்கும் ஒளிப் படங்கள்.
- சித்திரம் வரையத் தேவையான பொருட்கள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

## படிமுறை 3.1.1.1

- வகுப்புக்கு முன்னால் விளக்கொன்றை கொண்டு வந்து அதை மாணவர்களால் ஏற்றச் செய்க. அதை எல்லோரையும் அவதானிக்கச் செய்க.
- விளக்கேற்றப்படும் சமய கலாசார நிகழ்வுகளைப் பற்றிக் கலந்துரையாடுக.
- சம்பிரதாய முறைப்படி ஏற்றப்படும் விளக்குக்குப் பதிலாக நிர்மாணிக்கக் கூடியதொன்றைப் பற்றிக் கலந்துரையாடுக.
- விளக்கொன்றை நிர்மாணிக்கப் பயன்படுத்தக் கூடிய மூலப்பொருள்கள் எவையெனக் கலந்துரையாடுக.
- அவ்வாறு நிர்மாணிக்கத் திட்டமிடும் விளக்கொன்றின் படத்தை வரைந்து நிர்மாணிப்பு பற்றிய விளக்கத்தைப் பெறுக.

(15 நிமிடம்)

## படிமுறை 3.1.1.2

- திட்டமிட்ட விளக்கின் படத்தை வரைய மாணவர்களை வழிநடத்துக.
- ஊடகத்தைத் தெரிவு செய்யும் போது
    - ஊடகத்தின் சிறப்பியல்பு.
    - பாவனையின் பொருத்தப்பாடு.
    - உரிய நிகழ்வுக்குப் பொருந்தும் தன்மை.
    - இலகுவில் அமைக்கக் கூடியமை பற்றிக் கவனஞ் செலுத்துக.

prof 4

- விளக்கை அமைக்கத் திட்டமிடுகையில் கீழே உள்ள விடயங்களைக் கவனத்திற் கொள்க.
  - முன்புறத் தோற்றம், பக்கத் தோற்றம்.
  - நிகழ்வுக்குப் பொருந்தும் விதத்தில் இலகுவாக நிர்மாணிக்கக் கூடியமை.
  - தெரிவு செய்யப்படும் ஊடகத்துக்குப் பொருந்தும் அலங்கார வடிவங்களை இடுதல்.
  - எளிமையான தன்மை, இலகுவாகப் பாவிக்கக் கூடியமை.
- திட்டமிட்ட படத்தை வர்ணம் தீட்டும் போது கீழே உள்ள விடயங்கள் மீது கவனஞ் செலுத்துக.
  - தெரிவு செய்யப்பட்ட ஊடகத்துக்குப் பொருத்தமான அதன் தனித்துவத்தை பேணக்கூடிய வர்ணமாக இருத்தல்.
  - கவர்ச்சியான தோற்றம், புதியதான தோற்றம் பேணும் விதத்தில் அடிப்படைக் கோட்பாடுகளுக்குட்பட்டு இருத்தல்.

(90 நிமிடங்கள்)

## படிமுறை 3.1.1.3

- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சுய மதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்க.
- நிர்மாணிப்புகள் சிறப்பாக அமைய வேண்டிய கருத்துக்களை முன்வைக்க

**கீழே உள்ள விடயங்களை உள்ளடக்கிக் கலந்துரையாடலில் ஈடுபடுக.**

- நிர்மாணிப்பின் முன்புறத்தோற்றம், பக்கத் தோற்றம் என்பவற்றை வரைதலின் முக்கியத்துவம்.
- இயற்கையில் கிடைக்கக்கூடிய பல்வேறுபட்ட மூலப்பொருட்களைப் பாவித்து நிர்மாணிப்பதால் அழகு பேணப்படுவதோடு செலவும் குறைவாகும்.
- தனக்குள் இருக்கும் திறமைகளை கலையுணர்வுடனும் இரசனை உணர்வுடனும் வெளிப்படும் விதத்தில் நிர்மாணிக்கக் கூடியமை.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீடு, மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்.

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடாத்துங்கள்.

- விளக்கொன்றை கலையாக்கத்துடன் நிர்மாணிக்கப் பொருத்தமான மூலப்பொருட்களைக் குறிப்பிடுதல்.
- மூலப்பொருளின் தன்மை, பயன்பாடு, கலைப்பண்பு பாவனைத் தேவை என்பவற்றைக் கருதி விளக்கை நிர்மாணிக்கத் திட்டமிடுதல்.
- தனக்குள் இருக்கும் கலைத் திறமையை வாழ்க்கையின் வேறு தேவைகளுக்காகப் பயன்படுத்துதல்.
- வெவ்வேறு ஊடகங்களின் இயல்புகள் வெளிப்படுமாறு நிறந்தீட்டிப் பூர்த்தி செய்தல்.

**கீழே உள்ள தலைப்புக்களின் கீழ் செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்க.**

3.1.2 விழாக்களை அலங்கரிக்க உதவும் பதாதைகள் - 2 பாடவேளைகள் -

3.1.3 மின் விளக்கின் உறையொன்றை நிர்மாணிப்போம். (Lamp shades)
- 2 பாடவேளைகள் -

prof 4

**தேர்ச்சி 3.0** : பயன்பாட்டுத் தேவைகளுக்காக ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : புதிய திட்ட எண்ணக்கருக்களைப் பயன்படுத்தி, பயன்பாட்டுத் தேவைகளுக்கான பரந்த அலங்கரிப்புக்கள் ஆக்குவார்.

**செயற்பாடு 3.2.1** : "குழந்தையின் ஆடைக்குப் பொருத்தமான அலங்காரங்கள்."

**பாடவேளைகள்** : 2

**கற்றற் பேறுகள்:**

- அலங்கரிப்பு அலகுகளை ஆக்குவார்.
- பரவுருவ அலங்காரம் உருவாக்கும் விதத்தை விளக்குவார்.
- குழந்தைகளுக்குப் பொருத்தமாகத் திட்டமிடும் போது அவர்களுக்கேற்ப எளிய வடிவங்கள், இடப்படும் வர்ணங்கள் என்பன பற்றி விளக்குவார்.
- தன்னடக்கத்துடன் காரியத்தில் ஈடுபடுவார்.
- நிர்மாணிப்புக்களை இரசித்து நயப்பார்.

**தர உள்ளீடு:**

- பரவுருவ அலங்காரங்கள் உள்ள துணிவகைகள்.
- குழந்தைகளுக்குப் பொருந்தும் இரேகைகள் வடிவங்கள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படிமுறை 3.2.1.1**

- குழந்தைகளுக்காக உருவாக்கப்பட்ட பரவுருவ அலங்காரங்களைக் கொண்ட துணிகள், அவற்றால் தைக்கப்பட்ட ஆடைகள் என்பவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- குழந்தைகளுக்கு ஏற்ற அலங்கார வடிவங்கள் பெரியோருக்குப் பொருத்தாமல் இருக்கும் என்பது பற்றி உரையாடுக.
- குழந்தைகளுக்கு மட்டுமே பொருந்தும் அலங்கார வடிவங்கள் பற்றி மாணவர்களிடம் வினவுக.
- பிள்ளைகளுக்காக நிர்மாணிக்கும் நிர்மாணிப்புக்களில் அவர்களது விருப்பு, வெறுப்புகள் மீது கவனஞ் செலுத்த வேண்டும் என்பதைப் பற்றியும் கலந்துரையாடுக.
- பிள்ளைகளுக்கான நிறங்களைத் தெரிவு செய்யும் போது கவனஞ் செலுத்த வேண்டிய விடயங்கள் பற்றிக் கலந்துரையாடுக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 3.2.1.2**

- பிள்ளைகளுக்காக (நிர்மாணிக்கப்பட்ட) வடிவங்கள் அல்லது இயற்கை வடிவங்கள் அடங்கிய அலங்கார காட்டுரு ஒன்றைத் திட்டமிட்டுக் கொள்க.
- நிர்மாணிக்கப்பட்ட அலங்காரக் காட்டுருவை பொருத்தமாக வரைதற் தாளில் சரியான முறையைப் பயன்படுத்தி பிரதியிட்டுக் கொள்க.
- பிள்ளைகளுக்கு ஏற்ற வர்ணங்களைக் கொண்டு வர்ணம் தீட்டுக.
- நிர்மாணிப்புக்களைக் காட்சிப்படுத்தத் தயாராகுக.

prof 4

(55 நிமிடங்கள்)

**படிமுறை 3.2.1.3**

- மாணவர்களது ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சுயமதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்க.
- நிர்மாணிப்புகள் சிறப்புடன் அமையத்தக்க கருத்துக்களை முன்வைக்க.
- பொதுவான விடயங்களை உள்ளடக்கும் கலந்துரையாடலில் ஈடுபடுக.

(05 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- பிள்ளைகளுக்குப் பொருத்தமான வர்ணங்களைக் கொண்ட வடிவங்களைக் குறிப்பிடுதல்.
- பிள்ளைகளுக்கென்றே நிர்மாணிக்கும் போது எளிய வடிவங்களைப் பயன்படுத்த வேண்டும் என ஏற்றுக்கொள்ளுதல்.
- பிள்ளைகளுக்குப் பொருந்தும் அலங்கார காட்டுருக்களை வரைதல்.
- பிள்ளைகளின் விருப்பத்தையுணர்ந்து செயற்படுதல்.
- ஆக்கங்களை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தல்.

**கீழே உள்ள தலைப்பின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்க.**

3.3.2 விலங்குருவங்களைக் கொண்டு வேட்டி /சாரம் கரைக்குப் பொருத்தமான நிர்மாணிப்பைச் செய்க. - 2 பாடவேளைகள் -

தேர்ச்சி மட்டம் 3.3 இன் கீழ் செயற்பாடு 3.3.1 இற்குரிய செயற்பாட்டை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துக. - 2 பாடவேளைகள் -

**தேர்ச்சி 4.0** : உற்பத்தி மற்றும் சேவைக்கும் தேவையான கிராபிக் சித்திரம் நிர்மாணிப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.1** : பல்வேறு உற்பத்திகள் சேவை தேவைகளுக்காக ஆக்கங்கள் படைப்பார்.

**செயற்பாடு 4.1.1.** : "மேலுறைகள், பொதியுறைகள், கொள்கலன்கள் நிர்மாணிப்போம்."

**பாடவேளைகள்** : 2

**கற்றற் பேறுகள்:**

- மேலுறை, பொதியுறை, கொள்கலன்களில் உள்ள சிறப்புத்தன்மை பற்றி விளக்குவார்.
- நிர்மாணிப்பின் கவரும் தன்மை உற்பத்திப் பொருளின் விற்பனையை அதிகரிக்கத் துணைபுரியும் என்பதை ஏற்றுக்கொள்வார்.
- தேசிய உணவுப் பொருள்களுக்காக மேலுறை, பொதியுறை, கொள்கலன்களை உருவாக்குவார்.
- நிர்மாணிப்புக்களை இரசித்து நயப்பார்.

**தர உள்ளீடு:**

- சொக்லெட், டொபி, சவர்க்காரம் - மேலுறை
  திரவப்பால், தேயிலை, பானம் - பொதியுறை
  பிஸ்கட், பால்மா, தேங்காய்ப்பால் - கொள்கலன்

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

**படிமுறை 4.1.1.1**

- நிர்மாணிக்கப்பட்ட மேலுறை, பொதியுறை, கொள்கலன்களை மாணவர்களிடம் வழங்கி அவற்றை நோக்கச் செய்து அதனை இரசிக்கச் செய்து பாடத்துள் பிரவேசிக்க.
  மேலுறை - உதாரணம் : டொபி, சவர்க்காரம்
  பொதியுறை - உதாரணம் : தேயிலை, பிஸ்கட், திரவப்பால்
  கொள்கலன் - உதாரணம் : பால்மா, தேங்காய்ப்பால் பெட்டி
- மேலுறை, பொதியுறை, கொள்கலன் என்பவற்றின் தனித்துவமான பண்புகளையும், பொருள்களை விளம்பரப்படுத்துகையிலும், விற்பனையிலும் அதன் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடுக.
  கீழே உள்ள விடயங்களைக் கவனத்திற் கொள்க.
  - அமைப்பு
  - அளவு
  - தரம்
  - நுகர்வோரைக் கவருதல்.

(10 நிமிடங்கள்)

prof 4

## படிமுறை 4.1.1.2

- விருப்பத்தின்படி தெரிவு செய்த தலைப்புக்கிணங்க மேலுறை, பொதியுறை, கொள்கலன் ஒன்றை நிர்மாணிக்கத் தேவையான அறிவுரைகளை வழங்குக.
- சகல மாணவர்களும் மேலுறை, பொதியுறை, கொள்கலன் என்பவற்றில் ஒன்றைக் கட்டாயம் நிர்மாணிக்க வேண்டும் என்பதை எடுத்துரைக்க.
- தேசிய உணவு வகை ஒன்றுக்காக மேலுறை, பொதியுறை அல்லது கொள்கலன் ஒன்றை நிர்மாணிக்கும்படி கூறுக.
- தம்மால் அமைக்கப்பட்ட மேலுறை, பொதியுறை அல்லது கொள்கலனுக்கு இலகுவாக உச்சரிக்கக் கூடிய ஒரு பெயரை இடுக.
- எழுத்துருவங்கள், வர்ணங்களைப் பொருத்தமான விதத்தில் பயன்படுத்தி அதனை அழகாக நிர்மாணிக்க.
- நிர்மாணிப்புக்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

( 60 நிமிடங்கள்)

## படிமுறை 4.1.1.3

- நிர்மாணிப்புக்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- ஆக்கங்கள் பற்றிய கருத்துக்களை வகுப்பில் முன்வைக்க வாய்ப்பளிக்க.
- மற்றவர்களது நிர்மாணங்கள் பற்றிய கருத்துக்களை முன்வைக்கச் செய்க.
- நிர்மாணிப்புகள் சிறப்புடன் அமைய வேண்டிய கருத்துக்களை முன்வைத்து கலந்துரையாடுக.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- மேலுறை, பொதியுறை, கொள்கலன் என்பவற்றுக்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குதல்.
- எழுத்துருவங்களை ஆக்கபூர்வமாக பாவித்து நிர்மாணிப்பை வர்ணம் தீட்டுதல்.
- தலைப்புக்கு ஏற்ற விதத்தில் பொதியுறை, மேலுறை, கொள்கலன் என்பவற்றை நிர்மாணித்தல்.
- சிறப்பான முறையில் நிர்மாணத்தைப் பூர்த்தி செய்தல்.
- மற்றவர்களின் நிர்மாணங்களை இரசித்து நயத்தல்.

**கீழே உள்ள தலைப்புக்களின் கீழ் ஏனைய செயற்பாடுகளைத் திட்டமிட்டுக் கொள்க.**

| | | |
|---|---|---|
| 4.1.2 | புதிதாக அறிமுகப்படுத்தும் வங்கி ஒன்றுக்காகச் சின்னம் ஒன்றை உருவாக்குவோம். | - 02 பாடவேளைகள் - |
| 4.1.3 | அழைப்பிதழ்களை நிர்மாணிப்போம். | - 02 பாடவேளைகள் - |

prof 4

**தேர்ச்சி 4.0** : உற்பத்தி மற்றும் சேவைத் தேவைகளுக்காக கிராபிக் ஆக்கங்களைப் படைப்பார்.

**தேர்ச்சி மட்டம் 4.2** : பாடலுக்கு, கவிதைக்குப் பொருத்தமான ஒப்புச் சித்திரங்கள் படைப்பார்.

**செயற்பாடு 4.2.1.** : "விளக்கக் காட்சிச் சித்திரம் வரைவோம்."

**பாடவேளைகள்** : 2

## கற்றற் பேறுகள்:

- எடுத்துக்காட்டுச் சித்திரம் ஒன்றை விளக்கிக் கூறுவார்.
- எடுத்துக் காட்டுச் சித்திரத்தில் அடங்கியிருப்பவற்றை உணர்வு பூர்வமாக எடுத்துரைப்பார்.
- பாடல் வரிகளுக்கு ஏற்ற விதத்தில் எடுத்துக்காட்டுச் சித்திரத்தை வரைவார்.
- பூரணப்படுத்தியவற்றை இரசித்து நயப்பார்.

## தர உள்ளீடு:

- பத்திரிகைகளில் வெளியான பாடல்கள், கீதங்கள், கவிதைகளுக்குப் பொருத்தமாக வரையப்பட்ட கறுப்பு வெள்ளை மாதிரிச் சித்திரங்கள்.
- எடுத்துக் காட்டுச் சித்திரத்துக்குப் பொருத்தமான பாடல் வரிகள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

### படிமுறை 4.2.1.1

- பாடல்கள், கீதங்கள், கவிதைகள், நாவல்கள் என்பவைக்குப் பொருத்தமாக வரையப்பட்டு, பத்திரிகைகளில் வெளியான, எடுத்துக் காட்டுச் சித்திரங்கள் சிலவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- காண்பித்த சித்திரங்கள் பற்றிய கருத்துக்களை மாணவரிடம் வினவுக.
- எடுத்துக் காட்டுச் சித்திரமொன்றில் பயன்படுத்தப்படும் வடிவங்கள், இரேகைகள், கறுப்பு வெள்ளை மற்றும் வேறு வர்ணங்கள் பற்றிக் கலந்துரையாடுக.
- கிராபிக் சித்திர வகையைச் சேர்ந்த இவ்வெடுத்துக்காட்டுச் சித்திரங்களில் ஒத்திசைவு வெளிப்பட வேண்டும் என்பதை கலந்துரையாடி வலியுறுத்துக.

(15 நிமிடங்கள்)

### படிமுறை 4.2.1.2

- தெரிவு செய்த பாடலை மாணவருக்கு வழங்குக.
- பாடல் வரிகளுக்கமைய அதன் கருத்து வெளிப்பாடு தாளத்துக்கு ஏற்றதாக இருத்தல். வர்ணங்களை உபயோகித்தல் என்பவை மீது கவனஞ் செலுத்தி சித்திர நிர்மாணிப்பில் மாணவர்களை ஈடுபடுத்துக.
- நிர்மாணிப்பை வர்ணம் தீட்டும் போது பாடலின் தாள லயத்துக்கு ஏற்றவாறு அமைய வேண்டும் என்பதை வலியுறுத்துக.
- நிர்மாணித்தவற்றை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

prof 4

(55 நிமிடங்கள்)

**படிமுறை 4.2.1.3**

- நிர்மாணிப்புக்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவை பற்றிய கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குக.
- எடுத்துக்காட்டுச் சித்திரம் பாடலுக்கு பொருந்தும் தன்மை பற்றிக் கலந்துரையாடுக.
- தேவையான முன்னூட்டல்களையும் பின்னூட்டல்களையும் வழங்கி மாணவர்களை ஊக்குவிக்க.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- எடுத்துக்காட்டு சித்திரத்தை விளக்குதல்.
- மற்றைய கிராபிக் சித்திரங்களிலிருந்து எடுத்துக்காட்டுச் சித்திரங்களை வேறுபடுத்தி அறிதல்.
- பாடலுக்குப் பொருத்தமான எடுத்துக்காட்டுச் சித்திரத்தை நிர்மாணித்தல்.
- நிர்மாணித்தவற்றை இரசித்து நயத்தல்.

prof 4

**தேர்ச்சி 5.0** : வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 5.1** : ஆக்கபூர்வமான தளவுருவங்களைப் பயன்படுத்தி புடைப்புச் செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார்.

**செயற்பாடு 5.1.1.** : "விலங்கு, தாவர வடிவங்களைப் பயன்படுத்தி சுவர் அலங்காரம் ஒன்றை நிர்மாணிப்போம்."

**பாடவேளைகள்** : 3

**கற்றற் பேறுகள்:**

- ஊடகங்களை இனங்கண்டு செதுக்கலுக்குப் பொருத்தமான ஆக்கங்களுக்குப் பயன்படுத்துவார்.
- ஊடகங்களைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுவார்.
- பல்வேறுபட்ட உபகரணங்களைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுவார்.
- வர்ணம் தீட்டி பூரணப்படுத்தும் ஆற்றலைப் பெறுவார்.
- மற்றவர்களுடைய நிர்மாணங்களை இரசித்து நயப்பார்.

**தர உள்ளீடு:**

- புடைப்பு முறையில் அமைக்கப்பட்ட சுவர் அலங்காரங்களின் மாதிரி வகைகள்.
- சுவர் அலங்காரம் ஒன்றுக்காக வரையப்பட்ட படங்கள், ஒளிப் படங்கள், பருமட்டான படங்கள்.
- இணைப்பு 5.1.1.1க்குரிய ஆய்வு செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகள்.
- டிமைன் கடதாசி, பென்சில், சிறிய அலகுடைய கத்திகள், தூரிகைகள், வர்ணங்கள் (இறப்பர் மை, சில்வர் மை) மணற் கடதாசி, காபன் தாள்கள்.
- 1 1/2x 1 1/2 x 01''அளவுடைய ரெஜிபோம்

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 5.1.1.1

- புடைப்புச் செதுக்கலின் மாதிரி வடிவங்கள், படங்கள், பருமட்டான படங்கள், ஒளிப் படங்கள் என்பவற்றை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
- அவற்றை நோக்கிய பின் அவைப் பற்றிக் கலந்துரையாடுக.
- ஊடகங்களைப் பயன்படுத்தி இலகுவான முறையில் அவை நிர்மாணிக்கும் விதம் பற்றிக் கலந்துரையாடுக.
- பயன்படுத்தக் கூடிய வடிவங்கள், உருவங்கள் என்பவற்றை ஒழுங்கிணைத்து நிர்மாணத்தை செய்யும் விதம் பற்றிக் கலந்துரையாடுக.

(15 நிமிடங்கள்)

### படிமுறை 5.1.1.2

- 5.1.1.1க்குரிய ஆய்வுச் செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- பருமட்டான படங்களை டிமைத் தாள்களில் வரையச் செய்க.
- ரெஜிபோம், கத்தி என்பன வழங்குக.
- தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதுடன் மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.

(90 நிமிடங்கள்)

prof 4

## படிமுறை 5.1.1.3

- மாணவர் ஆக்கங்களை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- சுயமதிப்பீட்டுக்கு வாய்ப்பளிக்குக.
- சிறப்பான நிர்மாணங்கள் அமையத்தக்க கருத்துக்களை முன்வைக்க
- நிர்மாணத்தின் பருமட்டான படத்தை வரைந்து கொள்வதால் ரெஜிபோம் செதுக்கலை இலகுவில் செய்யலாம் என விளங்கிக் கொள்க.
- ரெஜிபோமில் செதுக்கலை செய்து மணற்கடதாசியை பாவித்து மென்மையாக்கி தேவையான விதத்தில் வர்ணம் தீட்டி அழகான நிர்மாணத்தை பெற்றுக்கொள்ளலாம் என தெளிவாக அறிந்து கொள்க.
- வேறு ஊடகங்களைப் பயன்படுத்தியும் இவை போன்ற நிர்மாணங்களை உருவாக்கலாம் எனப் புரிய வைக்க.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- புடைப்புச் செதுக்கல்கள் எவை என விளக்கிக் கூறுவார்.
- செதுக்கல் முறையில் அலங்காரம் ஒன்றை உருவாக்கலாம் என ஏற்றுக்கொள்ளுதல்.
- ரெஜிபோம் பயன்படுத்தி புடைப்புச் செதுக்கல்களை நிர்மாணித்தல்.
- உபகரணங்களைச் சரியாகப் பயன்படுத்துதல்.
- மற்றவர்களது நிர்மாணங்களை இரசித்து நயத்தல்.

இணைப்பு 5.1.1.1

## ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம் :

- ஆசிரியர் காண்பிக்கும் மாதிரிச் சித்திரங்கள், செதுக்கல்கள், பருமட்டான படங்கள் என்பவற்றை நன்றாக நோக்குக.
- அவற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள வடிவங்கள், உருவங்கள், வர்ணங்கள் ஊடகம் பூரணப்பாடு என்பவை பற்றி நோக்குக.
- வழங்கப்பட்டுள்ள கடதாசியில், உரிய அளவுப்படி (1 1/2 x 1 1/2 அடி) புடைப்புச் செதுக்கலுக்கான பருமட்டமான படத்தை விலங்கு, தாவர உருவங்களைக் கொண்டு வரைக.
- வரைந்த பருமட்டான படத்தைக் காபன் தாளை உபயோகித்து ரெஜிபோமில் பிரதியிட்டுக் கொள்க.
- கூரான கத்திகளின் உதவியுடன் எதிர்பார்க்கும் உருவம் வெளிப்படும் விதத்தில் தேவையற்ற பகுதிகளை நீக்குக.
- செதுக்கி வெளிப்படுத்திய ஆக்கத்தை அரத்தாளினால் உரோஞ்சித் தேவையான அளவுக்கு ஒப்பமாக்கிக் கொள்க.
- முதலில் ஆழமான பகுதிகளைக் கடும் நிறத்தினாலும், புடைத்த பகுதிகளை இள நிறத்தினாலும் வர்ணந் தீட்டுக.
- நிறந்தீட்டி முடித்த பின்னர் ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்துக.

prof 4

**தேர்ச்சி 5.0** : வெவ்வேறு ஊடகங்களைப் பயன்படுத்தி சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகள் ஆக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2** : உருவமைத்தல் நுட்பமுறைகளைப் பயன்படுத்தி மனிதத் தலை ஆக்குவார்.

**செயற்பாடு 5.2.1.** : "மனிதத் தலை ஒன்று நிர்மாணிப்போம்."

**பாடவேளைகள்** : 3

**கற்றற் பேறுகள்:**

- ஊடகங்களின் பல்வேறுபட்ட தன்மையை அறியும் ஆற்றலைப் பெறுவார்.
- ஊடகங்களைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுவார்.
- உபகரணங்களைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெறுவார்.
- பூரணமாக நிறைவு செய்து வர்ணம் தீட்டுவார்.
- மற்றவர்களது நிர்மாணங்களை இரசித்து நயப்பார்.

**தர உள்ளீடு:**

- புடைப்புச் செதுக்கல் ஒன்றின் மாதிரி உருவைக் காட்டும் படங்கள், சித்திரங்கள்.
- இணைப்பு 5.1.2.1க்குரிய ஆய்வு அறிவுறுத்தற் படிவத்தின் பிரதிகள்.
- டிமை கடதாசி, பென்சில், அழிறப்பர், பலகைத்துண்டு (1/2 x ''20" x 15")

பதப்படுத்திய களிமண், செதுக்கலுக்குப் பயன்படும் உபகரணங்கள் (tools) வர்ணங்கள் (இறப்பர் பூச்சு, பதாகைப் பூச்சு, லக்கர், வர்ணங்களை இடுவதற்குரிய பாத்திரங்கள், தூரிகைகள்)

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படிமுறை 5.2.1.1**

- புடைப்புச் செதுக்கலின் மாதிரிகளை வகுப்பில் காட்சிப்படுத்துக.
- அவை பற்றிக் கலந்துரையாடுக.
- மனித, விலங்கு உருவங்களைப் பயன்படுத்தி புடைப்புச் செதுக்கலை அமைக்கும் விதம் பற்றிக் கலந்துரையாடுக.
- உயிர்ப்புடன் பங்குகொண்டு பாடத்துள் பிரவேசிக்க.
- பதப்படுத்திய களிமண்ணால் சிறந்த ஒரு நிர்மாணிப்பைச் செய்யலாம் என்பதை புரியவைக்க.
- புடைப்புச் செதுக்கல் நன்றாக உலர்ந்ததும் பிறிதொரு நாளில் வர்ணம் பூசும்படி அறிவுறுத்துக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 5.2.1.2**

- 5.2.1.1 க்குரிய ஆய்வு /செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவத்தின் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.

prof 4

- குழுவிலுள்ள ஒருவரை அல்லது பலரை பருமட்டான படம் வரைய வழிகாட்டுக.
- தேவையான வரைதற் தாள்கள், பென்சில்.
- களிமண்ணை இடுவதற்க்கு பலகையை வழங்குக.
- களி மண், தேவையான கருவிகள் (tools) என்பனவும் வழங்குக.

- குழுவுக்குச் சரியான அறிவுறுத்தல்களை வழங்குக.
- நிர்மாணிப்புக்களை வகுப்பில் காட்சிப்படுத்த ஏற்பாடுகளைச் செய்க.
- ஈரத்தை உலரவிட 2 பாடவேளைகளையும் வர்ணம் பூச 1 பாடவேளையையும் பயன்படுத்துக.
- தூரிகை, வர்ணம் என்பன வழங்கி வர்ணம் தீட்ட வழிக்காட்டுக.

(90 நிமிடங்கள்)

## படிமுறை 5.2.1.3

- குழுவின் ஆக்கத்தை வகுப்பில் காட்சிப்படுத்தத் தயாராகுக.
- சுய மதிப்பீட்டுக்கும் ஏனையவர்களின் நிர்மாணத்தின் மதிபப்பீட்டுக்கும் வாய்ப்பளிக்க.
- புடைப்புச் செதுக்கலை நிர்மாணிக்கக் களி மண் ஒரு சிறந்த ஊடகமாகப் பயன்படுகிறது என வலியுறுத்துக.
- பருமட்டான படம் வரைந்து, அதன்பின் நிர்மாணத்தைச் செய்தல் காரியத்தை இலகுவாக்கிவிடும் என்பதைப் பற்றி உரையாடுக.
- உபகரணங்களைப் பாவித்தல், நிறைவு, சிறப்புத்தன்மை என்பன பற்றி அறிவுறுத்துக.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- புடைப்புச் சித்திரங்கள் பற்றி விளக்குதல்.
- வீட்டை அலங்கரிக்கப் புடைப்புச் செதுக்கல்களைப் பயன்படுத்தலாம் என ஏற்றுக்கொள்ளுதல்.
- களி மண்ணை ஊடகமாகப் பயன்படுத்தி புடைப்புச் செதுக்கல்களை நிர்மாணித்து வர்ணம் தீட்டுதல்.
- குழு மனப்பான்மையுடன் செயலில் ஈடுபடுதல்.
- கருவிகளைச் சரியாகப் பயன்படுத்துதல்.

இணைப்பு 5.2.1.1.

## ஆய்வு / செயற்பாட்டு அறிவுறுத்தல் படிவம்:

- தரப்பட்டுள்ள வாசிப்புக் கோவையை நன்றாக வாசிக்க
- ஆசிரியர் வகுப்பில் காண்பிக்கும் புடைப்புச் செதுக்கலின் மாதிரியை நன்றாக நோக்குக.
- அதில் காணக்கூடிய வடிவங்கள், பயன்படுத்தப்பட்டுள்ள ஊடகம், வர்ணங்கள், முப்பரிமாணத் தன்மை, பூரணப்பாடு என்பவற்றைப் பற்றிக் கலந்துரையாடுக.
- சகலரும் புடைப்புச் செதுக்கலின் மாதிரி உருவை வழங்கப்பட்டுள்ள டிமைத் தாளில் வரைக.
- குழுவிலுள்ள திறமையான மாணவர் ஒருவரைக் கொண்டு அவற்றில் சிறந்ததைத் தெரிவு செய்து அதனை தொகுத்தோ அல்லது அதையையே சரியான அளவில் வரைக.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள பலகையில் 1/2 அங்குலம் தடிப்பிற்க்கு களி மண்ணை அப்புக.
- அக்களி மண் மீது நீர் வரைந்த படத்தை வைத்து பென்சில் அல்லது பேனையால் வரைந்து கொள்க.
- தரப்பட்ட (tools ) கருவிகளைப் பயன்படுத்தி தேவையான களி மண்ணை அப்பி அல்லது தேவையற்றவையை அகற்றி செதுக்கலை செம்மையுடன் நிர்மாணம் செய்க.
- குழுவிலுள்ளவர் செய்த நிர்மாணங்களை உலரவிடுக. நன்றாக உலர்ந்ததும் நிறங்களாலும் கீழே தோன்றாத பகுதியை (Dark colours) கடும் நிறங்களைக் கொண்டு வர்ணம் தீட்டுக.

**தேர்ச்சி 6.0** : சமய பண்பாட்டு அம்சங்கள், உண்மை வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் ஆக்கங்களை நயப்பார்.

**செயற்பாடு 6.1.1.** : "எம்.சார்ளிஸ் கலைஞரின் ஓவியங்களை மதிப்போம்"

**பாடவேளைகள்** : 1

**கற்றற் பேறுகள்:**

- கலைஞர் எம்.சார்ளிஸ் அவர்களின் ஓவியங்கள் பற்றி அறிந்து கொள்வார்.
- விகாரைகளில் காணும் ஓவியங்கள், லிதோ அச்சு முறை ஓவியங்கள் என்பவற்றை இனங்காணும் திறன் பெறுவார்.
- புதிய ஆக்கப்பாணிக்காகச் செல்வாக்குச் செலுத்தியவற்றைத் தேடியறிவார்.
- ஆக்கங்கள் சார்பாகச் சித்திரிப்பு முறைகள், கோட்பாட்டு இயல்புகளினை விவரிப்பார்.
- எம்.சார்ளிஸ் கலைஞரின் ஓவியங்களின் கலைப் பண்புகளை மதிப்பிடுவர்.

**தர உள்ளீடு:**

- கலைஞர் எம்.சார்ளிஸின் வர்ண ஓவியங்கள்.
  - சித்தார்த்தரும் பிரஜாபதி கோதமியும்.
  - தாமரைப் பூவில் நடந்து வருதல்.
- இணைப்பு 6.1.1.1க்குரிய செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகள்.
- இணைப்பு 6.1.1.2க்குரிய வாசிப்புப்படிவம்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படிமுறை 6.1.1.1**

- கலைஞர் எம்.சார்ளிஸ் அவர்களின் மாதிரி ஓவியங்களை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துக.
- அவ் ஓவியங்களின் பாணி, கருப்பொருள், ஒத்த தன்மை பற்றி மாணவர்களிடம் வினவுக.
- மேற்கத்தேய பாணியைப் பின்பற்றி இலங்கைக் கலாசாரத்தைப் பேணும் விதத்தில் வரையப்பட்ட பௌத்த ஓவியங்கள் பற்றி வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.1.2**

- இணைப்பு 6.1.1.1க்குரிய செயற்பாட்டுப் படிவத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- இணைப்பு 6.1.1.2க்குரிய வாசிப்புப் படிவத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- நோக்கிய பின் வினவப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க வைக்க.

(20 நிமிடங்கள்)

## படிமுறை 6.1.1.3

- தாம் எழுதிய விடைத்தாள்களை பரிமாற்றம் செய்து பார்வையிடச் செய்து அவற்றை மதிப்பிடச் சந்தர்ப்பம் வழங்குக.
- அவை பற்றிய கருத்துக்களை முன்வைக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- கலைஞர் எம்.சார்ளிஸ் அவர்களின் நிர்மாணங்கள் பற்றிச் சிறு கலந்துரையாடலில் ஈடுபடுக.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் மீது கவனம் செலுத்தி, இணைப்பு 6.1.1.1 இணைப்பு 6.1.1.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- கலைஞர் எம்.சார்ளிஸ் அவர்களின் பண்புகளையும், ஆக்கப்பாணியையும் விவரித்தல்.
- பௌத்த விகாரை ஓவியங்களையும், லிதோ அச்சு முறையிலான ஓவியங்களையும் குறிப்பிடுதல்.
- மேலைத்தேய, கீழைத்தேய கலைகளின் ஒத்த தன்மையை இவரது ஓவியங்களில் காணக்கூடியதாக இருக்கிறது என விபரித்துக் கூறுதல்.
- கலைஞர் எம்.சார்ளிஸ் அவர்களின் ஓவியங்கள், சிலைகள், நிர்மாணிப்புக்கள் என்பவற்றில் காணக்கூடிய கலைப் பண்புகளை விவரித்தல்.

இணைப்பு 6.1.1.1

### செயற்பாட்டுப் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள எம் சார்ளிஸின் ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- எம்.சார்லிஸின் ஆக்கங்களின் விசேட அம்சங்களை அறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
    01. கலைஞர் எம்.சார்ளிஸ் பற்றிய சிறிய அறிமுகம் ஒன்றினைத் தருக.
    02. பின்வரும் கருத்துக்களின் கீழ் கலைஞரின் ஆக்கங்களைப் பற்றிக் கணிப்பீடு செய்யுங்கள்.
        - i கருப்பொருள்
        - i கலைப்பாங்கு
        - ii பாணி
        - iv. நுட்பமுறை
        - v. கலை அம்சங்கள்
            - உருவங்களைப் பயன்படுத்துதல்.
            - வர்ணங்களைப் பயன்படுத்துதல்.
            - தளத்தைப் பயன்படுத்துதல்.
- உங்கள் தேடல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்க்கு ஆயத்தம் செய்யுங்கள்.

**இணைப்பு 6.1.1.2**

## வாசிப்புப் படிவம்

- எம்.சார்ளிஸ் அல்லது மாலிகாவகே சார்ளிஸ் என்னும் கலைஞர் இலங்கையின் சித்திரக் கலையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய யுக புருஷராகக் கருதப்படுகிறார்.
- இவர் 1880 ஆம் ஆண்டு யூன் மாதம் 25ஆம் திகதி அம்பலாங்கொடையில் பிறந்தார். இவர் பாளி, சிங்களம், சமஸ்கிருதம் எனும் மொழிகளைக் கசடறக் கற்றார். கொழும்பு மாலிகாகந்த வித்யோதயப் பிரிவேனாவில் உயர் கல்வியைக் கற்றார்.
- அக்காலத்தில் புகழ்பெற்ற ஓவியரான ரிச்சட் ஷென்றிக்கஸ் என்பவருடன் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அத்துடன் கடொல்கல்கே மகா சித்தர குருன்னான்சேயின் கீழ் விகாரை ஓவியங்கள் வரைய ஆரம்பித்து அதனைத் தொடர்ந்தார். அவர் வரைந்த தனித்துவமான முதல் ஓவியம் கொழும்பு மாலிகாகந்த விகாரையில் அமைந்துள்ளது.
- காலனித்துவ ஆட்சிக் காலத்தில் இலங்கை வாழ் மக்கள் பலர் மேற்கத்ததேய பழக்க வழக்கங்களைப் பின்பற்றியதுடன் விக்ரோரியா மகாராணியின் அரச குடும்பத்தினரின் படங்களையும், சர்வதேச நிலக்காட்சிகளையும் தமது வீட்டுச் சுவர்களை அலங்கரிக்கப் பயன்படுத்தினர். இக்கால கட்டத்தில் எம்.சார்ளிஸ் என்னும் ஓவியர் பௌத்த ஓவியங்களை வரைந்து ஜேர்மனிக்கு அனுப்பி அவற்றை லிதோ அச்சு முறையில் அச்சிட்டு சிங்கள பௌத்த மக்களுக்கு விநியோகித்தார். கி.பி.1923 ஆம் ஆண்டளவில் லிதோ அச்சு முறையில் கிட்டத்தட்ட 36 ஓவியங்கள் அளவில் அச்சிட்டு வெளியிட்டார். அவற்றுள் சில:
    - சித்தார்த்தரின் பிறப்பு.
    - தாமரைப் பூவில் நடந்து வருதல்.
    - கல்வி கற்றல்.
    - சித்தார்த்தரின் திருமணம்.
    - சித்தார்த்தரும் பிரஜாபதி கோதமியும்.
    - துறவறம் பூணுதல்.
    - சீவலி பிக்கு.
- எம்.சார்ளிஸ் அவர்களின் ஓவியங்களிற் காணக்கூடிய சிறப்பியல்புகள் எவை?
- இவர் நிர்மாணித்த பாரிய புத்தர் சிலை அமைந்த இடம் எது?
- இவரது பௌத்த ஓவியங்கள்: விகாரை ஓவியம், லிதோ முறையில் அச்சிடப்பட்ட ஓவியங்கள் என இரு வகைகளைக் கொண்டுள்ளன.
- எம்.சார்ளிஸ் கலைஞர் தனது ஓவியங்களை மேற்கத்தேயக் கலை மரபின் தாக்கத்தைக் கொண்டு அவற்றுக்கு ஒத்ததாக வரைந்துள்ளார்.
- சித்திரக் கலையைப் போன்றே இவர் சிலை செய்வதிலும் வல்லவராகக் காணப்பட்டார். மாத்தறை வெஹெறகேனயில் உள்ள பாரிய புத்தர் சிலை இவரது திறமையை எடுத்துக் காட்டுகிறது.
- எம்.சார்ளிஸ் வரைந்த ஓவியங்கள் காணப்படும் பௌத்த விகாரைகள்:
    - கொழும்பு மாலிகாகந்த விகாரை.
    - கரகம்பிட்டிய சுபோதாராமய.
    - மத்துகம பாந்திய சிறி மங்கலாராமய.
    - பொத்துபிட்டிய பூஜாராமய.
- எம்.சார்ளிஸ் ஓவியக் கலைஞரின் ஓவியங்களிற் காணப்படும் கலை அம்சங்கள்
    - சரியான ஒழுங்கிணைப்பு.
    - தூரதரிசனத் தன்மை.
    - ஒளி நிழல் காட்டல்.
    - நிறப் பிரயோகம்.
    - அலங்காரத் தன்மை.
    - ஐரோப்பியக் கலை மரபின் ஒத்த தன்மை.
- பௌத்த சமயஞ்சார் ஓவியக் கலைக்கு பெரும் பணியாற்றிய இவர் 1955ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 21ஆம் திகதி இறைபதமடைந்தார்.

## இளவரசன் சித்தார்த்தனும் தாயாரும் (லிதோ அச்சுப்படம்)



- மேலைத்தேய /கீழைத்தேய இயற்கைவாத ஓவியப்பாணியைத் தழுவி இந்த ஓவியம் வரையப்பட்டுள்ளது.
- மறுமலர்ச்சிக்கால ஓவியக் கலைஞர்கள் வரைந்த கன்னி மரியாளையும் யேசு பாலகனையும் காட்டும் மடோனா ஓவியங்களின் தாக்கத்தை இதில் காணலாம்.
- ஓவியத்திலுள்ள மனித உருவங்களில் அழகாகச் சித்திரிக்கப்பட்டுள்ள ஆடையணிகள் கீழைத்தேய ஓவியப்பாணியின் தாக்கத்தைக் காட்டுகின்றன. குறிப்பாக இந்திய மரபைச் சேர்ந்த ஆடையணிகளின் இயல்புகள் தெளிவாகத் தென்படுகின்றன.
- ஓவியத்தில் பலவர்ணங்களைக் கொண்டு முப்பரிமாண இயல்புகள் மிகச் சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.
- சித்தார்த்தகுமாரனும் தாயாரும் மாளிகையினுள் தனிமையாக இருக்கும் காட்சி சித்தரிக்கப்பட்டுள்ளது.
- ஒட்டுமொத்த ஓவியத்தின் முன்பகுதியும், பின்பகுதியும் மாத்திரம் காட்டப்பட்டுள்ளன. மாளிகைச் சாளரத்தின் மூலம் காட்சியளிக்கும் பின்னணி தூரக்காட்சி இயல்புகளைக் கொண்ட நிலத்தோற்றக் காட்சியாகக் காட்டப்பட்டுள்ளது.

## தாமரைப் மலர் மீது நடந்து வருதல் (லிதோ அச்சுப்படம்)



- ஓவிய வெளியின் ஆழம் வெளிப்படுத்துமாறு தூரக்காட்சி இயல்புகளை உள்ளடக்கி, இயற்கைவாதப் பாணியில் இந்த ஓவியம் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- முன்பகுதி, இடைப்பகுதி, பின்பகுதி என்றவாறாக தளத்தின் மீது தூரக்காட்சி இயல்புகளின்படி உருவங்களும் பல நிகழ்வுகளும் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- ஓவியத்தின் பின்பகுதி வெளியானது தூரக் காட்சி இயல்புகளுடன் நிலத்தோற்றக் காட்சிகளைக் கொண்டுள்ளது.
- முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுமாறு வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| **தேர்ச்சி 6.0** | : | சமய பண்பாட்டு அம்சங்கள், உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார். |
| **தேர்ச்சி மட்டம் 6.1** | : | தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் ஆக்கங்களை நயப்பார். |
| **செயற்பாடு 6.1.2** | : | " சோலியஸ் மெண்டிஸ் - கலைஞரின் ஓவியங்களை மதிப்போம்" |
| **பாடவேளைகள்** | : | 01 |

**கற்றற் பேறுகள்:**

- சோலியஸ் மெண்டிஸ் கலைஞரின் ஓவியங்களை இனங்கண்டு பெயரிடுவார்.
- புதிய ஆக்கபூர்வமாக ஓவியப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த செல்வாக்குகளைத் தேடியறிவார்.
- சோலியஸ் மெண்டிஸ் கலைஞரின் நிர்மாணங்களை இரசித்து நயப்பார்.
- ஆக்கத்துக்கு அடிப்படையாக அமைந்த சித்தரிப்பு அம்சங்கள், சித்தரிப்புக் கோட்பாடுகளின் இயல்புகளை விவரிப்பார்.

**தர உள்ளீடு:**

- சோலியஸ் மெண்டிஸ் வரைந்த களனி விகாரைச் ஓவியங்கள்.
- ஹேமமாலா தந்தகுமாரன் தத்ததாதுவைக் கொண்டு வருதல்.
- சங்கமித்தை வெள்ளரசுக் கிளையைக் கொண்டு வருதல்.
- இணைப்பு 6.1.2.1 செயற்பாட்டுப் பத்திரம்.
- இணைப்பு 6.1.2.2 வாசிப்புப் படிவத்தின் பிரதிகள்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படிமுறை 6.1.2.1**

- சோலியஸ் மெண்டிஸ் கலைஞனின் விகாரை ஓவியங்களை நோக்கச் செய்க.
- அவ்வோவியங்களின் ஒத்த தன்மை, கருப்பொருள், பாணி என்பவை பற்றி மாணவர்களிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.2.2**

- இணைப்பு 6.1.2.1 இன் செயற்பாட்டுப் படிவத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- இணைப்பு 6.1.2.2 இன் வாசிப்பு படிவத்தினை வாசிக்கச் செய்யுங்கள்.
- அவற்றைக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்க வழிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

## படிமுறை 6.1.2.3

- மாணவர்களை எழுமாறாகத் தெரிவு செய்து அவர்களது விடைகளை மதிப்பிடுக.
- மாணவர்கள் சேகரித்த தகவல்கள் அவர்கள் அளித்த விடைகள் என்பனவற்றை உள்ளடக்கிக் கலந்துரையாடுக.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி இணைப்பு 6.1.2.1, இணைப்பு 6.1.2.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- சோலியஸ் மென்டிஸ் அவர்களின் களனி விகாரை ஓவியங்களைக் குறிப்பிடுதல்.
- அப்படைப்புக்களின் ஓவியப்பாணி இயல்புகளை விளக்குவார்.
- சோலியஸ் மென்டிஸ் அவர்களின் கலைப் பண்புகளை மதிப்பிடல்.

இணைப்பு 6.1.2.1

### செயற்பாட்டுப் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சோலியஸ் மென்டிஸின் ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

  01. கலைஞர் சோலியல் மென்டிஸ் பற்றிய சிறிய அறிமுகம் ஒன்றினைத் தருக.
  02. பின்வரும் கருத்துக்களின் கீழ் கலைஞர் ஆக்கங்களைப் பற்றி கணிப்பீடு செய்யுங்கள்.
      - கருப்பொருள்
      - கலைப்பாங்கு
      - செல்வாக்குகள்
      - நுட்பமுறை
      - கலை அம்சங்கள்
        - உருவங்களைப் பயன்படுத்துதல்.
        - வர்ணங்களைப் பயன்படுத்துதல்.
        - தளத்தைப் பயன்படுத்துதல்.
          - கோடுகளைப் பயன்படுத்துதல்.
          - பாவ - உணர்வு வெளிப்பாடு.
      - உங்கள் தேடல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

# வாசிப்புப் படிவம்

- சோலியஸ் மெண்டிஸ் கலைஞன் கி.பி.1897 யூன் மாதம் 17ஆம் திகதி சிலாபம் மாதம்பைக்கு அண்மையில் உள்ள மகாவெவ எனும் இடத்தில் பிறந்தார்.
- அவரது முழுப்பெயர் வலிமுனி சோலியஸ் மெண்டிஸ் ஆயினும் தற்போது அவர் சோலியஸ் மெண்டிஸ் என அழைக்கப்படுகிறார்.
- சோலியஸ் மெண்டிஸ் கலைஞனால் மாவில சுமன குசுமாராமய வில் வரையப்பட்ட எதிர்காலத்தில் புத்தராக இருக்கும் புத்தரின் உருவம் எனும் படைப்பே இவரது முதல் ஓவியம் ஆகும்.
- இவர் இந்தியாவில் ஓவியக் கலையைக் கற்றார். அஜந்தா, எல்லோரா, பாக் எனும் இடங்களில் சித்திரம், சிற்பம் என்பவற்றின் அமைப்பை ஆராய்ந்து கற்றார். இவற்றின் மூலம் பெற்றுக்கொண்ட அறிவைக் கொண்டு புதிய களனி விகாரையில் உன்னதமான ஓவியங்களைத் தனக்கென உரிய பாணியில் வரைந்துள்ளார்.
- களனி விகாரையில் வரைந்த ஓவியங்களைவிட கீழே தரப்பட்ட விகாரைகளிலும் ஓவியங்களை அவர் வரைந்தார்.
    - றனஸ்கல்ல விகாரை.
    - கிரிஉள்ள மெத்தெபொல விகாரை.
    - ஹபராதூவ பிட்டிதூவ கௌனிகொட விகாரை.
    - பொலனறுவை ஸ்ரீ விஜய விகாரை.
    - ஓவியக் கலைஞராக மட்டுமல்லாமல் மனித நேயம் கொண்ட ஒருவராகவும் வாழ்ந்துள்ளார் என்பதை அவரது படைப்புகள் மட்டுமல்லாமல் பொது மக்களுக்காக அவர் அளித்த நன்கொடைகள் எடுத்துக் காட்டுகிறது.

**புதிய களனி விகாரையின் சுவரோவியங்கள் இருவகைப்படும்**

- புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்கள்
- வரலாற்றுச் சம்பவங்கள்

**புத்தரின் வாழ்க்கைச் சம்பவங்கள்**

1. மகாமாயா தேவி கண்ட கனவு.
2. வயல் உழுதல்.
3. சித்தார்த்தர் கல்வி பயிலுதல்.
4. சுஜாதா பாற்சோறு தானம் வழங்குதல்.
5. புத்தராகுதல்.
6. சொத்திப் பிராமணர் புல் வழங்குதல்.
7. இறை பதம் அடைதல்.

**வரலாற்றுச் சம்பவங்கள்**

1. விஜயன் இலங்கைக்கு வருகை தருதல்.
2. அனுராதபுர எல்லையைக் கட்டுதல்.
3. அலுவிகாரையில் திரிபிடகம் நூலாக வெளியிடல்.
4. ஹேமமாலாவும் நந்த குமாரனும் புனித தந்தத்தை இலங்கைக்குக் கொண்டு வருதல்.
5. சங்கமித்தை வெள்ளரசுக் கிளையை இலங்கைக்கு கொண்டு வருதல்.
6. வெலிவிட்ட ஸ்ரீ சுணங்கர தேரருக்கு கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னனால் சங்கப் பதவியை வழங்கல்
7. "புத்தகோஷ கிமியன் விசுத்தி மார்கய" (புத்கோஷ என்பவர் "விசுத்தி மார்கய" என்ற நூலை எழுதுதல்)
8. புத்தரின் இலங்கை விஜயத்தைக் காட்டும் நான்கு ஒவியங்கள்
    - மகியங்கனை
    - நாகதீபம்
    - கல்யாணங் (களனி)
    - பதலாஞ்சனங் (ஸ்ரீபாத /சிவனொளிபாதமலை)

**ஹேமமாலாவும் தந்த குமாரனும் புனித தந்தத்தை இலங்கைக்குக் கொண்டு வருதல்**

- கீர்த்தி ஸ்ரீ கேகவர்ண அரசனின் காலத்தில் (கி.பி. 301 - 328) இவ் அரசனிடமிருந்து புனித தந்தத்தைப் பாதுகாக்க ஹேமமாலாவும் நத்த குமாரனும் அதை இலங்கைக்கு கொண்டு வரும் காட்சியை சித்திரிக்கிறது.
- இவர்கள் பிராமண வேடம் பூண்டு வந்ததாகக் கூறப்படுகின்றது.
- இது எல்லோரினதும் மதிப்பீட்டுக்குள்ளான உன்னதமான படைப்பு என குறிப்பிடப்படுகின்றது.
- மனங்கவர் வர்ணங்கள் பிரயோகிகப்பட்டுள்ளன. மென்மையான இரேகைகள் லயத்துடன் கூடிய மனித உருவங்களோடு ஒருங்கிணைத்து வரையப்பட்டுள்ளது.
- உடலழகு, ஆடையழகு போன்றவற்றை மிகச் சிறப்பாக வரைந்துள்ளார்.
- சோலியஸ் மென்டிஸ் கலைஞனின் ஓவியங்கள் காலத்தால் அழியாதவை
- ஓவியங்களை வர்ணம் தீட்ட இருளான மஞ்சள், மண்ணிறம், கறுப்பு, வெள்ளை நிறங்களைப் பிரயோகித்துள்ளார். இதனூடாக வர்ணபேதத்தை வெளிப்படுத்தியுள்ளார்.
- இயற்கையின் அபூர்வத்தன்மையையும் இயற்கை தன்மையும் பேணும் விதத்தில் இவ்வோவியங்களின் பின்னணியைக் காட்டியுள்ளார்.

**சங்கமித்தை வெள்ளரசுக் கிளையை இலங்கைக்குக் கொண்டு வருதல்**

- அசோக மன்னனுடைய மகளான சங்கமித்தை வெள்ளரசுக் கிளையை இலங்கைக்கு கொண்டு வரும் காட்சியை இது காட்டுகிறது.
- அப்போது இலங்கையை ஆண்ட தேவநம்பியதீசன் ஜம்புக்கோள பட்டணத்துக்கு சென்று நீரில் இறங்கி வெள்ளரசுக் கிளையை ஏற்றுக் கொள்ளும் நிகழ்வு சித்தரிக்கப்பட்டுள்ளது.
- பாரிய தளத்தில் இது வரையப்பட்டுள்ளது. அவருக்கு ஏற்பட்ட சவால்களை வென்று நல்ல மன ஒருமைப்பாட்டுடன் இக்காட்சியை வரைந்துள்ளமையானது அவ்வோவியக் கலைஞனின் முதிர்ச்சியைக் காட்டுகிறது,
- அவ்வோவியத்தில் உள்ள கப்பலின் வடிவத்தை இரேகைகளால் மிக நுணுக்கமாகக் காட்டியுள்ளார். கடல் நீரின் அசைவையும் அவர் காட்டியிருக்கும் விதம் வியக்கத்தக்கது.
- லயத்துடன்கூடிய இரேகைகளுக்கு புத்துயிர் ஊட்டி அதற்கே உரிய வர்ணங்களை பிரயோகித்துள்ளார். பச்சை, வெள்ளை, கறுப்பு போன்ற நிறப்பிரயோகம் தனித்துவமான பண்பை எடுத்துக் காட்டுகிறது.
- சுருக்கமாக எடுத்துக் கொண்டால் விகாரையின் அனைத்து ஓவியங்களும் தூரதரிசனம், முப்பரிமாணத் தன்மை, லயத்துக்கேற்றிருத்தல், உயிர்ப்புடன் காணப்படல், பாவத்தின் வெளிப்பாடு, ஒழுங்கமைப்பு என்பன மிகச்சிறந்த வகையில் காணப்படுகிறது.
- டெம்பரா முறையில் உலர்ந்த சாந்தில் இவ்வோவியங்கள் வரையப்பட்டுள்ளன. சோலியஸ் மென்டிஸ் இந்தியாவுக்குச் சென்று ஓவியக் கலையைக் கற்றார். அப்போது நத்தலால் போஸ் என்பவர்களுடன் பழகும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. எனவே அவருக்கு இவ்வாறான உன்னதமான சித்திரங்களை வரையக் கூடியதாக இருந்தது.
- இருள் ஒளித் தன்மையை வெளிப்படுத்தும் கியரொஸ்குரோ (Chiaros curo) எனும் வர்ணந் தீட்டலை ஒத்த பண்புகள் இந்த ஓவியத்தில் காணப்படுகின்றன.

**இளவரசி ஹேமமாலாவும் இளவரசன் நந்தவும் தந்ததாதுவை இலங்கைக்குக் கொண்டு வருதல்**



**சங்கமித்திரை ஜய ஸ்ரீ மகாபோதியை (வெள்ளரசு மரக்கிளையை) இலங்கைக்குக் கொண்டு வருதல்**



**தேர்ச்சி 6.0** : சமய பண்பாட்டு அம்சங்கள்,உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் ஆக்கங்களை நயப்பார்.

**செயற்பாடு 6.1.3** : "ஜோர்ஜ் கீற் கலைஞனின் ஆக்கங்களை மதிப்போம்.

**பாடவேளை** : 1

**கற்றற் பேறுகள்:**

- ஜோர்ஜ் கீற் கலைஞரின் ஓவியங்களை பெயரிடுவார்.
- ஜோர்ஜ் கீற் கலைஞரின் ஓவியங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- பௌத்த ஓவியக் கலையின் புதுப்பாணியை வெளிக்காட்டிய கோதமி விகாரைச் சுவரோவியங்கள் பற்றித் தேடியறிவார்.
- புதிய ஆக்கப்பாணிக்கான செல்வாக்கு, சித்திர அடிப்படை அம்சங்கள் மற்றும் சித்தரிப்பு முறைகளை விவரிப்பார்.
- வினாக்கொத்தின் வினாக்களுக்கு விடையளிப்பார்.
- ஜோர்ஜ் கீற் கலைஞனின் நிர்மாணங்களை இரசித்து நயப்பார்.

**தர உள்ளீடு:**

- ஜோர்ஜ் கீற் கலைஞரின் வர்ண ஓவியங்கள்.
  - மார யுத்தம் (பொரளை கோதமி விகாரை)
  - நாயக்கா ஓவியம்
- இணைப்பு 6.1.3.1 செயற்பாட்டுப் பத்திரத்தின் பிரதிகள்.
- இணைப்பு 6.1.3.2 வாசிப்புப் படிவத்தின் பிரதிகள்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படிமுறை 6.1.3.1**

- ஜோர்ஜ் கீற் கலைஞனின் ஓவியங்களை மாணவர்களுக்கு அவதானிக்கும்படி வழங்குக.
- ஜோர்ஜ் கீற் கலைஞர் வரைந்த ஓவியங்களைச் சேகரிக்கச் செய்க.
- அவற்றின் கருப்பொருள், ஒத்த தன்மை, பாணி என்பவை பற்றி மாணவர்களிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.3.2**

- இணைப்பு 6.1.3.1க்குரிய செயற்பாட்டுப் படிவத்தினை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- இணைப்பு 6.1.3.2க்குரிய வாசிப்புக் கோவையை மாணவர்களுக்கு வழங்குக.
- வாசிப்புக் கோவையின் துணையுடன் விடையளிக்க வழிப்படுத்துக.
- விடையளிக்கையில் மாணவருக்கு உதவுக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.3.3**

- எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விடைத்தாள்களை மதிப்பிடுக.
- ஓவியர் பற்றி மீட்டாய்வு செய்து கலந்துரையாடுக.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

பின்வரும் விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி இணைப்பு 6.1.3.1, இணைப்பு 6.1.3.2. ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- சர்வதேச கீர்த்திமிக்க ஓவியக் கலைஞராகிய ஜோர்ஜ் கீற் இனது படைப்புக்கள் பற்றித் தேடியறிதல்.
- ஜோர்ஜ் கீற் வெவ்வேறு பாணிகளில் ஓவியங்கள் படைத்த ஒரு கலைஞர் ஆவார் என்பதை விவரித்தல்.
- பௌத்த ஓவியக் கலையின் புதிய போக்கை ஏற்படுத்திய ஒரு கலைஞர் ஜோர்ஜ் கீற் எனக் கூறுதல்.
- ஜோர்ஜ் கீற்றினது படைப்புக்கள் மீது செல்வாக்குச் செலுத்திய ஐரோப்பிய, இந்து கலை மரபுகளின் தாக்கத்தை விவரித்தல்.
- ஜோர்ஜ் கீற்றினது ஓவியங்களின் கலைப் பண்புகளை மதித்தல்.

இணைப்பு 6.1.3.1

## செயற்பாட்டுப் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள ஜோர்ஜ் கீற்றின் ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.
- ஜோர்ஜ் கீற்றின் ஆக்கங்களின் விசேட அம்சங்களை அறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

01. கலைஞர் ஜோர்ஜ் கீற் பற்றிய சுருக்கமான அறிமுகம் ஒன்றினைத் தருக.

02. பின்வரும் கருத்துக்களின் கீழ் கலைஞர் ஜோர்ஜ் கீற்றினது ஆக்கங்களைப் பற்றி கணிப்பீடு செய்யுங்கள்.

i. கருப்பொருள்
ii. கலைப்பாங்கு
iii. செல்வாக்கு
iv. நுட்பமுறை
v. கலை அம்சங்கள்
- உருவங்களைப் பயன்படுத்துதல்.
- வர்ணங்களைப் பயன்படுத்துதல்.
- தளத்தைப் பயன்படுத்துதல்.
- பாவ - உணர்வு வெளிப்பாடு.

- உங்கள் தேடல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

இணைப்பு 6.1.3.2

## வாசிப்புப் படிவம்

- ஆசியாவில் புகழ்பெற்ற ஓவியரான ஜோர்ஜ் கீற் கி.பி.1901 ஆம் ஆண்டு 17ஆம் திகதி கண்டி அம்பிட்டியாவில் சிங்கள பறங்கியர் குடும்பத்தில் பிறந்தார்.
- கண்டி திரித்துவக் கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பயின்றார்.
- 43 குழுவைச் சேர்ந்த இவர் கோதமி விகாரை ஓவியங்களையும் வரைந்துள்ளார்.
- அவருடைய ஓவியங்கள் இந்து மதக் கலைச் செல்வாக்கைக் கொண்டதாக காணப்படுகிறது. பப்லோ பிக்காசோ ஓவியங்களுக்கு ஒத்த தன்மை கொண்டதாகவும் காணப்படுகிறது. இருந்த போதும் அவருக்கே உரியபாணியில் அவற்றை வரைந்துள்ளார். நவீன காலத்தில் வாழ்ந்த திறமையான ஓவியராவார்.
- கி.பி. 1939 - 1940 காலப் பகுதியில் கொழும்பு பொரளை விகாரையில் பௌத்த மத ஓவியங்களை வரைந்து பாராட்டைப் பெற்றார். இவருக்கு ஓவியங்கள் வரைவதற்காகச் சுவரை நிர்மாணித்துக் கொடுத்தவர் அன்ட்று புரொயிட் எனும் கலைஞன் ஆவார்.
- கோதமி விகாரையின் சித்திரங்கள் தொடராக வரையப்பட்டுள்ளன.
    - மகா மாயாதேவியின் கனவு.
    - சித்தார்த்தரின் பிறப்பு.
    - நடனக்கார்களின் ஆட்டங்களைக் காணுதல்.
    - யசோதரை திருமணம்.
    - நான்கு முன்னறிகுறிகளைக் காணுதல்.
    - மார யுத்தம்.
- இவ்வோவியங்கள் 192 சதம மீற்றர் அளவு உயரமான சுவரில் உயிரூட்டமாக வரையப்பட்டுள்ளன.
- ஜோர்ச் கீற் ஓவியங்களை வரையும் போது இரேகைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார். நேர்கோடு, குறுக்குக்கோடுகள், வளைகோடுகள் என்பதை பொதுவாக இவற்றில் காணலாம். இரேகைகளைக் கையாண்ட முறையே ஓவியங்களுக்கு உயிர் கொடுத்துள்ளன. மனித உடலின் நிறைவுத் தன்மையை இரேகைகள் மூலம் தெளிவாகக் காட்டியுள்ளார்.
- சிவப்பு, வெள்ளை, மண்ணிறம், மஞ்சள், நீலம், பச்சை எனும் வர்ணங்களை பிரயோகித்து கோதமி விகாரையின் சுவர்களை விசித்திரமாக அலங்கரிக்க ஜோர்ச் கீற் ஓவியக் கலைஞர் பெரும் பணியாற்றியுள்ளார்.
- மேற்குறிப்பிடப்பட்ட ஓவியங்களைத் தவிர விகாரையின் தியான மண்டப உட்சுவரிலும் வெளிச்சுவரிலும் (பிரதக்ஷினா பாதய) மூன்று பக்கச் சுவர்களில் பாரிய அளவில் மூன்று சித்திரங்கள் வரைந்துள்ளார். அவை உயரமான சுவரில் வரையப்பட்டுள்ளன.

## மார யுத்தம்

- கோதமி விகாரையின் ஓவியங்களுள் இது முக்கியமானது. இவ்வோவியத்தில் பிக்காசோவின் கவைடிவ வாதத் தன்மைப் பண்புகளைக் காட்டியிருக்கிறார்.
- விசித்திரமான கேத்திர கணித வடிவங்களைப் பயன்படுத்தி யுத்தப் படையினரின் பயங்கரமான சுபாவத்தைத் திறமையாக வெளிப்படுத்தியுள்ளார்.
- படைகளைச் சாம்பல், கறுப்பு போன்ற இருளான வர்ணங்களையும், புத்தபெருமானைச் சித்தரிக்க மஞ்சள் மெல்லிய மண்ணிறம் போன்ற வர்ணங்களையும் பிரயோகித்துள்ளார்.
- இரேகைகளின் தன்மையைப் போலவே முப்பரிமாணத்தைக் காட்ட வர்ணத்தை பிரயோகித்த விதமும் அவருக்கே உரியபாணியில் அமைந்துள்ளன.




**நாயிகா ஓவியம்**

- நாயிகா ஓவியங்கள் பலவற்றை ஜோர்ஜ் கீள் வரைந்துள்ளார்.
- எண்ணெய் வர்ண ஊடகத்தாலான கன்வஸ் ஓவியப்படைப்புக்களாகும்.
- நாயிகா சித்திரங்கள் நீண்ட விழிகளையும், அகன்ற உதடுகளையும் கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளன.
- நெற்றியையும் மூக்கையும் காண்பிக்க தனி நேர் கோட்டைப் பயன்படுத்தியிருக்கிறார்.
- இவ்வோவியங்கள் இந்து சமய மரபுக்கு ஒத்த இயல்பைப் பெற்றிருப்பதாக விமர்சிக்கப்படுகிறது.




**தேர்ச்சி 6.0** : சமய பண்பாட்டு அம்சங்கள், உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புல கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளை சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் கலை ஆக்கங்களை நயப்பார்.

**செயற்பாடு 6.4** : "டேவிட் பெயின்ரர் கலைஞரின் ஆக்கங்களை மதிப்போம்"

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்** :

- டேவிட் பெயின்ரரின் ஆக்கங்களைத் தேடிப்பார்ப்பார்.
- ஐரோப்பிய இயற்கைவாதச் செல்வாக்கை அவரது ஆக்கங்கள் மூலம் விபரிப்பார்.
- ஆக்கங்களின் ஓவிய குணாதிசயங்களை நயப்பார்.
- டேவிட் பெயின்ரர் ஓவியரது, ஓவியங்களின் சிறப்பான கலைப்பண்புகளை மதிப்பிடுவார்.

**தர உள்ளீடுகள்:**

- டேவிட் பெயின்ரர் கலைஞரின் வர்ண ஓவியங்கள்.
- இணைப்பு 6.1.2.1 இற்குரிய ஆய்வு /செயற்பாட்டுப் படிவப் பிரதிகள்.
- இணைப்பு 6.2.2.2 இற்குரிய வாசிப்புப் படிவத்தின் பிரதிகள்

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 6.1.4.1

- டேவிட் பெயின்ரர், கலைஞரின் கலை ஆக்கங்களைக் கொண்ட ஓவியங்களை மாணவர்களுக்குக் காட்சிப்படுத்துக.
- டேவிட் பெயின்ரரின் படைப்புக்களைச் சேரிகரிக்குமாறு மாணவர்களை வலியுறுத்துக.
- டேவிட் பெயின்ரரின் ஓவியங்களின் விடயப்பொருள், பாணி, செல்வாக்குகள் பற்றி வரைக.

(10 நிமிடங்கள்)

### படிமுறை 6.1.4.2

- இணைப்பு 6.1.2.1 இற்குரிய செயற்பாட்டு படிவப் பிரதிகளை மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கவும்.
- இணைப்பு 6.1.2.2 இற்குரிய வாசிப்புப் படிவத்தை மாணவர்களுக்குப் பகிர்ந்தளிக்கவும்.
- வாசிப்புப் படிவத்திலுள்ள விடயங்களைக் கொண்டு வினாக்களுக்கு விடையளிப்பதற்கு மாணவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.
- விடையளிப்பதற்கு மாணவர்களுக்கு உதவுங்கள்.

(20 நிமிடங்கள்)

### படிமுறை 6.1.4.3

- எழுமாறாகச் சில மாணவர்களின் விடைகளை மதிப்பிடுக.
- கலைஞர் டேவிட் பெயின்ரரின் ஆக்கங்களைப் பற்றி மீளாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :

பின்வரும் விடயங்களை உள்ளடக்கி இணைப்பு 6.1.4.1, இணைப்பு, 6.1.4.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

- ஓவியக் கலைஞர் என்ற வகையில் டேவிட் பெயின்ரர் வடிவமைத்த ஓவியங்கள் பற்றித் தேடியறிதல்.
- டேவிட் பெயின்ரரினது ஓவியங்களிலுள்ள வெவ்வேறு பாணிகளை விவரித்தல்.
- கிறிஸ்தவ ஓவியக் கலையில் புதுத்திருப்பத்தை ஏற்படுத்திய ஓவியக் கலைஞர்களில் ஒருவர் டேவிட் பெயின்ரர் எனக் குறிப்பிடுதல்.
- அவரது படைப்புக்களின் மூலம் ஐரோப்பிய இயற்பண்புவாத மரபின் செல்வாக்குகளை விவரித்தல்.
- கலைஞர் டேவிட் பெயின்ரரின் ஓவியங்களின் கலைப் பண்புகளை மதிப்பிடல்.

இணைப்பு 6.1.3.1

## ஆய்வுச் செயல் ஆலோசனைப் படிவம்

- உமக்கு தரப்பட்டுள்ள டேவிட் பெயின்ரர் கலைஞரின் கலை ஆக்கங்களை நன்றாக அவதானித்துக் கொள்க.
- உமக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தை நன்றாகப் படிக்கவும்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுக.
    1. டேவிட் பெயின்ரர் கலைஞர் பற்றிச் சுருக்கமாக அறிமுகக் குறிப்பு எழுதுக.
    2. அவரது பிரசித்திபெற்ற கலை ஆக்கங்களையும் அவை காணப்படுகின்ற இடங்களையும் குறிப்பிடுக.
    3. டேவிட் பெயின்டர் ஆக்கங்களை கீழ்க்காணும் விடயங்களின் கீழ் மதிப்பிடுக.
        - i தலைப்பு
        - i பாணி
        - ii செல்வாக்கு
        - iv. வர்ணப் பயன்பாடு
        - v. கலைப்பண்புகள்
            - தளத்தைப் பயன்படுத்துதல்.
            - பாவ உணர்ச்சி வெளிப்பாடு
- உமது கற்றலின் மூலம் பெற்றுக் கொண்ட பேற்றை வகுப்பிற்கு முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்க.

## வாசிப்புப் படிவம்

### டேவிட் பெயின்ரர்

- தேசிய ஓவியக் கலைஞரான டேவிட் பெயின்ரர் ஆங்கிலேய இனத் தந்தைக்கும் சிங்களத் தாயாருக்கும் 1900 ஆம் ஆண்டில் இந்தியாவில் அல்மேறா என்னும் இடத்தில் பிறந்தார். இவரது தந்தையார் ஒரு கிறிஸ்தவப் போதகராவார்.
- இங்கிலாந்து சென்று றோயல் அக்கடமியில் ஓவியக் கலையைக் கற்றுள்ளார்.
- ஐரோப்பிய மரபு சார்ந்த இயற்கை வாதப் பாணிப் பண்புகள் வெளிப்படும் வகையில் மனித வடிவை ஓவியமாக வரையும் பொழுது உடலின் அழகு, லயம், அகஇயல்புகள் என்பன சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டு உள்ளன.
- தேசிய புகழ் பூத்த ஓவியரான இவர் இலங்கைக் கலைச் சங்கத்தின் சமகாலக் கலைஞர்களுள் ஒருவராவர்.
- டேவிட் பெயின்ரது படைப்புக்களின் விடயப் பொருள்கள் வருமாறு:
  - பிரதிமை ஓவியம்
  - மனித உருவ ஒழுங்கமைப்பு
  - திரித்துவத் தேவாலய சுவரோவியங்கள்.




**வெற்றியுடன் ஜெரூசலத்திற்குள் பிரவேசித்தல்**

- டேவிட் பெயின்ரர் ஓவியக் கலைஞரின் படைப்புகளும் ஓவிய ஒழுங்கமைப்பு இயல்புகளும்.
  - உயிரோட்டத்தையும், மேனி அழகையும் நன்கு வெளிப்படுத்தும் வகையில் மனித உருவங்களைச் சித்தரித்தல்.
  - மனித மெய்நிலைகள், உணர்வுகளை வெளிப்படுத்தலும் காத்திரத் தன்மையைக் கொண்டிருத்தலும்.
  - முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுமாறு பிரகாசமான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டிருத்தல்.
  - கிறிஸ்தவக் கருப்பொருள்களைச் சித்தரிக்கும் போது ஐரோப்பியப் பண்பாடும் நிலவுருவில் இலங்கைப் பின்னணியும் சித்தரிக்கப்பட்டிருத்தல்.

- தேசிய கலாபவனத்தில் நிரந்தரமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள இந்த ஓவியம் கன்வஸ்துணி மீது எண்ணெய் வர்ணத்தினால் தீட்டப்பட்டுள்ளது.
- தளத்தில் உருவங்களைச் சித்தரிக்கும் போது முன்பகுதி, நடுப்பகுதி, பின்பகுதி மீது உருவங்களைத் ஸ்தாபித்து, ஓவியத்தின் அழகும் தூரநோக்கு இயல்புகளும் காட்டப்பட்டுள்ளன.
- முப்பரிமாண இயல்புகளுடன் அதிக இளஞ்சிவப்பு நிறம் சார்ந்த பிரகாசமான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- ஓவியத்தின் பின்னணியாக, ஜெரூசலம் பாலைவனத்துக்குப் பதிலாக, இலங்கை உலர்வலயத்தைச் சேர்ந்த மலைப்பாங்கான தரைப் பிரதேசம் சித்தரிக்கப்பட்டுள்ளது.

**நல்ல சமாரியன்**



- இது கண்டி திருத்துவத் தேவாலயத்தில் வரையப்பட்டுள்ள ஓர் ஓவியமாகும்.
- இயேசு நாதர் போதித்த உண்மைக் கதையொன்றின் ஒரு அங்கமே இந்த ஓவியத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. அதாவது அடிவாங்கிக் காயமடைந்த ஒருவருக்கு நல்ல சமாரியன் உதவி புரியும் சந்தர்ப்பமே இதுவாகும்.
- இயேசு பிரானின் கதையைச் சித்தரிக்கும், கண்டி திருத்துவ தேவாலய சுவரோவியங்களின் சிறப்பியல்பு, ஐரோப்பியப் பண்பாகும். உருவம், பின்னணி இலங்கைப் பின்னணியிலும் சித்தரிக்கப்பட்டுள்ளமையாகும்.
- இலங்கை மனிதரின் உருவங்கள், ஆடையணிகள், சூழற் தன்மை ஆகியன இங்கு தெட்டத் தெளிவாகக் காட்சியளிக்கும் இயல்புகளாகும்.
- ஐரோப்பிய ஓவியக் கலைக் கோட்பாடுப் பண்பில் ஆழத்தைத் காட்டுதல், தூரநோக்கு, முப்பரிமாண இயல்பு ஆகியவற்றை இந்த ஓவியத்தில் காணலாம்.

**தேர்ச்சி 6.0** : சமய பண்பாட்டு அம்சங்கள், உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புல கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளை சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் ஆக்கங்களை நயப்பார்.

**செயற்பாடு 6.1.5.** : "பழைமை வாய்ந்த இந்து கோவிற் ஓவியக் கலைஞர் - தாவடி மு. துரைசாமியின் படைப்புக்களை மதிப்பிடுவோம்.

**பாடவேளைகள்** : 1

**கற்றற் பேறுகள்:**

- தாவடி மு.துரைசாமியின் ஆக்கங்கள் காணப்படும் இடங்களைப் பெயரிடுவார்.
- அவ்விடங்களிற் காணப்படும் ஓவியங்களை பெயரிடுவார்.
- அவரது ஆக்கங்களிற் செல்வாக்குச் செலுத்திய அம்சங்களை விபரிப்பார்.
- ஓவியங்களுக்குப் பயன்படுத்திய வர்ணங்களின் தன்மையைத் தேடியறிவார்.
- கலைஞர் தாவடி மு.துரைசாமியின் ஆக்கங்களின் கலை அம்சங்களை மதிப்பார்.

**தர உள்ளீடுகள்:**

- கலைஞர் தாவடி மு.துரைசாமியின் வர்ண ஓவியங்கள். - நல்லூர் சட்டநாதர் கோயிற் சுவரோவியங்கள்.
- இணைப்பு 6.1.5.1 க்குரிய வாசிப்புக் கோவையின் பிரதிகள்
- இணைப்பு 6.1.5.2 செயற்பாட்டுப் படிவம்.

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படிமுறை 6.1.5.1**

- தாவடி மு.துரைசாமியின் ஓவிய ஆக்கங்கள் கொண்ட படங்களை காட்சிப்படுத்துங்கள்.
- அவர்களது ஆக்கங்களின் பின்னணி பற்றியும், ஓவியங்களின் விடயப்பொருள், செல்வாக்கு, பாணி நுட்பமுறைகள் பற்றியும் மாணவர்களிடம் கலந்துரையாடுங்கள்.
    - சுதேச கலைஞரின் படைப்புக்களை மதிப்பதன் முக்கியத்துவத்தை மாணவருக்கு விளக்குங்கள்.
- மாணவர்களைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.5.2**

- இணைப்பு 6.1.5.1இற்குரிய செயற்பாட்டுப் படிவத்தைக் மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- இணைப்பு 6.1.5.2 இல் உள்ள வாசிப்புப் படிவத்தினை வழங்கி அதனை கற்பதற்குத் தேவையான அறிவுறுத்தல்களையும் வழிகாட்டிகளையும் வழங்குங்கள். விடையளிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- வாசிப்புப் பத்திரத்தை வாசித்து விளக்கி, வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவரை வழிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.5.3**

- மாணவர்களை எழுமாற்றாகத் தெரிவு செய்து அவர்கள் எழுதிய விடைகளை மதிப்பிடுங்கள்.
- கலைஞர் தாவடி மு.துரைசாமியின் படைப்புக்கள் குறித்து மீட்டாய்வு செய்க.

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி, இணைப்பு 6.1.5.7, இணைப்பு 6.1.5.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- கலைஞர் தாவடி மு.துரைசாமியின் ஓவியங்களைப் பெயரிடுதல்.
- கலைஞர் தாவடி மு.துரைசாமியினது ஓவியங்களின் கலைப் பண்புகளைத் தேடியறிதல்.
- இவர் இந்து சமயச் ஓவியக் கலையில் புதிய போக்கை ஏற்படுத்திய ஓவியக் கலைஞர் எனக் கூறுவார்.
- அவரது ஓவியங்களிற் செல்வாக்குச் செலுத்திய இந்துக் கலைப் பாரம்பரியத்தின் தாக்கத்தை விவரித்தல்.
- கலைஞர் தாவடி மு.துரைசாமியின் ஓவியங்களை நயந்து மதித்தல்.

இணைப்பு 6.1.5.1

## செயற்பாட்டுப் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கலைஞர் தாவடி மு.துரைசாமியின் ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

01. கலைஞர் தாவடி மு.துரைசாமி பற்றிய சுருக்க அறிமுகம் ஒன்றினைத் தருக.
02. அவரது பிரசித்திபெற்ற படைப்புக்களையும் அவை காணப்படும் இயல்புகளையும் குறிப்பிடுக.
02. பின்வரும் விடயங்களின் கீழ் கலைஞரின் ஆக்கங்களைப் பற்றி மதிப்பீடு செய்யுங்கள்.
    - i. கருப்பொருள்
    - i கலைப்பாங்கு
    - ii. பாணி
    - iv. நுட்பமுறை
    - கலை அம்சங்கள்
        - உருவங்களைப் பயன்படுத்துதல்.
        - வர்ணங்களைப் பயன்படுத்துதல்.
        - தளத்தைப் பயன்படுத்துதல்.
        - பாவ - உணர்வு வெளிப்பாடு.
    - உங்கள் தேடல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

இணைப்பு 6.1.5.2

## வாசிப்புப் படிவம்

- ஓவியர் தாவடி மு.துரைசாமி அவர்கள் 19ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்தவர்.
- இவர் தென் இந்திய தஞ்சாவூர் (Thanjavur) ஓவியங்களின் பாணி முறையைப் பின்பற்றியுள்ளார்.
- ஐரோப்பிய யதார்த்தவாதத்தையும் (realism) கீழைத்தேய ஓவியப் பாணி முறைகளின் இயல்புகளையும் இணைத்து இவர் வரைந்துள்ளார்.
- நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலில் வரையப்பட்ட வெள்ளைக்கை ஐயரும் விநாயகரும், வெள்ளைச் சேவல், அலங்காரங்கள் என்பன சிறப்பானவை.
- இவ்வோவியங்களிற் சிறப்பாக இயற்கையான வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டமையும் கபில, நீல நிறங்களின் பாவனையும் குறிப்பிடப்படுகின்றன.
- சுண்ணாம்புக் காரையின்(பூச்சு) மீது சுவரோவியமாக வரையப்பட்டவை.
- கீழைத்தேய மரபினை பின்பபற்றிய கோட்டை மையப்படுத்தியதாகவும் கபில நிறத்திலும் காணப்படுகின்றது. நிறம் தொனி நிலை வேலைப்பாடு கொண்டது.
- இவரது கோயில்சார் ஓவியங்களுள் தாவடி முருகமூர்த்தி கோவிலில் உள்ள பாற் காவடிக்காரன், வள்ளியை ஈன்ற மான், வசிட்டரும் காராம் பசுவும், முருகன் கீழப்பிரமாண வேடத்தில் தோன்றி வள்ளியை யானையிடமிருந்து காத்தல், வேடர்கள் என்பன சிறப்பானவை.
- இவரது ஓவியங்கள் யாழ்ப்பாணக் கிட்டங்கி, காங்கேசன்துறைக் கிட்டங்கி மற்றும் பல தனியார் வீடுகளிலும் காணப்பட்டன.

### சட்ட நாதர், சிவன் கோவில், கூவும் வெள்ளைச் சேவல் ஓவியம்



- கம்பீரமான தோற்றத்துடன் யதார்த்த பாணியில் சேவலுக்குரிய குணப்பண்புகள் வெளிப்படுத்தப்பட்டு வரையப்பட்டுள்ளது.
- ஐரோப்பிய யதார்த்தபாணியின் உள்வாங்குகை என்பது இங்கு தெளிவாக காணப்படுகின்றது.
- இளங்கபில நிறச்சாயல் ஓவியமெங்கும் காணப்படுகிறது.
- உலர் சாந்தின் மீது ஓவியம் வரையும் நுட்பமுறையில் இயற்கை வர்ணங்களைக் கொண்டு ஓவியம் வரையப்பட்டுள்ளது.
- இது இங்கிருந்த முருகன் ஓவியத்தின் ஓர் பகுதியாகக் காணப்பட்டது.
- இது இங்கிருந்த முருகன் ஓவியத்தின் ஓர் பகுதியாகக் காணப்பட்டது.

**சட்டநாதர் சிவன் கோவில் வெள்ளைக்கை ஐயரும் விநாயகரும்**



- சட்டநாதர் ஆலய பூசகரான வெள்ளைக்கை ஐயரதும் விநாயகரதும் உருவங்கள் ரேகைக்கு முக்கியத்துவம் கொடுத்து வரையப்பட்டுள்ளது.
- விநாயகருக்கு பூசை செய்வது போல இவ்வுருவம் வரையப்பட்டுள்ளது.
- கபில நிறச் சாயல் கொண்ட வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.
- தென் இந்திய தஞ்சாவூர் ஓவியங்களின் பாணியும், ஐரோப்பிய யதார்த்தவாதப் பாணியும் இணைந்ததாகவுள்ளது.
- விநாயகர் உருவம் அலங்கரிக்கப்பட்ட ஒளி வட்டம் கொண்டது.
- தீபாராதனையில் ஈடுபடும் வெள்ளைக்கை ஐயரினை விநாயகரிலும் சிறிதாகக் காட்டப்பட்டுள்ளது.
- பின்னணி தட்டையாக விடப்பட்டுள்ளது.
- இயற்கையான வர்ணங்களைக் கொண்டு, சுண்ணாம்புக் காரையின்(பூச்சு) மீது வரையப்பட்டு இது காணப்படுகின்றது.

**தேர்ச்சி 6.0** : சமய பண்பாட்டு அம்சங்கள், உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளைச் சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 6.1** : தெரிவு செய்த சுதேச கலைஞர்களின் ஆக்கங்களை நயப்பார்.

**செயற்பாடு 6.1.6** : "ஓவியக் கலைஞர் பெரிய தம்பி சுப்பிரமணியத்தின் படைப்பாக்கங்களை மதிப்போம்."

**பாடவேளைகள்** : 2

**கற்றற் பேறுகள்:**
- கலைஞர் சுப்பிரமணியம் ஓவியக்கலைஞரின் படைப்புக்கள் காணப்படும் இடங்களையும் அப்படைப்புக்களான ஓவியங்களையும் பெயரிடுவர்.
- கலைஞர் சுப்பிரமணியத்தின்(மணியம்) படைப்புக்களின் கலைப் பண்புகளை மதிப்பிடுவர்.
- அவரது படைப்புக்கள் மீது செல்வாக்குச் செலுத்திய அம்சங்களை விபரிப்பர்.
- ஓவியங்களுக்காக அவர் பயன்படுத்திய வர்ணங்களின் தன்மையைத் தேடியறிவர்.

**தர உள்ளீடு:**
- பெ.சுப்பிரமணியம் வரைந்த ஓவியங்கள்.
    - அகத்தியரும் விநாயகரும் - இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார்.
    - வள்ளியை யானை துரத்துதல் - இணுவில் பரராஜசேகரப் பிள்ளையார்.
- இணைப்பு 6.1.6.1 செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகள்
- இணைப்பு 6.1.6.2 வாசிப்புப் படிவப் பிரதிகள்

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 6.1.6.1
- பெ.சுப்பிரமணியம் கலைஞரின் ஓவியங்களை மாணவருக்குக் காட்சிப்படுத்துக.
- அவ்வோவியங்களின் கருப்பொருள், பாணி, செல்வாக்கு, என்பவை பற்றி மாணவர்களிடம் வினவுக.
- சுதேச ஓவியக் கலைஞன் ஒருவனின் படைப்புக்களை மதிப்பிடுவதன் முக்கியத்துவத்தை மாணவர்களுக்கு விளக்குக.
- மாணவரைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(10 நிமிடங்கள்)

### படிமுறை 6.1.6.2
- பொருத்தமான முறையைக் கையாண்டு இணைப்பு 6.1.6.1க்குரிய செயற்பாட்டுப் படிவத்தினை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- இணைப்பு 6.1.5.2 இற்குரிய வாசிப்புப் படிவத்தினை மாணவர்களுக்கு வழங்கி அதனை வாசிக்குமாறு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- வாசிப்புப் படிவத்தினை வாசித்து விளங்கி, வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.1.6.3**

- மாணவர்களை எழுமாறாகத் தெரிவு செய்து சில மாணவரின் விடைத்தாள்களை மதிப்பிடுதல்.
- கலைஞர் சுப்பிரமணியத்தின் படைப்புக்கள் பற்றி மீட்டாய்வு செய்யுங்கள்.

(20 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :

பின்வரும் விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி, இணைப்பு 6.1.6.1, இணைப்பு 6.1.6.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- கலைஞர் சுப்பிரமணியத்தின் ஓவியப் படைப்புக்களைக் குறிப்பிடுதல்.
- அவரது ஓவியங்களின் கலைப் பண்புகளைத் தேடியறிதல்.
- அவர் சமய ஓவியக் கலையின் புதிய பாணியை அறிமுகஞ் செய்த ஓர் ஓவியக் கலைஞர் ஆவார் எனக் குறிப்பிடுவார்.
- அவரது படைப்புக்கள் மீது செல்வாக்குச் செலுத்திய இந்துக் கலைப் பாரம்பரியத்தின் தாக்கத்தை விபரித்தல்.
- கலைஞர் சுப்பிரமணியத்தின் ஓவியங்களை கிரகித்து மதித்தல்.

இணைப்பு 6.1.6.1

## செயற்பாட்டுப் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள கலைஞர் சுப்பிரமணியத்தின் ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

01. கலைஞர் சுப்பிரமணியம் பற்றிய சுருக்க அறிமுகம் ஒன்றினை எழுதுக.

02. பின்வரும் விடயங்களின் கீழ் கலைஞர் சுப்பிரமணியத்தின் ஆக்கங்களைப் பற்றி மதிப்பீடு செய்யுங்கள்.

i கருப்பொருள்
i கலைப்பாங்கு
ii பெற்ற செல்வாக்கு
iv. நுட்பமுறை
v. கலை அம்சங்கள்
- உருவங்களைப் பயன்படுத்துதல்.
- வர்ணங்களைப் பயன்படுத்துதல்.
- தளத்தைப் பயன்படுத்துதல்.
- பாவ - உணர்வு வெளிப்பாடு

- உங்கள் தேடல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

## வாசிப்புப் படிவம்
## பெரியதம்பி சுப்பிரமணியம் (மணியம்)

- பிறப்பு - 21.09.1923 - இறப்பு 15.03.2006 நல்லூர், யாழ்ப்பாணம்.
- தமிழ் மக்களிடையே ஓவியம் பற்றிய வெகுசன (Popular/எதிர்பார்ப்பின் ஓர் வடிவமாக இவரது ஓவியங்கள் காணப்படுகின்றன.
- யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த மிகப் பிரசித்தி பெற்ற ஓவியராவார்.
- சுயமாக ஓவியக்கலையைக் கற்றுக் கொண்டார்.
- ரவிவர்மாவின் புராண இதிகாச ஓவியங்களின் தொடர்ச்சியான இந்திய வெகுசன காட்சிப் பண்பாட்டின் வெளிப்பாடுகளான சினிமாப் படங்கள், கலண்டர் படங்கள், சுவரொட்டிகள் என்பவற்றினூடு பரவலான தெய்வப் படங்களின் செல்வாக்குகள் காணப்படுகின்றன.
- இப்படங்களில் மாயவாத (illusionistic) வெளிப்பாட்டு முறையில் தெய்வ விக்கிரகப் படங்களும், புராண இதிகாச சம்பவங்களும் உள்ளடக்கமாகக் கையாளப்பட்டுள்ளன.
- கோயில் சுவர்களிலும், திரைச்சீலைகளிலும் வரைந்துள்ளார். அதேவேளை பதாதைகளையும் வெட்டுருக்களையும் (Cut out) மிகப் பிரமாண்டமான அளவில் வரைந்துள்ளார்.
- இவரது கோவில் ஓவியங்கள், திரைச்சேலைகள் காணப்படும் இடங்களாக
  - நல்லூர் - கைலாச பிள்ளையார் கோவில்
  - இணுவில் - பரராசசேகர பிள்ளையார் கோவில்
  - சுதுமலை - அம்மன் கோவில்
  - வல்வெட்டித்துறை - சிவன், அம்மன் கோவில்
  - நல்லூர் - வீரமாகாளி அம்மன் கோவில்
  - வேலணை - அம்மன் கோவில் என்பன குறிப்பிடத்தக்கவையாகும்.

**அகத்தியரும் விநாயகரும் (இணுவில், பரராசசேகரப் பிள்ளையார் கோவில்)**



- அவரது சிறந்த ஓவியங்களில் ஒன்றாக அகத்தியரும் விநாயகரும் (இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் கோவில்) அகத்தியரின் கமண்டலத்தினைக் காகமாக வந்த விநாயகர் தட்டியதால் காவிரி ஆறு தோன்றும் கதை மூன்று தொடர் காடசிகளாக சித்திரிக்கப்பட்டுள்ளது. இது ரவிவர்மாவின் சாயலுடைய மாயவாத உத்தி முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- சுண்ணாம்பு சுவரின் மீது தளத் தயாரிப்புக்கள் எதுவுமற்று எனாமல் வர்ணத்தால் ஓவியம் தீட்டப்பட்டுள்ளது.
- தூர தரிசனம் காட்டப்பட்டுள்ளது. முப்பரிமாணம் நிறத்தின் தொனி வேறுபாடுகளுடாக (tone) கட்டியெழுப்பப்படுகின்றது.
- அளவுப் பரிமாணம் இயற்கையை ஒத்துள்ளது.
- கவர்ச்சிகரமான நிறப்பாவனை.
- உருவம் வர்ணத்தொனி நிலைகளினூடு கட்டியெழுப்பப்படுவதனால் நேரடியாகக் கோடுகள் காணப்படவில்லை.
- முன்னணியில் உள்ள உருவங்களின் செயற்பாடுகளுக்கு பொருந்துவதாகவும் அதற்கு வலுச் சேர்ப்பதாகவும் பின்னணியில் நிலவுருக் காட்சிகள் (தரைத்தோற்ற) (Land scape) வரையப்பட்டுள்ளன.
- மூன்று பிரிவுகளாக உள்ள ஓவியத்தில் ஒவ்வொரு பகுதியும் வேறுபட்ட மனநிலைகளை வெளிப்படுத்துகின்றன. முதலாவது பகுதியில் காகத்தினை துரத்தும் அகத்தியரும், 2ஆம் பகுதியில் சிறுவனாக மாறிய விநாயகரை அகத்தியர் துரத்திச் செல்கிறார் அதில் சிறுவன் கேலி செய்யும் பாங்கிலும் அகத்தியர் கோபத்திலும் சித்தரிக்கப்பட்டுள்ளது.
- மூன்றாவது காட்சியில் வந்தது விநாயகர் என உணர்ந்ததால் அகத்தியர் விநாயகரை பணிந்து வழிபடும் நிலை காட்டப்பட்டுள்ளது. இக்காட்சி ஒழுங்கினூடு அகத்தியரின் பணிவும் பக்திப் பரவச நிலையும் கொண்டு வரப்பட்டுள்ளது.

**வள்ளியை யானை துரத்துதல் -(பரராசசேகரப் பிள்ளையார் கோவில் இணுவில்)**



- யானையாக வந்த விநாயகரால் துரத்தப்படும் வள்ளி சந்நியாசியாக வந்த முருகனிடம் அடைக்கலம் பெறுதல் காட்டப்பட்டுள்ளது. தொனி நிலை (tone) வேறுபாடுகள் ஊடாக முப்பரிமாணமும், தூரதரிசனமும் கொண்டு வரப்பட்டுள்ளது.
- சுவர் மீது தளத் தயாரிப்புக்கள் ஏதுமற்று எனாமல் வர்ணம் தீட்டப்பட்டுள்ளது.
- யானையாக வந்தது விநாயகர் என்பது குறியீட்டு ரீதியாகக் காட்டப்பட்டுள்ளது.
- நிறம் குறியீட்டு அர்த்தத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மிகவும் பிரகாசமான நிறப் பாவனை காணப்படுகிறது.
- கோடுகளற்று ஒளி நிழற்படுத்துகை ஊடாக உருவங்கள் வரையப்பட்டுள்ளன. விநாயகரும் யானையும் ஒரு பகுதியிலும், வள்ளியும் சந்நியாசியும் மறுபுறத்திலும் இருப்பினும் இவ்விரு பகுதியையும் ஒன்றிணைப்பதாக நிலவுரு காணப்படுகின்றது.
- வள்ளிக்கு அச்சத்தினை ஊட்டும் வகையில் யானை சித்தரிக்கப்பட்டுள்ளது. படத்தில் திகிலும் அச்சமும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 6.0** : சமய பண்பாட்டு அம்சங்கள், உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளை சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : தெரிவு செய்த வெளிநாட்டுக் கலைஞர்களின் கலைப் படைப்புக்களை நயப்பார்.

**செயற்பாடு 6.2.1.** : "ஓவியர் – லியனாடோ டாவின்சியின் படைப்புக்களை மதிப்போம். "

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்:**

- கலைஞர் லியனாடோ டாவின்சியினது படைப்புக்களைப் பெயரிடுவார்.
- அவரது புதிய படைப்பாக ஓவியப்பாணிக்கு அடிப்படையான செல்வாக்குகளை விவரிப்பார்.
- சித்தரிப்பு முறைகளையும், கோட்பாட்டு இயல்புகளையும் விவரிப்பார்.
- ஓவியங்களுக்காகப் பயன்படுத்திய வர்ணங்களையும் பின்னணிக் காட்சிகளின் தன்மையையும் தேடியறிவார்.
- லியனாடோ டாவின்சியினது ஓவியப் படைப்புக்களின் கலைப்பண்புகளை மதிப்பிடுவார்.

**தர உள்ளீடு:**

- லியனாடோ டாவின்சியின் வர்ண ஓவியங்கள்
  - பாறை மீது கன்னி
  - இறுதி இராப்போசனம்
  - மொனாலிசா
- இணைப்பு 6.2.1.1 செயற்பாட்டுப் பத்திரப் பிரதிகள்
- இணைப்பு 6.2.1.2 வாசிப்புப் பத்திரம் பிரதிகள்

**செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

**படிமுறை 6.2.1.1**

- லியானாடோ டாவின்சி வரைந்த ஓவியங்களை நோக்கச் செய்க.
- இவற்றின் கருப்பொருள், நுட்பமுறை, பாணி என்பவவை பற்றி வினவுக.
- லியனாடோ டாவின்சியின் ஓவியங்களைச் சேகரிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்துக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.2.1.2**

- இணைப்பு 6.1.2.1 செயற்பாட்டுப் பத்திரப் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 6.1.2.2 வாசிப்புக் கோவையை வாசிக்கச் செய்க.
- வாசிப்புக் கோவையை வாசித்து, விளக்கி விடையளிக்குமாறு அறிவுறுத்தல்களை வழங்கி உதவுக.

(20 நிமிடங்கள்)

## படிமுறை 6.2.1.3

- எழுமாறாகத் தெரிவு செய்யப்பட்ட சில மாணவர்களின் விடைத்தாள்களை மதிப்பிடுக.
- ஓவியரின் கலைப் படைப்புகளைப் பற்றி மீட்டாய்வு செய்து கலந்துரையாடுக.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி, இணைப்பு 6.1.6.1, இணைப்பு 6.1.6.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- லியனாடோ டாவின்சியின் ஓவியங்கள் பற்றி விளக்கிக் கூறுதல்.
- லியனாடோ டாவின்சியின் ஓவியங்களின் கலைப் பண்புகளைத் தேடியறிதல்.
- லியனாடோ டாவின்சி ஐரோப்பிய ஓவியக் கலையில் புரட்சியை ஏற்படுத்திய ஓர் ஓவியக் கலைஞர் என இனங்காண்பர்.
- லியனாடோ டாவின்சி பயன்படுத்திய வர்ணங்களையும் பின்னணி நிலவுருக் காட்சிகளையும் விவரித்தல்.

இணைப்பு 6.2.1.1

## செயற்பாட்டுப் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள லியனாடோ டாவின்சின் ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

  01. கலைஞர் லியனாடோ டாவின்சி பற்றிய சுருக்கமான அறிமுகம் ஒன்றினைத் தருக.
  02. பின்வரும் கருத்துக்களின் கீழ் கலைஞர் ஆக்கங்களைப் பற்றி மதிப்பீடு செய்யுங்கள்.
      - i. கருப்பொருள்
      - ii. கலைப்பாங்கு
      - iii. பாணி
      - iv. நுட்பமுறை
      - v. கலை அம்சங்கள்
        - உருவங்களைப் பயன்படுத்துதல்.
        - வர்ணங்களைப் பயன்படுத்துதல்.
        - தளத்தைப் பயன்படுத்துதல்.
        - பாவ உணர்ச்சி வெளிப்பாடு
  - உங்கள் தேடல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

இணைப்பு 6.2.1.1

## வாசிப்புப் படிவம்

- லியனாடோ டாவின்சி மறுமலர்ச்சிக் காலத்தில் உருவான சிறந்த புகழ்பெற்ற ஓவியராவார்.
- இவர் கி.பி. 1452ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ஆம் திகதி இத்தாலியின் புளோரன்ஸ் நகரத்தின் வின்சி எனும் சிறிய கிராமத்தில் பிறந்தார்.
- வெராச்சியோ எனும் ஓவியரிடம் ஓவியம் பயின்று தனது திறமைகளை மேலும் வளர்த்துக் கொண்டார்.
- ஓவியக்கலை மட்டுமல்லாமல் சங்கீதம், பொறியியல், கட்டட நிர்மாணம், புதிய நிர்மாணங்களை அமைத்தல் என்பவற்றிலும் நாட்டம் கொண்டு அவற்றில் தனது திறமைகளையும் வெளிப்படுத்தியுள்ளார்.

**இவரது ஓவியங்களுள்,**

- பாறை மேல் கன்னி (Vergin of the rocks)
- இறுதி இராப்போசனம் (The last supper)
- மொனாலிசா (Monalisa )


முக்கியமானவையாகும்.

**பாறை மேல் கன்னி** :Virgin of the rocks)



- கன்னி மரியாளும் இருபாலகர்களும் காணப்படுகின்றனர். கன்னி மரியாளுக்கு அருகில் இரு பாலகர்களும் ஒரு தேவதூதனும், மலைக்கு மேல் உள்ள ஒரு காட்சி இதனைப் பிரதிபலிக்கிறது.
- முக்கோண மாதிரியின்படி அமைக்கப்பட்டுள்ளது.
- கன்னி மரியாளின் முகத்தில் காருண்யம், பாலகர்களின் மென்மை என்பவற்றை ஓவியர் துல்லியமாக எடுத்திக் காட்டியுள்ளார்.
- பின்னணியில் தாவரங்கள், பல வடிவங்களில் உள்ள மலைகள் காட்டப்பட்டுள்ளது. தூரத்தில் காணக்கூடிய வகையில் பூமியையும் சித்தரித்துள்ளார். அதாவது தூரதரிசனம் உபயோகித்துள்ளார். ஒளி நிழல் காட்டி வரைந்துள்ளார்.
- அவர் பிரயோகித்த நுட்பமுறை அவரது முதிர்ச்சியை எடுத்துக் காட்டுகிறது.
- கன்னி மரியாளினதும் பாலகர்களினதும் முகத்தில் ஒளி காட்டப்பட்டுள்ளது.
- இவரது வர்ணத் தீட்டல் நுட்பமுறை கியுரெஸ்கியுரோ (Chiaros curo) எனப்படுகிறது.
- இருளான வர்ணங்கள் உபயோகித்துள்ளார். மண்ணிறத்தைப் பல விததில் பயன்படுத்தி உள்ளார். தற்சமயம் இவ்வோவியம் லண்டன் நகரிலுள்ள நூதனசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## **இறுதி இராப்போசனம் ‹The Last Supper›**



- இது லியனாடோ டாவின்சியின் மற்றுமொரு உன்னத படைப்பாகும். மிலானைச் சேர்ந்த மரியா டெலா கிரசி டொமினிக்கன் துறவிகளின் இல்லச் சுவரில் டெம்பரா முறையில் (உலர்ந்த சாந்தின் மேல்) இது சித்தரிக்கப்பட்டுள்ளது.
- மிகவும் உணர்வுபூர்வமாக இது வரையப்பட்டுள்ளது. சித்திரத்தின் மத்தியில் இயேசுநாதரும், இரு புறத்தில் பன்னிரு அப்போஸ்தலர்களும் வரையப்பட்டுள்ளனர். இயேசு நாதரை காட்டிக்கொடுத்த யூதாஸ் என்பவர் முகத்தில் குற்றஉணர்வு வெளிப்படுகிறது. கியுரெஸ்கியூரோ எனும் ஒளி - இருள் வர்ணக் கோட்பாட்டின்படி மத்தியில் இருக்கும் இயேசுநாதர் ஒளிபொருத்தியாவராகவும் ஏனையோர் இருண்ட வர்ணங்களாலும் வரையப்பட்டுள்ளனர். இது ஓவியரின் திறமையை எடுத்துக் காட்டுகிறது.
- கபில வர்ணத்தின் வெவ்வேறு சாயல்களைக் கொண்ட இருள் நிறங்கள், முப்பரிமாண இயல்பினையும், தூரதரிசன இயல்பினையும் வெளிப்படுத்துமாறு பயன்படுத்தப்பட்டுள்ளன.

## மொனாலிசா :Monalisa*



- லியனாடோ டாவின்சியின் புகழ்பெற்ற ஓவியங்களில் ஒன்றான மொனாலிசா ஓவியம் பிரான்ஸ் நாட்டில் லூவர் நூதனசாலையில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.
- மொனாலிசா பொப்லர் எனும் வகைப் பலகையில் எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.
- பிரான்சிஸ்கோ ஜியோகொண்டா எனும் வணிகனின் மனைவியினது மெய்யுரு(Portrait) என ஏற்றுக்கொள்ளப்பட்ட இவ்வோவியம் பற்றி வேறு கருத்துக்களும் கூறப்படுகின்றன.
- இவ்வோவியத்திலும் தூரதரிசனம் செம்மையாக்கக் காட்டப்பட்டுள்ளது. தூரத்தில் நிலவுருக்காட்சியைக் காணக்கூடியதாக இருக்கிறது. முகம், மார்பு கைகள் எனும் பகுதிகளுக்கு ஒளி காட்டப்பட்டுள்ளது.
- மொனாலிசாவின் மென்மையான புன்னகையும், எங்கிருந்து பார்த்தாலும் பார்வையாளனைப் பார்ப்பது போன்ற பார்வையும் இரசிப்பவர்களை இன்றும் கவருகின்றன.

**தேர்ச்சி 6.0** : சமய பண்பாட்டு அம்சங்கள், உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புல கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளை சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : தெரிவு செய்த வெளிநாட்டுக் கலைஞர்களின் கலைப் படைப்புக்களை நயப்பார்.

**செயற்பாடு 6.2.2** : “மைக்கல் ஆஞ்சலோவின் படைப்புக்களை நயப்போம் “

**பாடவேளைகள்** : 01

**கற்றற் பேறுகள்:**

- மைக்கல் ஆஞ்சலோவின் ஓவியங்களையும், சிற்பங்களையும் குறிப்பிடுவார்.
- மைக்கல் ஆஞ்சலோவின் படைப்புக்கள் மற்றும் தகவல்களைத் திரட்டுவார்.
- புதிய ஆக்கப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த நுட்பமுறைகளை விவரிப்பார்.
- சித்தரிப்பு முறைகளையும் கோட்பாட்டுப் பண்புகளையும் விவரிப்பார்.
- மைக்கல் ஆஞ்சலோவினது படைப்புக்களின் கலைப் பண்புகளை நயத்து மதிப்பார்.

**தர உள்ளீடுகள்:**

- கலைஞர் மைக்கல் அஞ்சலோவின் படைப்புக்கள்
  - பியெட்டா (Pieta)
  - டேவிட் (David)
  - ஆதாமைப் படைத்தல் (The Creation of Adam)
- இணைப்பு 6.2.2.1 செயற்பாட்டுப் படிவப் பிரதிகள்
- இணைப்பு 6.2.2.2 வாசிப்புக் கோவையின் பிரதிகள்

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 6.2.2.1

- கலைஞர் மைக்கல் அஞ்சலோவின் படைப்புக்களை வகுப்பில் காட்சிப்படுத்தி அவை தொடர்பாக மாணவரின் கருத்துக்களை வினவுங்கள்.
- இவ்வாறான படைப்புக்களைப் பயில்வதன் பெறுமானத்தைக் கலந்துரையாடுங்கள்.

(10 நிமிடங்கள்)

### படிமுறை 6.2.2.2

- 6.2.2.1 இன் செயற்பாட்டுப் படிவத்தினை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- இணைப்பு 6.2.2.2இல் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தை வாசிக்க வழிப்படுத்துங்கள்.
- வாசிப்புப் பத்திரத்தை வாசித்து விளங்கி, வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.

(20 நிமிடங்கள்)

## படிமுறை 6.2.2.3

- எழுமாறாகத் தெரிவு செய்த சில மாணவர்களின் விடைத்தாள்களை மதிப்பிடுங்கள்.
- குறித்துக் கொண்ட தகவல்களின் குறைபாடுகளை நிவர்த்தி செய்து கொள்ளுமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- குறைபாடுகளை நிவர்த்தி செய்து சுருக்கமாக மீட்டாய்வு செய்யுங்கள்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :

பின்வரும் விடயங்கள் மீது கவனஞ் செலுத்தி, இணைப்பு 6.1.6.1, இணைப்பு 6.1.6.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடாத்துங்கள்.

- மைக்கல் ஆஞ்சலோவின் ஓவியங்களையும் குறிப்பிடுதல்.
- மைக்கல் ஆஞ்சலோவினது படைப்புக்கள், மற்றும் தகவல்களைத் திரட்டுதல்.
- புதிய ஆக்கப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த நுட்பமுறைகளை விவரித்தல்.
- சித்தரிப்பு முறைகள் மற்றும் கோட்பாட்டுப் பண்புகளை விவரித்தல்.
- மைக்கல் ஆஞ்சலோவினது படைப்புக்களின் கலைப்பண்புகளை நயந்து மதித்தல்.

இணைப்பு 6.2.2.1

## செயற்பாட்டுப் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மைக்கல் அஞ்சலோவின் ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.
  01. கலைஞர் மைக்கல் அஞ்சலோ பற்றிய சுருக்க அறிமுகம் ஒன்றினைத் தருக.
  02. அவரது பிரபல்யம் மிக்க படைப்புக்களையும் அவை காணப்படும் இடங்களையும் குறிப்பிடுக.
  03. பின்வரும் விடயங்களின் கீழ் கலைஞரின் ஆக்கங்களைப் பற்றி கணிப்பீடு செய்யுங்கள்.
      - கருப்பொருள்
      - கலைப்பாங்கு
      - பெற்ற செல்வாக்கு
      - நுட்பமுறை
      - கலை அம்சங்கள்
        - உருவங்களைப் பயன்படுத்துதல்.
        - வர்ணங்களைப் பயன்படுத்துதல்.
        - தளத்தைப் பயன்படுத்துதல்.
        - பாவ - உணர்ச்சி வெளிப்பாடு.
      - உங்கள் தேடல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

## ஒப்படை

ஒட்டுமொத்தப் பாடமும் உள்ளடக்கப்படும் வகையில் வினாக்கள் வழங்கி, விடையளிக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.

இணைப்பு 6.1.2.2.

## வாசிப்புப் படிவம்

- மைக்கல் ஆஞ்சலோ கி.பி.1475 இல் இத்தாலி நாட்டில் ∴புளோரன்ஸ் நகரில் காசல் கப்ரீஸ் எனும் இடத்தில் பிறந்தார்.
- அவர், ஓவியம், சிற்பம், செதுக்குவேலை, கட்டடக்கலை ஆகியவற்றில் இயல்பான திறனைக் கொண்டிருந்தார். மறுமலர்ச்சிக் காலத்திற் தோன்றிய புகழ்பூத்த கலைஞராக இவர் கணிக்கப்படுகின்றார்.
- ஆரம்பத்தில் ஜர்லன்டாயோ, பர்டல்டோ ஆகிய கலைஞர்களிடத்தே கலை பயின்றுள்ளார்.
- தமது 15வயது தொடக்கம் ஓவியங்கள், சிற்பங்கள் படைப்பதில் திறனைக் காட்டியுள்ளார்.
- இவர் சலவைக் கல்லில் படைத்த மிகச் சிறந்த சிற்பங்கள்:
    - பியெட்டா
    - டேவிட்
    - மோசஸ்
    - இறக்கும் அடிமை
    - கலகக்கார அடிமை
    - 11ஆம் ஜூலியஸ் பாப்பாண்டவரின் கல்லறை
    - புரூகஸ் அன்னை மரியாள்

ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

- மைக்கல் ஆஞ்சலோ சிஸ்டைன் தேவாலய ஓவியங்களையும், கன்வஸ் மீது எண்ணெய் வர்ணத்தைப் பயன்படுத்தி புனித குடும்பம் எனும் ஓர் ஓவியத்தையும் படைத்துள்ளார்.

## பியெட்டா (Pieta)









- சிலுவையில் மரணித்துக் களையப்பட்ட யேசுபிரானின் உயிரற்ற உடலை அன்னை மரியாள் மடியில் வைத்திருக்கும் காட்சியையே மைக்கல் ஆஞ்சலோ இந்தச் சிற்பத்துக்கான கருப்பொருளாகக் கொண்டுள்ளார்.
- சலவைக் கல்லில் செதுக்கப்பட்டுள்ள இந்தச் சிற்பம் ரோமாபுரியில் புனித பீற்றர் தேவாலயத்தில் தற்போது காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.
- யேசுபிரானின் உயிரற்ற உடலின் தன்மையும், அன்னை மரியாளின் ஆடைகளும் சந்தத்துக்கமைய இயல்பான வகையில் தத்ரூபமாக சலவைக் கல்லில் வடிவமைக்கப்பட்டுள்ளன.
- தாயையும், மகனையும் சம வயதினர்களாக காட்டியுள்ளதனால் இருவரிலும் தேவ லோகத்தன்மையை எடுத்துக்காட்ட முயற்சி செய்யப்பட்டுள்ளது.
- மனிதத்துவம் தொடர்பான பரிவுணர்வு இந்த சிற்பத்தில் காட்டப்படுகின்றது.

**டேவிட் ፡David)**



- வலிமை, துணிவு, மானுட இரக்கம், இளமை ஆகிய பண்புகள் இச்சிற்பத்தின் மூலம் நன்கு காட்டப்பட்டுள்ளது.
- சலவைக் கல் ஊடகத்தில் முழுப் புடைப்புச் சிற்பமாக வடிவமைக்கப்பட்டுள்ள இச்சிலை 14 அடி 3 அங்குல உயரமான நிர்வாண ஆண் உருவமாகும்.
- கிரேக்க - உரோம சிற்பக்கலைப் பாரம்பரியப்படி மனித உடலின் அழகு, எடுப்பான தன்மை, சாந்தம் ஆகியன இயல்பாகவும், தத்ரூபமாகவும் காட்டப்பட்டுள்ளன.

**ஆதாமைப் படைத்தல் (The creation of Adam)**



- மைக்கல் ஆஞ்சலோவினால், உரோமபுரியில் சிஸ்ரைன் தேவாலயத்தில் பிரெஸ்கோ சிக்கோ நுட்பமுறையில் படைக்கப்பட்டுள்ள விதான ஓவியங்களுள் முக்கியமான ஒன்றாகும்.

- பெரும்பாலான கிறிஸ்தவக் கலைஞர்களால் சித்தரிக்கப்படாததாக கடவுளின் உருவம் இங்கு சாதாரணமான ஒரு மனிதனின் உருவத்தைப் போன்று சித்தரிக்கப்பட்டிருத்தல் இதன் சிறப்பியல்பாகும்.
- வலிமை, துணிவு, மானுட இரக்கம், இளமை ஆகிய பண்புகள் இவ்வோவியத்தின் மூலம் நன்கு காட்டப்பட்டுள்ளது.
- தேவர்களுடன் இருக்கும் கடவுள், ஆதாமின்பால் கையை நீட்டி அவனுக்கு உயிர் கொடுக்கும் விதமும், ஆதாம் கடவுளை நோக்கிக் கையை நீட்டிக் கொண்டிருக்கும் நிலையும் இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.
- கடவுளின் முதுமையும் ஆதாமின் இளமையும் நன்கு காட்டப்பட்டுள்ளது.
- அவரது சிற்பங்களில் பொதித்துள்ள வலிமையும் உறுதியும் இந்த ஓவியத்திலும் காணப்படுகின்றன.

**இறுதித் தீர்ப்பு Last Judgment)**



- உரோமபுரியில் வத்திக்கான் நகர சிஸ்ரைன் தேவாலயத்தின் பலிபீடத்துக்குப் பின்னால் உள்ள சுவரில் இந்த ஓவியம் படைக்கப்பட்டுள்ளது.
- உலகின் மிகப் பெரிய பிரெஸ்கோ சிக்கோ ஓவியமெனக் கருதப்படும் இது, ஏறத்தாழ 48 x 44 அடி அளவைக் கொண்டுள்ளது.
- மைக்கல் ஆஞ்சலோ இந்த ஓவியத்தைப் பிரதானமான 3 பகுதிகளாகப் பிரித்து அவற்றை சுவர்க்கம், மனிதரின் உலகம், மறு உலகம் எனக் குறியீட்டு ரீதியில் சித்தரித்துள்ளார்.
- கலைஞர் தமக்கேயுரிய இயல்பான தத்ரூபமான பாணியின் பண்புகளை உள்ளடக்கி இந்த ஓவியத்தை படைத்துள்ளார்.
- மனித உருவங்களின் உடல் இயல்புகளும், செயற்படு தன்மை இயல்புகளும், உணர்வு வெளிப்பாடுகளும் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன.

**தேர்ச்சி 6.0** : சமய பண்பாட்டு அம்சங்கள், உண்ணாட்டு வெளிநாட்டு தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் கலைப்படைப்புக்கள், சமகால கட்புலக் கலைப்படைப்புக்கள் மற்றும் பொதுசன தொடர்பூடகங்கள் மூலம் இனங்கண்ட கலை அம்சங்களை விமர்சன ரீதியில் கிரகித்து அவற்றின் இயல்புகளை சுய படைப்பாக்கத்துக்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 6.2** : தெரிவு செய்த வெளிநாட்டு கலைஞர்களின் படைப்புக்களை நயப்பார்.

**செயற்பாடு 6.2.3.** : "கலைஞர் றபாயெல் சன்சியோவின் (RAPHAEL SANZIO) படைப்புக்களை மதிப்போம்."

**பாடவேளைகள்** : 1

## கற்றற் பேறுகள்:

- றபாயெல் சன்சியோ கலைஞரின் ஓவியங்களைக் குறிப்பிடுவர்.
- றபாயெல் சன்சியோ கலைஞரின் ஓவியங்கள் மற்றும் தகவல்களைத் திரட்டுவர்.
- அவர் தமது ஓவியங்களுக்காகப் பயன்படுத்திய வர்ணங்கள், பின்னணி தரைக் காட்சிகளைத் தேடியறிவர்.
- புதிய ஆக்கப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த நுட்பமுறைகளை விவரிப்பார்.
- றபாயெல் சன்சியோவின் படைப்புக்களில் உள்ள கலை அம்சங்களை கணிப்பிடுவார்.

## தர உள்ளீடு:

- றபாயெல் சன்சியோ கலைஞரின் வர்ண ஓவியங்கள்
    - ஏதென்ஸ் பள்ளி (The School of Athens)
    - மடோனா ஓவியங்கள்
    - புல்வெளியில் மடோனா (Madonna of the Meadows)
    - மடோனா டெல்லா சேதியா (Madonna Della Sedia )
- கணனிப்பொறி
- இணைப்பு 6.2.3.1 செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகள்
- இணைப்பு 6.2.3.2 வாசிப்புப்பத்திரப் பிரதிகள்

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :
## படிமுறை 6.2.3.1

- றபாயெல் சன்சியோ கலைஞரின் படைப்புக்கள் மீது மாணவர்களின் அவதானத்தை செலுத்த வைக்க.
- றாபயெல் சன்சியோவினது பல்வேறு படைப்புக்களைச் சேகரிக்க மாணவனை வழிப்படுத்துக.
- அந்த ஓவியங்களின் கருப்பொருள், பாணி, வர்ணப்பயன்பாடு போன்றவை பற்றி மாணவரிடம் வினவுக.

(10 நிமிடங்கள்)

**படிமுறை 6.2.3.2**

- இணைப்பு 6.3.3.1 க்குரிய செயற்பாட்டுப் படிவத்தை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- இணைப்பு 6.3.3.2 க்குரிய வாசிப்புப் பிரதியை கற்பதற்கு மாணவரை வழிப்படுத்துங்கள்.
- வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 6.2.3.3**

- எழுமாறாக மாணவர்கள் சிலரைத் தெரிவு செய்து அவர்களது விடைத்தாள்களை மதிப்பிடுக.
- றபாயெல் சன்சியோவின் படைப்புக்கள் பற்றி மீட்டாய்வுக் கலந்துரையாடலில் ஈடுபடுக.

(10 நிமிடங்கள்)

இணைப்பு 6.2.3.1

## செயற்பாட்டுப் படிவம்

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள றபாயெல் சன்சியோவின் ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.

  01. கலைஞர் றபாயெல் சன்சியோ பற்றிய சுருக்க அறிமுகம் ஒன்றினைத் தருக.
  02. பின்வரும் கருத்துக்களின் கீழ் கலைஞர் ஆக்கங்களைப் பற்றிக் கணிப்பீடு

- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- பின்வரும் செயற்பாடுகளில் ஈடுபடுங்கள்.

  செய்யுங்கள்.

  i. கருப்பொருள்
  ii. கலைப்பாங்கு
  iii. செல்வாக்கு
  iv. நுட்பமுறை
  v. கலை அம்சங்கள்
     - உருவங்களைப் பயன்படுத்துதல்.
     - வர்ணங்களைப் பயன்படுத்துதல்.
     - தளத்தைப் பயன்படுத்துதல்.
     - பாவ - உணர்ச்சி வெளிப்பாடு
  - உங்கள் தேடல்களை வகுப்பறையில் முன்வைப்பதற்கு ஆயத்தம் செய்யுங்கள்.

இணைப்பு 6.2.3.2

# வாசிப்புப் படிவம்

- றாபாயெல் சன்சியோ மறுமலர்ச்சிக் காலத்தில் வாழ்ந்த சிறந்த ஓவியக் கலைஞராவார்.
- உச்ச மறுமலர்ச்சிக் காலத்தில் (High Renaissance) உலகளாவிய ரீதியில் ஓவியக்கலைக்கு றபாயெல் சன்சியோ பெரும் பணியாற்றினார் என்றால் மிகையாகாது.

எதென்ஸ் பள்ளி (School of Athens)



- இவர் 1483ஆம் ஆண்டு ஊர்பினோ எனும் இடத்தில் பிறந்தார்.
- எதென்ஸ் நகர பள்ளி என்னும் ஓவியத்தை ஸ்டென்ஸாடெலா சிக்னாநசுரா எனும் கட்டடத்தில் வரைந்தார். (Stanza della Segnatura)
- ஓவியத்தில் காட்டப்பட்டுள்ள கட்டட நிர்மாணம் றபாயெல் சன்சியோ கலைஞரின் திறைமையையும் உள்ளுணர்வையும் வெளிப்படுத்துகின்றதென ஆய்வாளர்கள் கூறுகின்றனர்
- தத்துவஞானிகளான அரிஸ்டோடல், பிளேட்டோ, பைதகரஸ் போன்றவர்கள் இங்கு காணப்படுகின்றனர். தத்துவம் பற்றி விவாதிக்கும் ஒரு காட்சி என அதைப் பற்றி ஆய்வு செய்தி ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.
- ஒருங்கிணைப்பை நோக்கும் போது எதென்ஸ் நகர பள்ளியைச் சித்தரிக்கும் ஓவியம் உன்னத நிலையில் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.
- கண்ணைக் கவரக் கூடிய வர்ணங்கள் பிரயோகிக்கப்பட்டுள்ளன. கபில வர்ணத்தின் வெவ்வேறு தன்மை, இருளான மஞ்சள் வர்ணத்தின் வெவ்வேறு தன்மை, வெள்ளை வர்ணங்களின் உபயோகம் இவ்ஓவியத்தில் காணலாம்.

## புல்வெளியில் மடோனா (Madonna of the Meadows)

- ரபாயலினது படைப்புக்களுள் முக்கியமான கருப்பொருளாகக் காணப்படுவது மடோனா அதாவது கன்னி மரியாளையும் இயேசு பாலகனையும் சித்தரிக்கும் படைப்புக்களாகும்.
- மறுமலர்ச்சிக்கால ஏனைய கலைஞர்களின் மடோனா ஓவியப்படைப்புக்களைவிட றபாயலினால் சித்தரிக்கப்பட்ட மடோனா ஓவியங்கள் சிறப்பான படைப்புகளாகக் கருதப்படுகின்றன.
- இந்த ஓவியங்கள் எண்ணெய் வர்ண ஊடகத்தைக் கொண்டு கன்வஸ் துணியில் வரையப்பட்டுள்ளன.
- முக்கோண மாதிரியொன்றின் மீது, உணர்வு வெளிபாட்டுடன் உருவங்கள் சித்தரிக்கப்பட்டுள்ளமை இந்த ஓவியங்களின் சிறப்பியல்புகளுள் ஒன்றாகும்.
- முப்பரிமாண இயல்புகளைக் காட்டுமாறு வர்ணங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமையும் ஒளிவட்டம் காட்டப்படாமையும் இப்படைப்பினது மேலும் சில இயல்புகளாகும்.



- தூரக்காட்சி இயல்புகளுடனான தரைத்தோற்றக் காட்சியில் தாவரங்கள், மலர்களைக் கொண்ட கிராமியப் பின்னணியில் சாதாரணமான ஒரு பெண் போன்று சித்தரிக்கப்பட்டிருப்பது இந்த ஓவியத்தின் சிறப்பாகும்.
- அன்னை மரியாளைப் பூரித்த உடலுடனும், மென்மையும் இரக்கமும் ததும்பும் முகத்துடனும் உணர்வுகளைக் காட்டும் வகையிலும் சித்தரிக்க கலைஞர் முயற்சித்துள்ளார்.
- இந்த ஓவியம் பிரான்சு நாட்டு லூவர் அரும்பொருட்காட்சியத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## மடோனா டெலா சேதியா (Madonna Della Sedia)

- வட்ட வடிவத் தளத்தின் மீது வரையப்பட்டுள்ள இந்த ஓவியம், அன்னை மரியாளுடன் அணைக்கப்பட்ட நிலையில் உள்ள இயேசு பாலகனையும் அவர்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் யோன் பப்ரிஸ் பாலகனையும் காட்டுகின்றது.
- மூன்று உருவங்களும் அண்மைக் காட்சியாக ஒரே தளத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- மனித உடலின் மேனியழகும் ஆடைகளின் விரிவான இயல்புகளும் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன.



- அன்னை மரியாளின் கருணையும் இரக்கமும் பாலகர்களின் மென்மையான செல்லமான வனப்பான இயல்புகள் யதார்த்தபூர்வமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- றபாயெலின் ஏனைய மடோனா ஓவியங்களில் காணப்படும் விரிவான பின்னணி தரைத்தோற்றக் காட்சிகளுக்குப் பதிலாக இந்த ஓவியத்தின் பின்னணி ஆழமாகக் காட்டப்படவில்லை. மாறாக இருண்ட வர்ணத்தில் காட்டப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டு சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : கம்பளைக் கால கட்டட நிர்மாணங்கள், சித்திரங்கள், சிலைகள், செதுக்கு வேலைப்பாடுகளைக் கற்பார்.

**செயற்பாடு 7.1.1** : " கடலாதெனிய விகாரை "

**பாடவேளைகள்** : 1

## கற்றற் பேறுகள்:

- கடலாதெனிய விகாரையின் கட்டட நிர்மாணம், சிற்பங்கள் என்பவற்றைப் பெயரிடுவார்.
- கடலாதெனிய விகாரையின் வரலாற்றுப் பின்னணியை ஆராய்வார்.
- படைப்பாக்கப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும் நுட்பமுறைகளையும் விபரிப்பார்.
- கடலாதெனிய விகாரையின் சிற்பங்கள், செதுக்கல்கள், ஓவியங்களினை இரசித்து நயப்பார்.

## தர உள்ளீடு:

- கடலாதெனியவின் வர்ணப் படங்கள், இறுவட்டுக்கள்.(C D)
- இறுவெட்டுக்கள்.
- கடலாதெனிய விகாரையின் ஓவியங்கள், செதுக்கல்கள் உள்ள படங்கள்.
- இணைப்பு 7.1.1.1.இக்குரிய செய்றபாட்டுப் படிவப் பிரதிகள்.
- இணைப்பு 7.1.1.2க்குரிய வாசிப்புக் கோவையின் பிரதிகள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 7.1.1.1.

- கடலாதெனிய விகாரையின் படம் ஒன்றைக் காட்சிப்படுத்தி பாடத்தில் பிரவேசித்தல்.
- கடலாதெனிய விகாரையைப் பற்றி மாணவர்கள் அறிந்த விடயங்களை கேட்டறிக.

(10 நிமிடங்கள்)

### படிமுறை 7.1.1.2

- இணைப்பு 7.1.1.1 செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- இணைப்பு 7.1.1.1 வாசிப்புக் கோவையை மாணவருக்கு வழங்குங்கள்.
- வினாக்களுக்கு விடையளிக்க வாசிப்புப் பத்திரத்தை துணையாகக் கொண்டு வழிப்படுத்துக.

(20 நிமிடங்கள்)

### படிமுறை 7.1.1.3

- பொருத்தமான முறையில் விடைகளைப் பரிசீலனை செய்க.
- தவறான விடைகளைத் திருத்தி முழு வினாக்கொத்துக்கும் சரியான விடைகளைப் பெற வழிப்படுத்துக.
- கடலாதெனிய பற்றிய மேலதிகத் தகவல்களை சேகரிக்க மாணவர்களை அறிவுறுத்துக.
- ஒட்டுமொத்தப் பாடம் தொடர்பாக சுருக்கமாக மீளாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி, இணைப்பு 7.1.1.1, இணைப்பு 7.1.1.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்.

- கடலாதெனியா விகாரைத் தொகுதியின் கட்டட நிர்மாண அம்சங்கள், சிற்பங்கள், செதுக்கு வேலைகளைக் குறிப்பிடுதலும், அவற்றின் கலைப் பண்புகளை மதித்தலும் நயத்தலும்.
- கடலாதெனிய விகாரை நிர்மாணத்துக்கான இந்திய, விஜயநகரப் பாரம்பரிய நிர்மாணங்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிதல்.
- படைப்பாக்கப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும், நுட்பமுறைகளையம் விவரித்தல்.

இணைப்பு 7.1.1.1

## செயற்பாட்டுப் படிவம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள கடலாதெனிய விகாரையின் கலை ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- கடலாதெனிய விகாரையிலுள்ள ஆக்கங்களில் விசேட அம்சங்களை அறிந்து கொள்ளுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

01. கடலாதெனிய விகாரையில் காணப்படும் கட்டடக் கலை நிர்மாணங்களையும், சிற்பங்களையும் பெயரிடுக.

02. கடலாதெனிய விகாரையின் வரலாற்று பின்னணியைப் பற்றிச் சுருக்கமான விளக்கம் ஒன்று தருக.
   - காலம்
   - அனுசரணை
   - கலைஞன்

03. கட்டடக்கலை நிர்மாணங்களின் கலைப் பாங்கினைக் கொண்டு பின்வரும் அம்சங்களை விவரிக்குக.
   - மரபு /பாரம்பரியம்.
   - கட்டடக் கலை நிர்மாண அணுகுமுறை திட்டம் /மாதிரி.
   - ஊடகமும் நுட்பமுறைகளும்.

04. கடலாதெனியா விகாரை புத்தர் சிலை தொடர்பாக பின்வரும் விடயங்களின் கீழ் கலைத்துவ மதிப்பீட்டை நடத்துக.
   - முத்திரைகள்.
   - ஆசன முறை.
   - காவியுடை.
   - முகத்தில் உணர்வு வெளிப்பாடு.

கற்றறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளவும்.

இணைப்பு 7.1.1.1

## வாசிப்புக் கோவை

- கடலாதெனியா விகாரை கம்பளைக் காலத்தைச் சேர்ந்த ஒரு கலைப்படைப்பாகும்.
- கி.பி 1341 - 1351 காலத்தில் கம்பளையை ஆட்சி செய்த 4ஆம் புவனேகபாகு மன்னன் காலத்தில் தம்மகித்தி தேரோவின் அறிவுறுத்தல்களுக்கமைய சேனாதிலங்கார அமைச்சரின் தலைமையில் சத்தர்மதிலக எனும் கடலாதெனிய விகாரை நிர்மாணிக்கப்பட்டது.
- இதன் கட்டட நிர்மாணத்தில் ஈடுபட்டவர் கணேஸ்வராச்சாரியார் எனும் தென் இந்திய கலைஞனும் அவரின் சீடர்களும் ஆவார்கள்.

### கட்டடக் கலை நிர்மாணிப்புக்கள்
### கடலாதெனிய விகாரை - சிலை விகாரை




- கடலாதெனிய விகாரை 1ஆம் மண்டபம், அர்த்த மண்டபம், கர்ப்பக்கிரகம் எனும் 3 பகுதிகளைக் கொண்டது.
- விகாரையில் மேல் தளம் கருங் கல்லால் ஆனது.
- அதன் கூரை தட்டையானது. கீழ்த் தளத்தில் நடனக்காரர், மேளக்காரர் வரிசையாகச் செதுக்கப்பட்டுள்ளதோடு, அவ்வுருவங்கள் உயிரோட்டமும் அசைவும் உடையனவாகவுள்ளன.
- நாலு முக எட்டு வெட்டுக் கொண்ட மூன்று தூண்களாலான தொகுதிகளை கெடிகே எனப்படும். வட்டச் சிகரக் கூரை கொண்ட இப்பௌத்த விகாரை தென்னிந்திய விஜய நகர இந்து கட்டடக் கலையின் செல்வாக்கைக் காட்டி நிற்கின்றது.
- தூண்களின் அடிப்பகுதில் தலையை உயர்த்திய நிலையிலான சிங்க உருவமும் தூண் உச்சியில் மற்றுமொரு சிங்க உருவமும் தூணின் தண்டுப் பகுதிச் சட்டகங்களில் ரிஷபத்தில் ஏறிய மனிதவுருவும், மீன் மீது ஏறிய மனிதவுருவும் செதுக்கப்பட்டுள்ளன.
- பெரிய தூணுடன் சிறிய தூண்களை இணைப்பதற்காகக் கற்பட்டி ஒன்று பயன்படுத்தப்பட்டுள்ளது இதன் சிறப்பம்சம் ஆகும்.

## விஜய உத்பாய



- 12 அடி உயரம் கொண்ட அடித்தளத்தில் அமர்ந்த நிலை புத்தர் சிலைகள் 4 வைக்ககப்பட்டுள்ளன.
- இவை கல்லினால் நிர்மாணிக்கப்பட்டவை. இதன் மீது எட்டுத் திசைகளை நோக்கியிருக்கும் வண்ணம் 8 யானைகளின் உருவங்கள் செதுக்கல் முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- கட்டடத்தின் மத்திய பகுதியில் 40 அடி உயரமான தூபி நிர்மாணிக்கப்பட்டு கூரையிடப்பட்டுள்ளது. தூபியைச் சுற்றி நான்கு சிறிய சைத்தியங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அவை சிலை மனையின் கூரையில் அமைக்கப்பட்டுள்ளன.

## புத்தர் சிலைகள்.



- கர்ப்பக் கிருகத்தில் அமர்ந்த நிலைப் புத்தர் சிலையொன்றும் நின்ற நிலைப் புத்தர் சிலைகள் நான்கும் உள்ளன. இச்சிலைகள் கண்டியர் கால சிலைகளின் பண்புகளைக் கொண்டுள்ளன.
- திறந்த கண்கள், அலை மடிப்புக் கொண்ட காவியுடை ஆகியன மூலம் புத்தர்பெருமானின் ஆன்மீகப் பண்புகளைவிட, புற இயல்புகளை வெளிக்காட்டுவதில் கலைஞர் முயற்சி செய்துள்ளார்.
- வர்ணந் தீட்டப்பட்ட அமர்ந்த நிலைப் புத்தர் சிலையின் பின்புறத்தே அழகிய மகர தோரணம் உள்ளது.
- வீராசன நிலையில் அமர்ந்திருக்கும் அமர்ந்த நிலை புத்தர் சிலையின் தியான முத்திரையும் சிரசப்பட்டையும் அமைக்கப்பட்டிருத்தல் சிறப்பம்சங்களாகும்.

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு ஓவிய, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : கம்பளை காலத்து கட்டட நிர்மாணங்கள், ஓவியங்கள், சிற்பங்கள், செதுக்கல்கள் பற்றி ஆராய்ந்து கற்பார்.

**செயற்பாடு 7.1.2** : "இலங்காதிலக விகாரை "

**பாடவேளைகள்** : 1

**கற்றற் பேறுகள்:**

- இலங்காதிலக விகாரையின் கட்டட நிர்மாணம், ஓவியங்கள், சிற்பங்கள் என்பவற்றைப் பெயரிடுவார்.
- இலங்காதிலக விகாரையின் கட்டட நிர்மாணங்கள், சிற்பங்கள், செதுக்கல்கள், ஓவியங்களைப் பெயரிடுவார்.
- இலங்காதிலக விகாரைப் படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிவார்.
- ஆக்கப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த, ஊடகங்களையும் நுட்பமுறைகளையும் விவரிப்பார்.
- இலங்காதிலக விகாரைப் படைப்புக்களின் கலைப் பண்புகளை மதிப்பிடுவார்.

**தர உள்ளீடுகள் :**

- இலங்காதிலக விகாரைச் கட்டட நிர்மாணிப்புகள், சிற்பங்கள், ஓவியங்கள், செதுக்கல்கள் வர்ண ஒளிப் படங்கள்.
- கணனிப் பொறிகள்.
- இணைப்பு 7.1.2.1 இன் செயற்பாட்டுப் படிவம்.
- இணைப்பு 7.1.2.2.இன் வாசிப்புப்பத்திரப் பிரதிகள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :

### படிமுறை 7.1.2.1.

- இலங்காதிலக விகாரையின் கட்டட நிர்மாண அம்சங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் தொடர்பாக மாணவர் கவனஞ் செலுத்த வழிப்படுத்துங்கள்.
- அவை தொடர்பான மாணவரின் முன்னறிவை வினவுங்கள்.
- இலாங்காதிலக விகாரைப் படைப்புக்கள் தொடர்பான தகவல்களைச் சேரிக்குமாறு மாணவரை வழிப்படுத்துங்கள்.

(10 நிமிடங்கள்)

### படிமுறை 7.1.2.2

- இணைப்பு 7.1.2.1 இன் செயற்பாட்டுப் படிவத்தையும் இணைப்பு 7.1.2.2 இன் வாசிப்பு பிரதியையும் மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- அத்தகவல்களைத் துணையாகக் கொண்டு வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவருக்கு அறிவுறுத்தல் வழங்குங்கள்.
- தமக்கிடையே கலந்துரையாடி சரியான விடைகளைக் கண்டறிய வழிப்படுத்துங்கள்.

(20 நிமிடங்கள்)

**படிமுறை 7.1.2.3**

- விடையளித்த பின்னர் மாணவர் சிலரை எழுமாறாகத் தெரிவு செய்து விடைத்தாள்களை மதிப்பீடு செய்யுங்கள்.
- அவர்களது ஒட்டுமொத்தப் பாடத்தை மீட்டாய்வு செய்யுங்கள்.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி, இணைப்பு 7.1.2.2, இணைப்பு 7.1.2.3 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்

- இலங்காதிலக விகாரையின் சிற்பங்கள், ஓவியங்களைப் பெயரிடுவார்.
- இலங்காதிலக விகாரையின் கட்டட நிர்மாண, சிற்ப ஓவியப் பண்புகளை நயத்தலும் மதித்தலும்.

இணைப்பு 7.1.2.1

## செயற்பாட்டுப் படிவம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள இலங்காதிலக விகாரையின் கலை ஆக்கங்களை நன்கு அவதானியுங்கள்.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள வாசிப்புப் படிவத்தினை நன்கு வாசித்துக் கிரகித்துக் கொள்ளுங்கள்.
- இலாங்காதிலக விகாரையின் கலைப்படைப்புக்களின் சிறப்பம்சங்களை இனங்கண்டு கொள்ளுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

01. இலங்காதிலக விகாரையில் காணப்படும் கட்டடக் கலை அம்சங்களையும், ஓவியங்களையும், சிறப்பம்சங்களையும் பெயரிடுக.
02. இலங்காதிலக விகாரையின் வரலாற்று பின்னணியைப் பற்றிச் சுருக்கமான விளக்கம் ஒன்று தருக.
    - காலம் (யுகம்)
    - அனுசரணை
    - கலைஞன்
03. இலங்காதிலக கட்டடக்கலைப் படைப்புக்களின் கலைப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த அம்சங்களை விவரிக்குக.
    - பாரம்பரியம்
    - கட்டட நிர்மாண அணுகுமுறைகள் /திட்டங்கள் /மாதிரிகள்
    - ஊடகமும் நுட்பமுறைகளும்
04. இலங்காதிலக விகாரைப் புத்தர் சிலையின் கலைத்துவம் தொடர்பாக பின்வரும் விடயங்களின் கீழ்க் குறிப்பிடுக.
    - முத்திரைகள்
    - ஆசன முறை
    - காவியுடை
    - முகத்தின் உணர்வு வெளிப்பாடு
05. இலங்காதிலக விகாரை ஓவியங்களுள் அடங்கியுள்ள ஓவியங்களைப் பெயரிட்டு, அவை தொடர்பாகப் பின்வரும் விடயங்களின் கீழ் மதிப்பிடுக.
    - பாணி
    - நுட்பமுறை
    - வர்ணப் பயன்பாடு
    - ரேகைப் பயன்பாடு

நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்காக ஆயத்தகஞ் செய்து கொள்ளுங்கள்.

இணைப்பு 7.1.2.2

# வாசிப்புப் படிவம்

- கம்பளைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட இலங்காதிலக விகாரை பன்ஹல்கல எனும் கற்பரப்பின் மீது அமைக்கப்பட்டுள்ளது.
- 4ஆம் புவனேகபாகு மன்னன் காலத்தைச் (கி.பி.1341 - 1351) சேர்ந்தது.
- இது சேனாதிலங்கார அமைச்சரின் ஆலோசனைப்படி இந்தியாவைச் சேர்ந்த ஸ்ரபதிராயர் எனும் கலைஞரால் அமைக்கப்பட்டது.

**கட்டடக் கலைப் படைப்புக்கள் - இலங்காதிலக விகாரை**

- இக்கட்டட நிர்மாணத்துக்காக செங்கல், சுண்ணச்சாந்து ஆகியன பயன்படுத்தப்பட்டுள்ளன. அக்காலத்தில் இது நான்கு மாடிகளைக் கொண்டதாக அமைந்திருந்ததாக நூல்களில் பதிவாகியுள்ளது.
- வெளிப்புற சுவரில் அமைக்கப்பட்டுள்ள யானை உருவங்களும், தூண்களும் விகாரைக்கு அழகுசேர்க்கும் அம்சங்களாகும்.
- சிலை மனையுடன் இணைந்த வகையில், நான்கு திசைகளிலும் விபீஷண, உபுள்வன, (விஷ்ணு) கதிர்காம,(முருகன்) கணதெவி(பிள்ளையார்) ஆகியோர்க்காக நிர்மாணிக்கப்பட்ட ஐந்து (5) ஆலயங்கள் உள்ளன. அவற்றில் தெய்வச் சிலைகள் காணப்படுகின்றன.

**புத்தர் சிலைகள்**

- சிலை மனையில் உள்ள அமர்ந்திருக்கும் நிலைப்புத்தர் சிலையின் கண்களிரண்டும் திறந்த நிலையிலும், காவியுடையில் மடிப்புக்கள் அலை வடிவிலும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் இச்சிலை நிமிர்ந்த நிலையிலும் உள்ளது.
- வீராசன நிலையில் அமர்ந்த நிலையில் உள்ள இப்புத்தர்சிலை தியான முத்திரையை வெளிக்காட்டுகிறது.
- பூவேலைப்பாடு, கொடி வேலைப்பாடுகள் மூலம் அலங்கரிக்கப்பட்டுள்ள மகரதோரணமொன்று சிலைக்குப் பின்புறமாக அமைக்கப்பட்டுள்ளது.

**ஓவியங்கள்**

- கண்டிக்கால ஓவியப் பாரம்பரியத்தை ஒத்த இலங்காதிலக விகாரை ஓவியங்களுக்கு இடையே சூவிசி விவரணய, (24 புத்தர்) சொளொஸ்மஸ்தானய, (16 புனித ஸ்தலங்கள்) சத்சத்திய (ஏழு வாரம்) போன்ற ஓவியங்கள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. மேலும் கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன், சோனதிலங்கார அமைச்சர் ஆகியோரின் உருவங்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- இங்கு காணப்படும் நான்கு அன்னங்களின் கூட்டு பல திறனாய்வாளர்களின் கவனத்தை ஈர்ந்துள்ளது. அது விதானத்தில் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் மரபு ரீதியான ஓவியங்களுக்கு இடையே அழகிய கொடி அலங்காரங்கள் பெருமளவில் அமைந்துள்ளன.



இலங்கா திலக விகாரை



பிரதான புத்தர் சிலை



சூவிசி விவரணய - ஒரு பகுதி



நான்கு அன்னங்களின் கூட்டு



பல்வேறு அலங்கார வடிவமைப்புக்கள்

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர, சிற்ப, செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.1** : கம்பளைக் காலத்து கட்டட நிர்மாணங்கள், சித்திரங்கள், சிலைகள் செதுக்கு வேலைப்பாடுகளைக் கற்பார்.

**செயற்பாடு 7.1.3** : "எம்பக்க ஆலயம்"

**பாடவேளைகள்** : 2

### கற்றற் பேறுகள்:

- கம்பளைக் காலத்து எம்பக்க ஆலய கட்டட நிர்மாணிப்புகள், செதுக்கல் வேலைகளை இனங்கண்டு பெயரிடுவார்.
- எம்பக்க ஆலய நிர்மாணிப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடிப்பார்ப்பார்.
- நிர்மாணிப்புக்களுக்காகக் கிடைத்த செல்வாக்குகள், ஊடகங்கள், நுட்பமுறைகளை விவரிப்பார்.
- எம்பக்க ஆலய கட்டட நிர்மாணம் உட்பட கலை அம்சங்களின் கலைப் பண்புகளை மதிப்பிடுவார்.

### தர உள்ளீடுகள்:

- எம்பக்க ஆலயத்தின் கட்டட நிர்மாணப் பலகை செதுக்கல்கள் அடங்கிய படங்கள்.
- இறுவெட்டுக்கள், கணனி.
- இணைப்பு 7.1.3.1க்குரிய செயற்பாட்டுப் பிரதிகள்.
- இணைப்பு 7.1.3.2.இக்குரிய வாசிப்புப் பத்திரப் பிரதிகள்.

### செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 7.1.3.1

- எம்பக்க தேவாலயத்தை சித்தரிக்கும் படத்தினை மாணவர்களுக்கு காட்சிப்படுத்தி அது குறித்து மாணவரின் கவனத்தை ஈர்க்குக.
- எம்பக்க தேவாலயத்தின் மரச் செதுக்கல்கள் மீதான செல்வாக்கு, பாணி பற்றி மாணவர்களிடம் வினவுக.
- எம்பக்க தேவாலயம் பற்றிய தகவல்களை சேகரிக்கும்படி மாணவர்களை வழிப்படுத்துக.

(15 நிமிடங்கள்)

### படிமுறை 7.1.3.2

- இணைப்பு 7.1.3.1 செயற்படிவத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.1.3.2 வாசிப்புப் பத்திரத்தையும் மாணவர்களுக்கு வழங்குக. அவற்றின் துணையுடன் வினாக்களுக்கு விடையளிக்கச் செய்க.

(50 நிமிடங்கள்)

### படிமுறை 7.1.3.3

- மாணவர்கள் மூவரை எழுமாறாகத் தெரிவு செய்து அவர்களது விடைத்தாள்களை மதிப்பிடுக.
- ஒட்டுமொத்தச் செயற்பாட்டை மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி, இணைப்பு 7.1.3.1, இணைப்பு 7.1.3.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்

- எம்பக்க தேவாலயக் கலை படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிதல்.
- எம்பக்க ஆலய கட்டட நிர்மாண, செதுக்கு வேலைப்பாடுகளை இனங்கண்டு பெயரிடுதல்.
- எம்பக்க ஆலய கலைப் படைப்புக்களுக்காகப் பெற்ற செல்வாக்குகள், ஊடகங்கள், நுட்பமுறைகளை விவரித்தல்.
- எம்பக்க ஆலய மரச் செதுக்கு வேலைப்பாடுகளின் கலைப்பண்புகளை விவரித்தல்.

இணைப்பு 7.1.3.1

## செயற்பாட்டுப்பத்திரம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள எம்பக்க ஆலயக் கலைப் படைப்புக்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசிக்க வழங்குங்கள்.
- எம்பக்க ஆலயப் படைப்புக்களில் காணப்படும் விசேட இயல்புகளை இனங்காணுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

01. எம்பக்க ஆலய வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
    - காலம் (யுகம்)
    - அனுசரணை
    - கலைஞன்
02. எம்பக்க ஆலயத்தில் காணப்படும் கற்பனையான மற்றும் சமகால சமூகத்தைச் சித்தரிக்கும் சிறப்பான செதுக்கு வேலைப்பாடுகளைக் குறிப்பிடுக.
03. கட்டக்கலைப் படைப்புக்களின் கலைத்துவப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த பின்வரும் அம்சங்களை விபரிக்குக.
    - பாரம்பரியம்
    - கட்டட நிர்மாண அணுகுமுறைகள் /திட்டங்கள் /மாதிரிகள்
    - ஊடகமும் நுட்பமுறைகளும்.
04. எம்பக்க ஆலய மரச்செதுக்கு வேலைப்பாடுகள் தொடர்பாகப் பின்வரும் விடயங்களைக் கருத்திற் கொண்டு கலைப்பண்புகளை மதிப்பிடுக.
    - ஊடகங்கள்.
    - நுட்பமுறைகள்
    - பாணி
    - உணர்வு - பாவ வெளிப்பாடு
    - சமகால சமூகத்தைச் சித்தரித்தல்.

நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்கு ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

இணைப்பு 7.1.3.2

## வாசிப்புக் கோவை

- கம்பளைக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட எம்பக்க ஆலயம் கண்டி மாவட்டத்தில் உடுநுவர மத்திய பகுதி திக்கெயயில் அமைந்துள்ளது.
- 14ஆம் நூற்றாண்டில் ஆட்சி செய்த III ஆம் விக்கிரமபாகு மன்னன் காலத்தில் தெல்மட மூலாச்சாரி உட்பட அவரது சீடர்களால் இது நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- இது மேளவாத்தியக்காரர் கண்ட கனவு ஒன்றின் பிரதிபலனாக கதிர்காமக் கடவுளுக்கு அர்ப்பணிக்க நிர்மாணிக்கப்பட்டதெனக் கூறப்படுகிறது.



**எம்பக்க ஆலயம்**



**நடுமல் (மடொல் குருபாவ)**

- வாயில் மண்டபம், நீள்மண்டபம், கர்ப்பக்கிரகம் என்பன எம்பக்க ஆலயத்தில் காணக்கூடிய சிறப்பு அமைப்புகளாகும்.
- எம்பக்க ஆலய மரத்தூண்களிலும் செதுக்கல் வேலைப்பாடுகளைக் காணலாம்.
- எம்பக்க தேவாலயத்தின் கூரையில் 26 கை மரங்கள் ஒரு பலகை ஆணியுடன் பொருத்தப்பட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இது "மடொல் குருபாவ" என்று அழைக்கப்படுகிறது. இது இலங்கைக் கட்டக் கலைஞரின் கைவண்ணத்தை எடுத்துக் காட்டுகிறது.

### வாயில் மண்டபம்

- 10 தூண்களைக் கொண்டவை
- ஒவ்வொரு தூணிலும் சதுரங்கள் நான்கு வீதம் உள்ளன.
  இதற்கேற்ப 10 தூண்களிலும் 40 சதுரங்களில் செதுக்கல்கள் உள்ளன.

### நீள் மண்டபம்

- 32 தூண்களைக் கொண்டவை. ஒவ்வொரு தூணிலும் சதுரங்கள் 4 வீதம் உள்ளன.
- இங்குள்ள செதுக்கல்களின் எண்ணிக்கை 128 ஆகும்.
- எம்பக்க தேவாலயத்தின் செதுக்கல்கள் வேங்கை, சித்திரவேம்பு பலகையில் சிறு புடைப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- பிரதானமான 5 கருப்பொருள்களின் கீழ் இச்செதுக்கல்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
  1. கற்பனை விலங்கு உருவங்கள்
  2. விலங்கு உருவங்கள்
  3. மனித வாழ்கையுடன் தொடர்புபட்ட செதுக்கல்கள்
  4. கரை அலங்காரம் (லீஸ்தர)
  5. பூக்கள் கொடிகள் அலங்காரம்

- பாரம்பரியமான சிங்கள அலங்கார வடிவமைப்புக்களில் காணப்படும் சிறப்பான கற்பனை வடிவமைப்புக்களில் பல எம்பக்க ஆலய மரச் செதுக்கல் வேலைப்பாடுகளில் காணப்படுகின்றன.
- கலைப் பண்புகளைக் கொண்ட கற்பனையான பிராணி மற்றும் ஏனைய பிராணி ஆக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
  - பேரண்டப்பட்சி - இரு தலைப்பட்சி
  - யானைப் பட்சி (எற்கந்த லிகினியா)
  - சரபெத்தியா
  - ரிஷப குஞ்சரம்
  - கின்னரப்பெண்
  - நாரிலதா



பேரண்டப் பட்சி



கின்னரப் பெண்



அன்னப்பின்னல்



ரிஷப குஞ்சரம்



அன்னம்



சிங்கம்

- எம்பக்க ஆலய செதுக்கல் வேலைப்பாடுகளுள், சிறப்பானவையாகக் கருதப்படுபவை, சமகால சமூக வாழ்க்கை நிகழ்வுகளைக் காட்டும் செதுக்கல்களாகும். பின்வருவன அவ்வாறானவற்றுள் சிலவாகும்.
  - றபான் இசைப்பவன்
  - குதிரை வீரன்
  - போர் வீரன்
  - மல்யுத்தம்
  - நடன மாது
  - குழந்தைக்குப் பாலூட்டும் தாய்.
- மேற்குறிப்பிட்ட செதுக்கல் படைப்புக்களோடு, கரை அலங்கார வடிவமைப்புக்காக அரும்பு, கல்பித்து, குந்திரிக்கன், போன்ற உயரிய வடிவமைப்புக்களும், தாவர வடிவமைப்புகளும், தாமரைப்பூ, பூங்கொடி போன்றனவும் பயன்படுத்தப்பட்டுள்ளன.



தாமரை



செதுக்கல் வடிவமைப்பொன்று



நடனமாது



குழந்தைக்குப் பாலூட்டும் தாய்



மல்யுத்தம்



வெளிநாட்டுப் போர் வீரன்



சுதேச போர் வீரன்



றபான் இசைப்போன்

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டு சித்திர, சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளைப் படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.2** : கண்டி காலத்து மலைநாட்டுப் பாரம்பரிய கட்டடக் கலைப் படைப்புக்கள், சித்திரங்கள், சிற்பங்கள் செதுக்கு வேலைப்பாடுகளைக் கற்பார்.

**செயற்பாடு 7.2.1** : "கண்டி (செங்கடகல) புனித தந்த ஆலயம் - தலதா மாளிகை"

**பாடவேளைகள்** : 1

## கற்றற் பேறுகள்:

- கண்டி தலதா மாளிகையின் கட்ட நிர்மாணம், ஓவியம், செதுக்கல் பற்றிய தகவல்களை சேகரிப்பார்.
- தலதா மாளிகை கட்டட நிர்மாண அம்சங்கள், செதுக்கல்களைப் பெயரிடுவார்.
- தலதா மாளிகை நிர்மாணத்தின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிவார்.
- படைப்பாக்கப் பாணி மீது செல்வாக்குச் செலுத்தியவை ஊடகங்கள், நுட்பமுறைகளை விபரிப்பார்.
- தலதா மாளிகையின் கட்ட நிர்மாணம், ஓவியம், செதுக்கல் என்பவற்றை இரசித்து நயப்பார்.

## தர உள்ளீடுகள்:

- தலதா மாளிகை.
- அதன் சுவரோவியங்கள், செதுக்கல்கள் அடங்கிய ஒளிப்படங்கள்.
- இணைப்பு 7.2.1.1க்குரிய செயற்பாட்டுப் பத்திரப் பிரதிகள்.
- இணைப்பு 7.2.1.2.இக்குரிய வாசிப்புக் கோவைப் பிரதிகள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 7.2.1.1

- கண்டி தலதா மாளிகையின் கட்டட நிர்மாணம், ஓவியம், செதுக்கல் பற்றி மாணவர்களை அவதானிக்கச் செய்க.
- தலதா மாளிகை சம்பந்தமான தகவல்களைச் சேகரிக்க மாணவர்களை அறிவுறுத்துக.
- தலதா மாளிகையின் கலைப் படைப்புக்கள் தொடர்பாக மாணவர்களது முன் அறிவை வினவியறிக.

(10 நிமிடங்கள்)

### படிமுறை 7.2.1.2

- இணைப்பு 7.2.1.1 செயற்பாட்டுப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.1.2 வாசிப்புக் கோவை மாணவர்களுக்கு வழங்குக.
- வாசிப்புக் கோவையைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக. (20 நிமிடங்கள்)

### படிமுறை 7.2.1.3

- வகுப்பில் உள்ள மாணவர்களை எழுமாறாகத் தெரிவு செய்து அவர்களது விடைத்தாள்களை மதிப்பிடுக.
- ஒட்டுமொத்தச் செயற்பாடு குறித்து மீட்டாய்வு நடத்துக. (10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி, இணைப்பு 7.1.1.1, இணைப்பு 7.1.1.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடாத்துங்கள்

- கண்டியர்கால உயரிய கட்டட நிர்மாணப் படைப்பாகிய தலதா மாளிகையின் வரலாற்றுத் தகவல்களைத் தேடியறிதல்.
- தலதா மாளிகையின் கட்டட நிர்மாணத் திட்டத்தை விவரித்தல்.
- படைப்பாக்கப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த செல்வாக்குகள், ஊடகங்கள், நுட்பமுறைகள் மற்றும் கலைஞர்கள் பற்றித் தேடியறிதல்.
- தலதா மாளிகை சுவரோவியங்களையும் ஏனைய படைப்பாக்கங்களையும் மதிப்பிடுதல்.

இணைப்பு 7.1.3.1

## செயற்பாட்டுப்பத்திரம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள தலதா மாளிகைப் படைப்புக்கங்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து வழங்குங்கள்.
- தலதா மாளிகைப் படைப்பாக்கங்களில் காணப்படும் சிறப்பான பண்புகளை இனங்காணுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

01. தலதா மாளிகையின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
    - காலம் (யுகம்)
    - அனுசரணை
    - கலைஞன்

02. தலதா மாளிகையில் காணப்படும் கட்டடக்கலை அம்சங்களைப் பெயரிடுக.

03. கட்டக்கலைப் படைப்புக்களின் கலைத்துவப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த பின்வரும் அம்சங்களை விவரியுங்கள்.
    - பாரம்பரியம்
    - கட்டட நிர்மாண அணுகுமுறைகள் /திட்டங்கள் /மாதிரிகள்
    - ஊடகமும் நுட்பமுறைகளும்.

04. தலதா மாளிகைச் சத்திர வட்டக்கல்லின் வடிவம், அதிலுள்ள உருவங்களின் பயன்பாடு.

- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

இணைப்பு 7.2.1.2

## வாசிப்புக் கோவை
## தலதா மாளிகை

- இது இலங்கை வாழ் பௌத்த மக்களின் முக்கிய வழிபாட்டிடமாகக் கருதப்படுகிறது. பல புனரமைப்புக்களுக்கு உள்ளாகியுள்ளது. இரண்டாம் விமலதர்மசூரியனால் (கி.பி 1687 - 1707) கட்டியெழுப்பப்பட்டுள்ளது.
- இங்குள்ள தலதா மண்டபம், சபா மண்டபம்(மகுல் மடுவ), எண்கோண மண்டபம் (பத்திரிப்பு), நீராடும் இடம்,(உல்பென்கெய) அரசர் ஓய்வு மண்டபம்(தியத்திலக்க), பிரதானிகள் மண்டபம் எனும் பிரிவுகள் வாஸ்து முறைப்படி கட்டப்பட்ட கட்டடங்கள் ஆகும்.

- இதில் எண் கோண மண்டபம் (பத்திரிப்பு) விசேட இடத்தைப் பிடிக்கிறது.
- இக்கட்டடம் எண்கோண வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
- கட்டடத்தைச்சுற்றி வளைவுகள் காணப்படுவதுடன் யன்னல்கள், தூண்கள், கதிராதிகள் ஒழுங்கு முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.
- பத்திரிப்புபை அமைத்த பெருமை தேவேந்திர மூலாச்சாரியைச் சேரும்.
- தலதா மாளிகையில் கண்டி மரபை நாட்டிய பல ஓவியங்களினைக் காணலாம். தாவர இலை, பூ, அலங்காரங்கள், கற்பனை உருவங்கள் இவற்றில் காணக்கூடிய சிறப்பு அம்சங்களாகும்.
- கண்டிக் காலத்துக்குரிய மிகச் சிறப்பான சந்திரவட்டக்கல் தலதா மாளிகையில் காணப்படுகிறது.
- முக்கோண அமைப்பை உடைய இச்சந்திர வட்டக் கல்லின் மத்தியில் சற்றுயர்ந்த தாமரை மலரும் இருபுறத்தில் பூங்கொடி அலங்காரங்களும் உள்ளன.



தலதா மாளிகை



கண்டிக்காலச் சத்திர வட்டக்கல்

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான உண்ணாட்டு வெளிநாட்டு சித்திர, சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.2** : கண்டிக் கால மலைநாட்டுப் பாரம்பரிய கட்டடக் கலைப் படைப்புக்கள், சித்திரங்கள், சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகளைக் கற்பார்.

**செயற்பாடு 7.2.1** : " மெதவல கற்றூண் விகாரை"

**பாடவேளைகள்** : 2

**கற்றற் பேறுகள்:**

- மெதவல விகாரையின் கட்டட நிர்மாண அம்சங்கள், ஓவியங்களைப் பெயரிடுவார்.
- மெதவல விகாரைக் கலைப் படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிவார்.
- படைப்பாக்கப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடங்களையும் நுட்ப முறைகளையும் விவரிப்பார்.
- மெதவல கற்றூண் விகாரையின் ஓவியங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பார்.
- மெதவல விகாரையின் கட்டட நிர்மாணத்தையும், ஓவியங்களையும் நயந்து மதிப்பார்.

**தர உள்ளீடு:**

- மெதவல விகாரையுடன் தொடர்புபட்ட கட்டட நிர்மாணங்களின் ஒளிப் படங்கள், ஓவியங்களின் ஒளிப் படங்கள்.
- இணைப்பு - செயற்பாட்டுப் பத்திர பிரதிகள்.
- இணைப்பு - வாசிப்புப் படிவத்தின் பிரதிகள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படிமுறை 7.2.2.1**

- மெதவல விகாரையின் கட்டட நிர்மாணம், சுவரோவியம் பற்றி மாணவர்களினை ஈர்க்குக.
- அவ்வோவியங்களின் கருப்பொருள், வரைந்த பாணி, கலைப் பாரம்பரியம் பற்றி மாணவர்களிடம் வினவுக.
- மெதவல விகாரையின் கட்டட நிர்மாணச் சிறப்பியல்புகள் பற்றிய தகவல்களை கேட்டறிக.
- மெதவல விகாரையின் கலை நிர்மாணங்கள் பற்றிய தகவல்களைச் சேகரிக்க மாணவர்களை அறிவுறுத்துக.

(15 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.2.2**

- இணைப்பு 7.2.2.1செயற்பாட்டுப் பத்திரப் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.2.2 வாசிப்புப் பத்திரப் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு வாசிப்புப் பத்திரத்தின் துணையுடன் விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.2.2.3**

- மாணவர்கள் சிலரின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்க.
- ஒட்டுமொத்தச் செயற்பாட்டை மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி இணைப்பு 7.2.2.1, இணைப்பு 7.2.2.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடாத்துங்கள்

- மெதவல விகாரையின் வரலாற்றுத் தகவல்களைத் தேடியறிதல்.
- கற்றூண் விகாரையின் அடிப்படை அம்சங்களை தேடியறிதல்.
- மெதவல விகாரை ஓவியங்களின் படைப்பாக்கப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்கள், நுட்பமுறைகளை விவரித்தல்.
- மெதவல விகாரை ஓவியங்களின் கலைப்பண்புகளை நயத்தலும், மதித்தலும்.

இணைப்பு 7.2.2.1

## செயற்பாட்டுப்பத்திரம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள மெதவல கற்றூண் விகாரைக் கலைப் படைப்புக்கங்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசிக்க வழங்குங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
    01. மெதவல விகாரையிற் காணப்படும் கட்டடக்கலைச் சிறப்பியல்புகளை விவரிக்குக.
    02. மெதவல விகாரையின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
        - காலம் (யுகம்)
        - அனுசரணை
        - கலைஞன்
    03. மெதவல விகாரை ஓவியங்களுள் சிறப்பான ஓவியங்கள் பற்றிய பின்வரும் விடயங்களின் கீழ் மதிப்பீடு செய்க.
        - கருப்பொருள்
        - கலைப்பாணி
        - நுட்பமுறை
        - வர்ணப் பயன்பாடு
        - கோடுகளின் பயன்பாடு
        - பாவ உணர்ச்சி வெளிப்பாடு
- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

**இணைப்பு 7.2.2.2**

# வாசிப்புக் கோவை
## மெதவல விகாரை

- தூண்கள் மீது அமைக்கப்பட்ட விகாரை என்பதால் இதை "கற்றூண் விகாரை" என அழைக்கப்படுகிறது. கண்டிக்கு அண்மித்த மெதவல எனும் கிராமத்தில் அமைந்துள்ளது.
- இது 1 அடி 8 அங்குலம் உயரம் கொண்ட 34 கற்றூண்கள் மீது அமைந்துள்ளது. மத்திய கண்டிய பாரம்பரியத்தைச் சேர்ந்த மிக நுணுக்கமான, மிகச் சிறப்பான ஓவியங்கள் இவ்விகாரையில் காணப்படுகின்றன.
- இவ்விகாரையில் ஜாதகக் கதைகள், சத்சத்திய (ஏழு வாரங்கள்) போன்ற தலைப்புக்களில் கண்ணைக் கவரும் ஓவியங்கள் சிறுபட்டிகளாக வரையப்பட்டுள்ளன.
- ஓவியப்படைப்பாக்கத்தின் பிரதானமாக சிறப்பியல்புகள்:
  - பக்கப் பார்வை உருவங்கள்.
  - சிறுபட்டிகளிற்குள் ஓவியம் காணப்படுதலும் கதையின் தொடர்ச்சியான தன்மை.
  - இருபரிமாண இயல்புகளுடன் தட்டையான வர்ணப் பயன்பாடு.
  - மஞ்சள், பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை போன்ற நிறங்களின் பயன்பாடு.
  - டெம்பரா பிரெஸ்கோ நுட்பமுறை.
  - உருவங்களைச் சூழ நிறைவைக் காட்டுவதற்குரிய சிறப்பான நுணுக்கமான கோடுகள் இடப்பட்டுள்ளன.
  - பின்னணியாக பழுப்பு நிறம் பயன்படுத்தப்பட்டுள்ளமை.
  - பின்னணி வெளிகளை நிரப்புவதற்காக வெவ்வேறு அலங்கார வடிவமைப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை.
  - ஒட்டுமொத்த ஓவியத்திலும் அளவுத்திட்டம், தூரதரிசன விதிமுறைகள் கவனத்திற் கொள்ளப்படாமை.



**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.2** : கண்டிக் காலத்து மலைநாட்டுப் பாரம்பரியக் கட்டடக் கலைப் படைப்புக்கள் சித்திரங்கள், சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகளைக் கற்பார்.

**செயற்பாடு 7.2.3** : "தெகல்தொறுவ ரஜ மகா விகாரை"

**பாடவேளைகள்** : 2

**கற்றற் பேறுகள்:**

- தெகல்தொறுவ விகாரையின் கலைப் படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிவார்.
- தெகல்தொறுவ விகாரையின் ஓவியங்களைப் பெயரிடுவார்.
- சித்திரப் படைப்பாக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்த கலைப்பாணிகளின் இயல்புகளையும், நுட்பமுறைகளையும் விவரிப்பார்.
- தெகல்தொறுவ விகாரை ஓவியங்கள் பற்றிய தகவல்களைத் திரட்டுவார்.
- தெகல்தொறுவ விகாரை ஓவியங்களின் கலைப் பண்புகளை நயந்து மதிப்பார்.

**தர உள்ளீடு:**

- தெகல்தொறுவ விகாரை மற்றும் அதன் ஒவியங்களின் படங்கள்.
- இணைப்பு -7.2.3.1 செயற்பாட்டுப் பத்திரம் பிரதிகள்.
- இணைப்பு 7.2.3.2. வாசிப்புப் பத்திரம் பிரதிகள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 7.2.3.1

- விரும்பிய முறையொன்றைப் பயன்படுத்தி தெகல்தொறுவ விகாரை மற்றும் அதில் காணப்படும் ஓவியங்கள் பற்றி மாணவரது கவனத்தை ஈர்க்குக.
- தெகல்தொறுவ விகாரைப் படைப்பாக்கங்கள் குறித்து மாணவர்களிடம் வினவுக.
- தெகல்தொறுவ ஓவியங்கள் பற்றிய தகவல்களை சேகரிக்க மாணவர்களை வழிப்படுத்துக.

(15 நிமிடங்கள்)

### படிமுறை 7.2.3.2

- இணைப்பு 7.2.3.1 செயற்பாட்டுப் பத்திரப் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.2.3.2 வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- வாசிப்புப் பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினவப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்குக.

(50 நிமிடங்கள்)

### படிமுறை 7.2.3.3

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பிடுக.
- ஒட்டுமொத்தச் செயற்பாடு குறித்து மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்:

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி, இணைப்பு 7.2.3.1, இணைப்பு 7.2.3.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடாத்துங்கள்

- தெகல் தொறுவ விகாரையின் கலைப்படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிதல்.
- தெகல் தொறுவ விகாரையின் ஓவியங்களைப் பெயரிடுதல்.
- தெகல்தொறுவ ஓவியப் படைப்பாக்கத்துக்கு அடிப்படையாக அமைந்த கலைப்பாணி, ஊடகம், நுட்பமுறைகள் ஆகியவற்றை விவரித்தல்.
- தெகல் தொறுவ விகாரை ஓவியங்களின் கலைப் பண்புகளை நயத்தலும் மதித்தலும்.

இணைப்பு 7.2..3.1

## செயற்பாட்டுப்பத்திரம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள தெகல்தொறுவ விகாரைக் கலைப் படைப்புக்கங்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசித்து வழங்குங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

  01. தெகல்தொறுவ விகாரையின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
      - காலம் (யுகம்)
      - அனுசரணை
      - கலைஞன்

  03. தெகல்தொறுவ விகாரை ஓவியங்களுள் மிகச் சிறப்பான ஓவியங்களைப் பெயரிட்டு அவை தொடர்பாக மதிப்பீடு செய்க.
      - கலைப்பாணி
      - நுட்பமுறை
      - வர்ணப் பயன்பாடு
      - கோடுகளின் பயன்பாடு
      - பாவ உணர்ச்சி வெளிப்பாடு
      - தளப் பயன்பாடு

- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.


இணைப்பு 7.2..3.2

# வாசிப்புக் கோவை

- தெகல்தொறுவ ரஜ மகா விகாரை குகை விகாரை வகையைச் சேர்ந்த கண்டியர் காலத்து ஓவியங்கள் காணப்படும் சிறப்பான ஓர் இடம்.
- கீர்த்தி ஸ்ரீ ராஜசிங்க மன்னன் (கி.பி.1747 - 1782) இவ்விகாரையைக் கட்டுவித்தான்.
- கலைஞர் தெவரகம்பல சில்வத்தன இங்கு ஓவியங்களை வரைந்தார். கொஸ்வத்தே சித்தர நைதேயும், நீலகம பட்டபெந்தியும் இவருக்கு உதவியதாக வரலாற்றிற் கூறப்பட்டடுள்ளது.
- கர்ப்பக்கிரகத்தினுள் நுழையும் வாயிலின் இரு புறத்திலும் உள்ள பட்டிகளில் வெஸ்ஸந்தர ஜாதகக் கதையும், சுத்தசோம ஜாதகக் கதையும் வரையப்பட்டுள்ளன.
- விசேடமாக வெஸ்ஸந்தர ஜாதக கதையிலுள்ள யானைகள் தானம் பண்ணுவதைக் காட்டும் ஓவியம் மிகச் சிறப்பான ஒரு படைப்பாகக் கருதப்படுகிறது. யானைகளின் இயல்பாக அசைவுகளும், சந்தமும் காணப்படுவதே அதற்கான காரணமாகும்.
- தெகல் தொறுவ ஓவியப் படைப்புக்களில் காணப்படும் சிறப்பியல்புகள்:
    - பட்டிகளில் (வரிசை) கதைத் தொடர்ச்சியாக சித்தரித்தலும், பக்கத் தோற்ற உருவங்களும்.
    - இருபரிமாண இயல்புகளுடன் தட்டை வர்ணப் பயன்பாடும், பின்னணிக்காக இருண்ட சிவப்பு நிறப் பயன்பாடும்.
    - மஞ்சள், பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை போன்ற நிறங்களின் பயன்பாடு.
    - டெம்பரா பிரெஸ்கோ நுட்பமுறை.
    - உருவங்களைச் சூழ நிறைவைக் காட்டுவதற்குரிய சிறப்பான நுணுக்கமான கோடுகள் இடப்பட்டுள்ளன.
    - பின்னணி வெளிகளை நிரப்புவதற்காக வெவ்வேறு அலங்கார வடிவமைப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை
    - ஒட்டுமொத்த படைப்பாக்கத்தில், அளவுத்திட்டம், தூரக்காட்சி விதிமுறைகள் கவனத்திற் கொள்ளப்படாமை.
- இவ் விகாரையின் விதானத்தில் வரையப்பட்டுள்ள "மாற பராஜய" (மாறனைத் தோற்கடித்தல்) ஓவியமானது சிறப்பான சமூக வெளிப்பாட்டைக் கொண்ட ஒரு படைப்பாகக் கருதப்படுகின்றது.
- மாறனைத் தோற்கடித்தல் ஓவியத்தில் கையில் துவக்கு ஏந்திய மாறனின் தரப்பினர் காட்டப்பட்டிருத்தல் மூலம் இந்த ஓவியத்தில் ஓவியம் வரையப்பட்ட சமகால அனுபவங்களையும், பொருள்களையும் சித்தரிப்பதற்காக கலைஞன் எடுத்துள்ள முயற்சியை இனங்காண முடிகின்றது.



தெகல்தொருவ விகாரை



மாறனைத் தோற்கடித்தல்.



வெஸ்ஸந்தர மன்னன் - யானைகளைத் தானம் பண்ணுதல்

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.2** : கண்டிக் காலத்து மலைநாட்டுப் பாரம்பரியக் கட்டடக் கலைப் படைப்புக்கள் சித்திரங்கள், சிற்பங்கள், செதுக்கு வேலைப்பாடுகளைக் கற்பார்.

**செயற்பாடு 7.2.4** : "தம்புள்ளக் குன்றின் கலைச்சிறப்பு"

**பாடவேளைகள்** : 2

### கற்றற் பேறுகள்:

- தம்புள்ள விகாரைச் சித்திரங்களுக்கு அடிப்படையாக அமைந்த கருப்பொருள்களையும் ஓவியங்களையும் பெயரிடுவார்.
- தம்புள்ள விகாரைக் கலைப்படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிவார்.
- தம்புள்ள விகாரை ஓவியங்களுக்கு அடிப்படையாக அமைந்த கலைப்பாணியையும் நுட்பமுறைகளையும் விவரிப்பார்.
- தம்புள்ளை விகாரை ஓவியங்களின் கலைப்பண்புகளை மதித்து விவரிப்பார்.

### தர உள்ளீடு:

- தம்புள்ள விகாரை ஓவியங்கள், சிற்பங்களின் வர்ண படங்கள், இறுவட்டுகள், சிலைகள், சிற்பங்களின் ஒளிப் படங்கள்.
- இணைப்பு 7.2.4.1 செயற்பாட்டுப்பத்திரப் பிரதிகள்.
- இணைப்பு 7.2.4.2 வாசிப்புக் கோவைகளின் பிரதிகள்.

### செயற்பாடுளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 7.2.4.1

- தம்புள்ள விகாரையின் கட்டட நிர்மாணம், சுவரோவியங்கள், சிலைகள் மீது மாணவரது கவனத்தை ஈர்க்க.
- அக்கலை நிர்மாணங்களின் கருப்பொருள், வரையப்பட்டுள்ள பாணி, பெற்ற செல்வாக்கு என்பவை பற்றி மாணவர்களிடம் வினவுக.
- தம்புள்ள விகாரை பற்றிய தகவல்களைச் சேகரிக்கும்படி மாணவர்களை அறிவுறுத்துக.

(15 நிமிடங்கள்)

### படிமுறை 7.2.4.2

- இணைப்பு 7.1.4.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரம் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.1.4.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புக்கோவைகளைத் துணையாகக் கொண்டு விடையளிக்குமாறு வழிப்படுத்துக.

(50 நிமிடங்கள்)

### படிமுறை 7.2.4.3

- மாணவர்களது விடைகளைப் பொருத்தமானவாறு மதிப்பிடுக.
- ஒட்டுமொத்தச் செயற்பாடு பற்றி மீட்டாய்க.

(15 நிமிடங்கள்)

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி இணைப்பு 7.1.1.1, இணைப்பு 7.1.1.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடாத்துங்கள்

- தம்புள்ள விகாரைக் கலைப்படைப்புக்களின் பின்னணி பற்றித் தேடியறிதல்.
- தம்புள்ள விகாரை ஓவியங்களின் கருப்பொருள்களையும் அவற்றின் சிறப்புமிக்க ஓவியங்களையும் பெயரிடுதல்.
- தம்புள்ள விகாரை ஓவியங்களுக்கு அடிப்படையாக அமைந்த கலைப்பாணியையும் நுட்பமுறையையும் விவரித்தல்.
- தம்புள்ள விகாரை ஓவியங்களின் கலைப்பண்புகளை மதித்து விவரித்தல்.

இணைப்பு 7.2..4.1

## செயற்பாட்டுப்பத்திரம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள தம்புள்ள விகாரைக் கலைப் படைப்புக்கங்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்கு தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசியுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.

01. தம்புள்ள விகாரையின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
    - காலம் (யுகம்)
    - அனுசரணை
    - கலைஞன்

03. தம்புள்ள விகாரை ஓவியங்களுள் மிகச் சிறப்பானவற்றைக் குறிப்பிட்டு அவற்றை மதிப்பீடுக
    - கலைப்பாணி
    - நுட்பமுறை
    - வர்ணப் பயன்பாடு.
    - கோடுகளின் பயன்பாடு.
    - பாவ - உணர்ச்சி வெளிப்பாடு.
    - தளத்தைப் பயன்படுத்தல்.

- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

இணைப்பு 7.2.4.2

# வாசிப்புக் கோவை

- கி.பி. முதலாம் நூற்றாண்டில் வலகம்பா மன்னரால் (வட்டகாமினி அபய) இவ் விகாரை கட்டுவிக்கப்பட்டுள்ளது. இது ஐந்து பெரும் கற்குகைகளைக் கொண்டது. இவ்விகாரையில் உன்னத படைப்புகளான பல ஓவியங்களும், சிலைகளும் காணப்படுகிறன.
    - தேவ ராஜ குகை
    - மகா ராஜ குகை
    - மகா புதிய விகாரை
    - பின்விகாரை
    - இரண்டாம் புதிய விகாரை

- மகாராஜ குகையில் புத்தரின் சிலைகளும், அரசர்களின் சிலைகளும் உள்ளன.
- தம்புள்ள விகாரை ஓவியங்களின் பண்புகள் கண்டிக் காலத்துக்கு உரியன. அனுராதபுர காலத்துக்குரியவை எனக் கருதப்படும் ஓவியங்களையும் இங்கு காணலாம்.

தம்புள்ள விகாரை ஓவியங்களை வரைந்த பெருமை நீலகம் பரம்பரையைச் சார்ந்த துறவிகளையே சாரும்.

- தம்புள்ளக் கால ஓவியங்களைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.
    - போதிசத்துவரின் வாழ்க்கைக் கட்டங்கள்.
        - இருபத்தெட்டு விவரணங்கள் (சூவிசி விவரணய)
        - ஜாதகக் கதைகள்
- புத்தரின் வாழ்க்கைக் கட்டங்கள்.
    - மாறனைத் தோற்கடித்தல் (மாறமராஜய)
    - பொற்காசுகள் பரப்பி ஜேதவனத்தை பூசையாக வழங்குதல்.
- வரலாற்று நிகழ்வுகள்.
    - விஜயன் வருகை
    - மகிந்தரின் வருகை
    - ஸ்ரீ மகாபோதிக்கிளை (வெள்ளரசுக் கிளை) கொண்டு வருதல்.
    - எல்லாளன் - துட்டகைமுனு யுத்தம்.
- ஓவியப் படைப்புக்களின் சிறப்பியல்புகள்.
    - பக்கத்தோற்ற உருவங்கள்.
    - இருபரிமாண இயல்புகளுடன் தட்டையான வர்ணப் பயன்பாடு.
    - மஞ்சள், பச்சை, சிவப்பு, கறுப்பு, வெள்ளை போன்ற நிறங்களின் பயன்பாடு.
    - உலர் சாந்தின் மீது சுவரோவியங்கள் வரையும் பிரெஸ்கோ சிக்கோ நுட்பமுறை பயன்பாடு.
    - உருவங்களைச் சூழ நிறைவைக் காட்டுவதற்கு சிறப்பான நுணுக்கமான கோடுகள் இடப்பட்டுள்ளன.
    - பின்னணி வெளிகளை நிரப்புவதற்காக வெவ்வேறு அலங்கார வடிவமைப்புக்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை.
    - ஒட்டுமொத்த படைப்பாக்கத்தில் அளவுத்திட்டம், தூரதரிசன விதிமுறைகள் கவனத்திற் கொள்ளப்படாமை.
- மாறனைத் தோற்கடித்தல் (மாறபராஜய) ஓவியத்தில் புத்தர் பூமி பரிச முத்திரை நிலையோடு காணப்படுகிறார்.
- இவ்வேளை பூமித் தாய் புத்தர் நிலையை உறுதிப்படுத்தும் விதத்தில் எழும் காட்சி காட்டப்பட்டுள்ளது. ஒரு புறத்தே மாறனின் புதல்விகளின் மூவரும் மாறனின் சேனையும் காட்டப்பட்டுள்ள விதம் சிறப்பானது.



தம்புள்ளை குகை விகாரைத் தொகுதி




புத்தர் சிலைகளும் தேவர் சிலைகளும் (சமன் தெய்வரம் )



மாறனைத் தோற்கடித்தல் ஓவியத்தின் ஒருபகுதி



மாறனைத் தோற்கடித்தல் ஓவியத்தின் ஒருபகுதி



ஆயிரம் புத்தர் உருவங்கள்



அனோதப்த ஏரி (அனோதந்த குளம்)

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.3** : இந்து நதிக் கரைக் காலத்தைச் சேர்ந்த கலைப் படைப்புக்களைக் கற்பார்.

**செயற்பாடு 7.3.1** : " சிந்துவெளி நாகரீகத்தைச் சேர்ந்த கலைப்படைப்புக்களை மதிப்போம். "

**பாடவேளைகள்** : 01

## கற்றற் பேறுகள்:

- சிந்துவெளி நாகரீகத்திலிருந்து கிடைத்துள்ள சிறந்த கலை ஆக்கங்களை தேடிப்பார்ப்பார்.
- சிந்துவெளி நகாரீக செதுக்கல் வேலைப்பாடுகள், சிற்பங்களைப் பெயரிடுவார்.
- சிந்துவெளி நாகரீக கலைப்படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியை விவரிப்பார்.
- படைப்பாக்கப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும், நுட்பமுறைகளையும் விவரிப்பார்.
- சிந்துவெளி நாகரீக கலைப் படைப்புக்களின் சிறப்பியல்புகளை மதிப்பிடுவார்.

## தர உள்ளீடுகள்:

- இணைப்பு 7.3.1.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவம்.
- இணைப்பு 7.3.1.2 இற்குரிய வாசிப்புப்படிவம்.
- சிந்துவெளி நாகரீகத்தில் கிடைக்கப்பெற்ற கலை ஆக்கங்களின் ஒளிப்படங்கள்.

## செயற்பாட்டைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 7.3.1.1

- சிந்துவெளி நாகரீகத்தைச் சேர்ந்த கலைப் படைப்புக்களை மாணவர்களுக்கு காட்சிப்படுத்துக.
- அளவாக்கங்கள் பற்றி மாணவர்களின் கருத்துக்களை வினவுக.

(10 நிமிடங்கள்)

### படிமுறை 7.3.1.2

- இணைப்பு 7.3.3.1 இற்குரிய செயற்பாட்டுப் படிவப் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.3.3.2 இற்குரிய வாசிப்புப் படிவங்களை மாணவர்களுக்கு வழங்குங்கள்.
- மாணவர்களை உரிய செயற்பாட்டில் ஈடுபடுத்துக.

(20 நிமிடங்கள்)

## படிமுறை 7.3.1.3

- மாணவர்களின் ஆய்வுப் பெறுபேறுகளை வகுப்பில் முன்வைப்பதற்கு சந்தர்ப்பத்தை வழங்குக.
- ஏனைய மாணவர்களிடம் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவுக.
- சிந்துவெளி நாகரீகத்தைச் சேர்ந்த கலைப்படைப்புக்கள் பற்றி மீட்டாய்வு செய்க.

(10 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி இணைப்பு 7.3.1.1, இணைப்பு 7.3.1.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துங்கள்

- சிந்துவெளி நாகரீகத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற மிகச் சிறந்த கலைப்படைப்புக்களை பெயரிடுதல்.
- சிந்துவெளி நாகரீகத்தைச் சேர்ந்த சிற்பங்கள், செதுக்கல் வேலைப்பாடுகளைப் பெயரிடுதல்.
- சிந்துவெளி நாகரிக கலைப்படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிதல்.
- படைப்பாக்கப் பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்கள் மற்றும் நுட்பமுறைகளை விவரித்தல்.
- சிந்துவெளி நாகரீகக் கலைப்படைப்புக்களின் இயல்புகளை மதிப்பிடுதல்.

இணைப்பு 7.3.1.1

## செயற்பாட்டுப் படிவம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள சிந்துவெளி நாகரீகக் கலைப் படைப்புக்கங்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசியுங்கள்.
- சிந்துவெளி நாகரீகக் கலைப்படைப்புக்களின் சிறப்பியல்புகளை இனங்கண்டு கொள்ளுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  01. சிந்துவெளி நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியையும், புவியியல் அமைவையும் சுருக்கமாக விளக்குக.
  02. சிந்துவெளி நாகரீக சிற்பங்கள், செதுக்கல் வேலைப்பாடுகளைப் பெயரிட்டு, அவ்வொவ்வொரு கலைப்படைப்பு தொடர்பாகவும் பின்வரும் விடயங்களின் கீழ் மதிப்பிடுக.
      - காலம் (யுகம்)
      - காணப்படும் இடங்கள்
      - ஊடகம்
      - நுட்பமுறைகள்
      - கலைப்பண்புகள்
      - கலைஞன்
      - உருவங்களின் பயன்பாடும், அவற்றின் தன்மையும்.
      - பாவ - உணர்ச்சி வெளிப்பாடு.
- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

இணைப்பு 7.3.1.2

## வாசிப்புப் பத்திரம்

**சிந்துவெளி நாகரீகம்**

- மெசப்பொத்தேமியா, எகிப்து போன்ற புராதன வரலாற்றுக்குரிய உயர் நாகரீகங்களிற்கு ஒப்பான தரத்தைக் கொண்டதென சிந்துவெளி நாகரீகம் கருதப்படுகிறது. ஜோன் மார்ஷல் எனும் தொல்பொருள் ஆய்வு அறிஞரின் நம்பிக்கை சிந்துவெளி நாகரீகம் கி.மு.3250 - 2750 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியைக் கொண்டதென்பதாகும். ஆனால் சிந்துவெளி நாகரீகம் கி.மு.2500 - 1500 இற்கு இடைப்பட்டது என இந்தியத் தொல்பொருள் ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.
- இந்த நாகரீகம் மொகெஞ்சாதாரோ, ஹரப்பா நாகரீகம் எனவும் அழைக்கப்படும்.

- சிந்தி மொழியில் மொகென் - சொ - தாரோ என்பது “இறந்தவர்களின் கட்டிடம் “ என்னும் கருத்தைத் தரும். இது தற்போது பாகிஸ்தானுக்கு உரிய சின்தி கி லர்கானா மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- ஹரப்பா தற்பொழுது பாகிஸ்தானில் மேற்கு பஞ்சாப் பிரதேசத்தில் மொன்ரிகோமறி மாவட்டத்தில் றாவ் நதிக் கரையில் அமைந்துள்ளது.

- சிந்துவெளி நாகரீகம் மிக விசாலமான நிலப்பரப்பில் பரந்து இருந்துள்ளது. இந்தப் பண்பாட்டைக் கொண்ட 70இற்கு மேலான இடங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.
- மொகஞ்சதாரோ, ஹரப்பா நாகரீகத்திற்கு உரிய நகரவாசிகள் உயர்கலை விற்பன்னர்களாக திகழ்ந்துள்ளனர் என்பதற்கு இங்கு அகழ்வாய்வுகளின்போது கிடைக்கப்பெற்ற பொருட்கள், உபகரணங்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. இக்கலை ஆக்கங்களுக்கிடையே
    - கல், உலோகச் சிலைகள்.
    - கட்டட நிர்மாணங்கள்
    - முத்திரைகள். (இலச்சினைகள்)
    - ஆபரணங்கள், உபகரணங்கள்.
    - விளையாட்டுப் பொருட்கள்

ஆகியவை முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

### சிந்து வெளி நாகரீகச் சிறப்புக்கள்.

**பூசகர் உருவம்**



- பூசக உருவம் மொகஞ்சதாரோ நகரத்திலிருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உடலின் மேற்பகுதி காட்டப்பட்டுள்ளது.
- உயிர்ப்பான ஒருவரைச் சித்தரிப்பதற்கு முயற்சி எடுக்கப்பட்டுளளமையைக் காணமுடிகிறது.
- 19 சென்ரி மீற்றர் உயரமான இது செஞ்சுண்ணாம்பினால் செய்யப்பட்டுள்ளது.
- இது பூசக உருவாகும் என்பது பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.
- உடலின் ஒரு பக்கத்தை மூடியுள்ள சால்வை, பாதி மூடிய கண்கள், பாதி வழிக்கப்பட்ட தலை, தியான நிலை போன்ற இயல்புகள் இவ்வுருவினைப் பூசகர் உரு எனக் குறிப்பிடுவதற்கான காரணமாகும்.
- சால்வை மூன்று இதழ் கொண்ட மலர் அல்லது இலை வடிவ கோலத்தினால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.
- நெற்றி மீது வளையத்துடன் கூடிய நெற்றிப்பட்டி அமைந்துள்ளது.
- தத்ரூபமான படைப்பாக்கமாக அன்றி, மோடிப்படுத்தப்பட்ட ஒரு கலைப்படைப்பாக இது காணப்படுகிறது.

## நடன மாதின் வடிவம்



- கலை விமர்சகர்களின் அவதானத்திற்கு உட்பட்ட ஆக்கங்களிடையே ஹரப்பாவில் இருந்து கிடைக்கப்பெற்ற வெண்கலத்தினால் நிர்மாணிக்கப்பட்ட நடன மாதின் உருவச்சிலை பிரதான இடத்தைப் பெறுகின்றது.
- அன்று சிந்துவெளி நாகரீகவாசிகள் உலோக வார்ப்புத் தொழில்நுட்பத் திறன் பெற்று இருந்ததற்கு வெண்கலத்தில் நிர்மாணிக்கப்பட்ட நடனமாதின் வடிவம் சிறந்த ஒரு சாட்சியாக அமைகிறது.
- உலோக வார்ப்பு முறையில் முழுப்படைப்பாக ஆக்கப்பட்டுள்ள இதன் உயரம் 4½ அங்குலமாகும்.
- பெண் உடலின் நளினத் தன்மை சிறப்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
- பாதி மூடிய கண்கள், கோபம் கொண்ட உடல்நிலையில் நின்று கொண்டு ஒரு கையை இடையின் மீது வைத்து, மறு கை சிறிது மடக்கி காலின் மீது வைக்கப்பட்டுள்ளது.
- மெலிந்த உடல்வாகுடன் நிர்வாணமாக அமைக்கப்பட்ட இப்பெண் உருவச் சிலையானது மிகுந்த கலைச் சிறப்புடையது.
- கழுத்தில் மாலை ஒன்றும், இருகைகளிலும் நிறைந்த வளையல்களும் அணியப்பட்டுள்ளதால் அக்காலத்தில் ஆபரணங்கள் அணிந்தமைக்குச் சிறந்த சான்றாகும்.
- இதில் ஆலயத்தில் நடனமாடும் பெண் காட்டப்பட்டுள்ளதாகக் கருதப்படுகிறது.
- தற்போது புதுடில்லியில் உள்ள தேசிய தொல்பொருட்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

**சிவப்பு மணற் கல்லினால் ஆன மனித முண்ட உருவம்**





- மனித உடலின் அழகை மிக மென்மையாகவும், நுட்பமாகவும் காட்டும் முண்ட மனித உருவம். சிந்துவெளி நாகரீகத்தின் உயர்தரத்தை உடைய ஒரு கலை ஆக்கமாகும்.
- கிரேக்க ஆக்கங்களில் காணப்படுகின்ற மேன்மைச் சிற்ப இயல்புகள் காணப்படுகிறது. இச்சிற்பத்தில் தசைகளின் இயல்புகளைச் சிறப்பாக வெளிக்காட்டப்பட்டுள்ளது.
- 4″ அங்குலம் (10 சென்றி மீற்றர்) உயரத்தைக் கொண்ட இச்சிலை சிவப்பு நிற சுண்ணாம்புக் மணற் கல்லில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. முழுப் படைப்பு ஆக்கமாக ஹரப்பாவில் இருந்து கிடைக்கப் பெற்றுள்ளது. இச்சிற்பத்தின் மூலம் கட்டுமானமான ஆண் ஒருவருடைய உடல் இயல்பு வெளிக்காட்டப்பட்டுள்ளது. நிர்வாணமாகக் காணப்படும் இவ்வடிவம் சிவனுடைய மூலக்காட்சி நிர்மாணிப்பு எனக் கருதப்படுவதற்கான ஏனெனில் இச்சிற்பத்திற்கு நான்கு கைகள் இருந்ததற்குரிய சான்று காணப்படுகின்றமையாகும்.
- தலை, கைகள், கால்கள் காணப்படவில்லை. தலையும், கை, கால்களும் வேறுவேறு பகுதிகளாக செய்யப்பட்டு பொருத்தப்பட்டு உள்ளமை தெரிகின்றது. இப்பகுதிகளை இணைத்துக் கொள்வதற்காகத் துளைகள் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது.

**சாம்பல்நிற மணற் கல்லில் செய்த முண்ட மனித உருவம்**





- ஹரப்பாவில் இருந்து கிடைக்கப் பெற்ற இந்த முண்ட மனித உருவம் சாம்பல் நிற மணற் கல்லினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- 10 சென்ரி மீற்றர் உயரத்தைக் கொண்டது. இடது காலை மேலாகத் தூக்கியவாறு நடன நிலையிற் காணப்படுகிறது. எனவே இது சிவபெருமானின் நடன வடிவத்தை வெளிப்படுத்தும் நடராஜர் வடிவம் என்பது விமர்சகர்களது கருத்தாகும்.
- உரோம சிற்பங்களில் காணப்படும் இயற்கையான பண்புகள் இந்த முண்டத்தில் வெளிப்படுகிறது.

**முத்திரைகள் (இலச்சினைகள்)**

- சிந்துவெளி நாகரீகத்தில் இருந்து 2000 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையைக் கொண்ட முத்திரைகள் (இலச்சினைகள்) கிடைக்கப் பெற்றுள்ளன.
- இம்முத்திரைகள் வணிகப் பொருட்களில் அடையாளம் (குறியீடுகள்) இடுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.
- இம் முத்திரைகள் நீள்சதுரம், எண்கோணம், சதுர வடிவமைப்பைக் கொண்டுள்ளன. இந்த முத்திரைகளில் உருவங்களும், எழுத்துக்களும் காணப்படுகின்றன. ஆனால் இவ்வெழுத்துக்களை இன்று வரை வாசித்துக் கொள்ள முடியவில்லை.
- இம்முத்திரைகளின் மூலம் சிந்துவெளி நாகரிக மக்களின் சமய நம்பிக்கைகள் வெளிக்காட்டப்படுகின்றன.
- அவர்களது வாழ்க்கைப் பாங்கு, பண்பாட்டு இயல்புகள், கலைத்திறன்கள், தொழில்நுட்பத்திறன்கள் போன்றவை பற்றிய தகவல்களையும் அவை தருகின்றன.

**திமிலுடன் கூடிய எருது உருவம்**



- சிந்துவெளி நாகரீகத்தில் எருதுவடிவத்தைக் கொண்ட முத்திரைகள் 25 இற்கும் மேற்பட்டவை கிடைக்கப்பெற்றன. அவற்றிடையே கலையம்சத்துடன் கருத்தை வெளிப்படுத்தும் முத்திரையானது திமிலுடன் கூடிய எருது வடிவ முத்திரையாகும்.
- இதில் எருதின் இயல்புகள், சிறப்புக்கள் இயற்கைத் தன்மையுடன் நிர்மாணிக்கப்பட்டு உள்ளமையைக் காணலாம்.
- சிவபெருமானின் வாகனம் நந்தி எனும் கருத்தையே இது குறியீடாகக் கொண்டு உள்ளதெனக் கருதப்படுகிறது.
- கழுத்தில் காணப்படும் மடிப்பு மடிப்பான சுருக்கமானது மேலும் அழகை வெளிக்காட்டுகிறது.
- சில எருது வடிவ முத்திரைகளில் எருதைச் சுற்றி வாசனைப் புகைப்பொருட்கள் காணப்படுவதால் எருது பூசைக்குரியது என மதித்து, வழிபட்டு பூசை செய்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது.
- இம்முத்திரைகளைத் தவிர தனிக் கொம்பு எருது, குறுங்கொம்பு எருது வடிவக் குறியீடுகளைக் கொண்ட முத்திரைகளும் பெருமளவில் கிடைக்கப்பெற்றுள்ளமை பதிவாகி உள்ளது.
- எருது உருவம் ஒரு பக்கத்தை மாத்திரம் காட்டும் வகையில் ஆக்கப்பட்டுள்ளது. அத்தோடு வலிமை, எடுப்பான தன்மையும் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

**பசுபதி (சிவ) முத்திரை**



- இந்த முத்திரை கொம்புத் தெய்வம் என இனங்காணப்படுகிறது.
- இவ்வுருவின் தலையில் இரு கொம்புகளுடன் கூடிய தலையணி ஒன்றுள்ளது.
- ஆசனத்தின் கீழ் மான்கள், சுற்றிவரக் காண்டாமிருகம், புலி, யானை, எருது வடிவங்கள் காணப்படுகிறது.
- இது சிவபெருமானின் மூலத்தை புலப்படுத்துவதாக ஜோன் மார்ஷல் அவர்கள் கருத்துத் தெரிவித்துள்ளார்.
- சிவனின் ஒரு வடிவமாகிய பசுபதி (உயிர்களின் அதிபதியும், விவசாயத்துக்கான அதிபதியும்) இதன் மூலம் காட்டப்பட்டுள்ளது.
- தெய்வ உருவம் முன்புறத்தோற்றத்திலும், ஏனைய பிராணிகளின் உருவங்கள் பக்கத் தோற்றத்திலும் படைக்கப்பட்டுள்ளன.

**தேர்ச்சி 7.0** : வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.4** : எகிப்திய, கிரேக்கக் கலைப் படைப்புக்களைக் கற்பார்.

**செயற்பாடு 7.4.1** : முக்கியமான சிற்ப, ஓவிய ஆக்கங்கள்.
எகிப்திய சிற்பங்கள் - நெபிரிற்றி (Neferiti), எழுத்தாளர் (Scribe). எகிப்திய ஓவியங்கள் - ஸ்பின்க்ஸ் (Sphinx) மீடம் வாத்துக்கள் (Geese of Meidon) , பறவை வேட்டை (Fowling Scenc)

**பாடவேளைகள்** : 2

## கற்றற் பேறுகள்:

- எகிப்திய சிற்பங்கள், ஓவியங்களைப் பெயரிடுவார்.
- எகிப்திய கலைப் படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிவார்.
- எகிப்திய கலைப்படைப்புக்களுக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும், சட்டங்களையும் விபரிப்பார்.
- எகிப்திய கலைப் படைப்புக்களின் கலைப்பண்புகளை மதிப்பிடுவார்.

## தர உள்ளீடுகள்:

- எகிப்திய ஓவியங்கள் சிற்பங்கள் உள்ளடக்கிய வர்ண ஒளிப் படங்கள்.
- **எகிப்தியச் சிற்பங்கள்**: - ஸ்பின்க்ஸ் (Spinx)
  - எழுத்தாளர் ( Scriber)
  - நெபிரிற்றி அரிசி (Neferiti)

  **எகிப்திய ஓவியங்கள்** : - மீடம் வாத்துக்கள் (Geese of Meidum)
  - பறவை வேட்டை (Fowling Scene)
- இணைப்பு 7.4.1.1 செயற்பாட்டுப் படிவத்தின் பிரதிகள்.
- இணைப்பு 7.4.1.2. வாசிப்புக் கோவையின் பிரதிகள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

### படிமுறை 7.4.1.1

- எகிப்திய ஓவியங்கள், சிற்பங்கள் மீது மாணவரது கவனத்தைத் திருப்புக.
- அக்கலை நிர்மாணங்கள் பற்றி மாணவர்களிடம் வினவுக.
- எகிப்தியச் சிற்பங்கள், ஓவியங்கள் பற்றிய தகவல்களை சேகரிக்கச் செய்க.

(15 நிமிடங்கள்)

### படிமுறை 7.4.1.2

- இணைப்பு 7.4.1.1 செயற்பாட்டுப் பத்திரப் பிரதிகளை மாணவர்களுக்கு வழங்குக.
- இணைப்பு 7.4.1.2 வாசிப்புப் பத்திரத்தை மாணவர்களுக்கு வழங்குக.
- வாசிப்புப் பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குமாறு அறிவுறுததுக.

(50 நிமிடங்கள்)

**படிமுறை 7.4.1.3**

- எழுமாறாகத் தெரிவு செய்த மாணவர்கள் சிலரது விடைத்தாள்களை மதிப்பிடுக.
- ஒட்டுமொத்தமாக மீட்டாய்வு செய்க.

(15 நிமிடங்கள்)

## கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்தி இணைப்பு 7.4.1.1, இணைப்பு 7.4.1.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடாத்துங்கள்

- எகிப்தியச் சிற்பங்கள், ஓவியங்களின் கருப்பொருள்களையும், அப்படைப்புக்களையும் பெயரிடுதல்.
- எகிப்தியக் கலைப்படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிதல்.
- எகிப்தியக் கலைப்படைப்புக்களின் கலைப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்கள், நுட்பமுறைகளை விவரித்தல்.
- எகிப்தியக் கலைப்படைப்புக்களின் சிறப்பான கலைப்பண்புகளை மதிப்பிடுதல்.

இணைப்பு 7.4.1.1

## செயற்பாட்டுப்பத்திரம்

- காட்சிப்படுத்தப்பட்டுள்ள எகிப்தியக் கலைப் படைப்புக்கங்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- தரப்பட்டுள்ள வாசிப்புப் பத்திரத்தைக் கவனமாக வாசியுங்கள்.
- எகிப்தியக் கலைப்படைப்புக்களின் சிறப்பியல்புகளை இனங்கண்டு கொள்ளுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
  01. எகிப்திய நாகரிகத்தின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
  02. எகிப்தியச் சிற்பங்களைப் பெயரிட்டு, அச்சிற்பங்கள் தொடர்பாக பின்வரும் விடயங்களின் கீழ் மதிப்பிடுக.
      - காலம் (யுகம்)
      - அனுசரணை
      - கலைஞன்
  03. எகிப்தியச் சிற்பங்களுள் மிகச் சிறப்பானவற்றைக் குறிப்பிட்டு அவற்றை மதிப்பீடுக
      - கலைப்பாணி
      - அவை காணப்படும் இடங்கள்
      - கலைஞர்
      - பாரம்பரியம்
      - ஊடகம்
      - நுட்பமுறை
      - கலைத்துவப் பண்புகள்
        - உருவப் பயன்பாடும் தன்மையும்
        - உணர்வு - பாவ வெளிப்பாடு.
- நீங்கள் கண்டறிந்தவற்றை வகுப்பில் முன்வைக்க ஆயத்தஞ் செய்து கொள்ளுங்கள்.

## வாசிப்புக் கோவை

- நைல் நதிக்கரையில் அமைவு பெற்றிருந்த பண்டைய நாகரிகமாகிய எகிப்திய நாகரிகம் கி.மு. 3000 - 30 வரையான காலத்துக்குரியது.
- எகிப்திய பாராவோ (Pharaoh ) மன்னர்களின் புகழைக் கூறும் மாபெரும் பிரமிட்டுகள், கட்டட நிர்மாணங்கள், ஓவியங்கள், சிற்பங்கள், நிர்மாணிக்க மூலகாரணமாக இருந்தது இறப்புக்குப் பின் வாழ்க்கை எனும் எண்ணக்கருவின் நம்பிக்கையே ஆகும்.
- அமர்ணா, கீஸா ஆகிய நகரங்களை அண்டி எகிப்திய நிர்மாணங்கள் பல காணப்படுகின்றன.




## ஸ்பின்க்ஸ் (Spinx)





- கி.மு. 2440 காலப் பகுதிக்குரிய ஸ்பின்க்ஸ் சிற்பம் குபு பிரமிட்டுக்கு முன்னால் 66 அடி உயரமாகவும் 240 அடி அகலத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- எகிப்தியக் கலையில் பல ஸ்பின்க்ஸ் சிற்பங்கள் காணக்கூடியதாக இருக்கின்றன. இவற்றுள் மாபெரும் ஸ்பின்கஸ் (Great Sphinx) எனும் சிற்பம் முக்கியத்துவம் வாய்ந்தது. மனித முகமும் விலங்குடலும் (சிம்மம்) கொண்ட இது எகிப்திய கலைகளினுள் சிறந்த ஒரு சிற்பம் ஆகும்.
- ஸ்பின்க்ஸ் படைப்பானது பாராவோ மன்னனின் வலிமையையும், பாதுகாப்புத் தொடர்பான எண்ணக்கருவையும் காட்டுகின்றது என்பது விமர்சகர்களின் கருத்தாகும்.


## ஸ்கிறைப் (எழுதுபவர்) (Scribe)

- எகிப்திய சிற்பங்களில் எழுத்தாளர் அல்லது ஸ்கிறைப் ஒரு முக்கிய பண்டைய காலப் படைப்பு ஆகும்.
- இவ்வாறான பல ஸ்கிறைப் சிற்பங்கள் எகிப்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளன ஆயினும், பிரான்ஸ் இல் உள்ள லூவர் நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கும் ஸ்கிறைப் சிற்பம் சிறப்பானதாகும்.
- சுண்ணாம்புக் கல்லினால் நிர்மாணிக்கப்பட்டுள்ள 2 அடி உயரமான இது முக்கோண வடிவத்தில் கட்டமைப்பைக் கொண்டது.
- முழுப்புடைப்பு முறையில் மரத்தில் படைக்கப்பட்டுள்ளது. பளிங்குக் கல்லினால் கட்குழிகள் நிரப்பப்பட்டுள்ளன.
- வர்ணம் தீட்டப்பட்டுள்ளது. கி.மு.2600 - 2350 காலப் பகுதியைச் சேர்ந்தது.
- சகாரா (Sakkara) பிரதேசத்தில் ஒரு கல்லறைக்குள் இது கண்டெடுக்கப்பட்டுள்ளது.
- இது தமது எஜமான் கூறும் எதையோ எழுதுவதற்குத் தயாராக இருப்பவரின் தோற்றத்தைக் குறித்து நிற்கிறது.

## நெபிரிற்றி அரசி (Neferiti)








- எகிப்திய அமர்ணா யுகத்தை அதாவது புதிய இராசதானி காலத்திற் படைக்கப்பட்ட நெபரிற்றி அரசியின் உருவம் தற்போது பேர்லின் அரும்பொருட் காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளது.
- இது பெண் உடலின் மேற்பகுதியைக் காட்டும் முழுப்புடைப்பு நுட்பமுறையில் படைக்கப்பட்டுள்ள சிற்பமாகும்.
- எகிப்தியக் கலைப்படைப்புக்களில் காணப்படும் பாணி சார்ந்த பாரம்பரியத்திலிருந்து விடுபட்டு, இயற்பண்பான பாணியின் இயல்புகள் இச்சிற்பத்தில் காணப்படுகின்றன.
- 20 அங்குல உயரமாகப் படைக்கப்பட்டுள்ள இச்சிற்பம், சுண்ணக்கல் ஊடகத்தில் படைக்கப்பட்டு, வர்ணந்தீட்டப்பட்டுள்ளது.
- எகிப்து பராவோ அரசர்களில் ஒருவரான புதிய இராசதானியின் அக்னேதன் (Aknenaten) அரசனின் அரசியாகக் கருதப்படும் நெபிரிற்றியின் இச்சிற்பம் கி.மு. 1375 காலத்துக்கு உரியது.
- தலையில் அணிந்துள்ள உயரமான மகுடமும், கழுத்தில் அணிந்துள்ள மாலையும் சிற்பத்துக்கு அழகூட்டும் வகையில் அமைந்துள்ளதோடு பேரரசியின் வலிமையையும், பெருமையையும் காட்டி நிற்கின்றன.

**எகிப்திய ஓவியப்படைப்புக்கள்**

- எகிப்திய ஓவியப்படைப்புக்களை (கல்லறை) பிரமிட்டுக்களிலும், தேவாலயங்களிலும் காணலாம்.
- இரு பரிமாணத்தன்மை, பக்கத்தோற்றம் போன்ற இயல்புகளை இந்த படைப்புகளில் காணலாம்.
- நிறந்தீட்டும் போது பெரும்பாலும் தட்டைத்தன்மை பயன்படுத்தப்பட்டுள்ளது.
- கற்பனையான எண்ணக்கருக்கள், மக்கள் வாழ்க்கையில் பல்வேறு நிகழ்வுகள், அரசர்கள், அரசிகள் தொடர்பான நிகழ்வுகள் போன்றனவற்றை எகிப்திய கட்டட நிர்மாணங்களில் காணலாம்.
- எகிப்திய ஓவியங்களுக்கு இடையே குறிப்பிடப்பட்டுள்ள ஹைரொக்லிபிக்ஸ் (Hiero-glyphics) அதாவது உருவ அட்சரங்கள் எழுத்துக்களின் முதலாவது கட்டம் என்ற வகையில் இன்றும் தொல்பொருள் ஆய்வாளர்களின் ஆராய்ச்சிக்கும் அவதானிப்புக்கும் உட்பட்டு வருகின்றது.

**மீடம் வாத்துக்கள் (Geese of Meidum)**







- கி.மு. 2630 காலத்தைச் சேர்ந்த இந்த ஓவியம், எகிப்திய பண்டைய ஓவியப்படைப்புக்களுள் ஒன்றாகும்.
- மீடம் இல் மஸ்தாபா வகையைச் சேர்ந்த சமாதிக்கூடமொன்றில் காணப்பட்ட இந்த ஓவியத்தின் ஒன்றன் பின் ஒன்றாகச் செல்லும் ஆறு வாத்துக்கள் காணப்படுகின்றன. அந்த ஆறு வாத்துக்களும் மும்மூன்றாக இரண்டு பக்கங்களிலும் ஒன்றன் பின் ஒன்றாகச் செல்வது போன்று சித்தரிக்கப்பட்டுள்ளது.
- உருவங்களைத் தளத்தின் மீது சேர்மானஞ் செய்யும்போது, முன்னாலுள்ள வாத்துக்களின் தலை நிலத்தை நோக்கியதாக இருக்குமாறும் உயிரோட்டமான தன்மையுடையதாகவும் அவற்றின் மெய்நிலைகளைப் படி ஒழுங்கு முறையாகக் காட்டுவதற்கும் கலைஞர் முயற்சி செய்துள்ளார்.
- நிறந்தீட்டும் போது கறுப்பு, வெள்ளை, கபில நிறங்களின் வெவ்வேறு சாயல்கள் வெளிப்பட்டுள்ளது. கோடுகள் மூலம் நுணுக்கமாகவும், விரிவாகவும் வடிவங்கள் காட்டப்பட்டுள்ளன. இந்த இயல்புகள் எகிப்திய மனித உருவ ஓவியங்கள் வரைவதற்காகப் பயன்படுத்தப்படவில்லை. அதாவது நிறங்கள், கோடுகள் மூலம் இயற்கையான இயல்புகளுகளோடு முப்பரிமாண இயல்புகள் வெளிப்படுத்தப்பட்டுள்ளமையைக் இனங்காணலாம்.


பறவை வேட்டை (Fowling Scene)











- பறவை வேட்டை ஓவியம் கி.மு. 1580 - 1350 இற்கும் இடைப்பட்ட காலத்தில் புதிய இராசதானி யுகத்தைச் சேர்ந்ததாகக் கருதப்படுகின்றது.
- இது வர்ணந்தீட்டப்பட்ட ஒரு ஓவியமாகும். இது திபஸ் இல் நெபாமுன் (Nebamun) கல்லறையில் இருந்து கிடைத்தது.
- எகிப்திய பிரபுவான நெபாமுன் ஓடமொன்றில் ஏறி நைல் நதியில் தமது கையில் உள்ள வளை தடியைப் (Boomereng) பயன்படுத்தி பறவை வேட்டையாடும் விதம் இந்த ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளது.
- அவரது ஒரு கையில் வேட்டையாடிய மூன்று பறவைகள் உள்ளன. இந்த ஓவியத்தில் காணப்படும் பெண் உருவங்கள் அவரது புதல்வியும் மனைவியுமாவர் எனக் கருதப்படுகின்றது.
- பைப்பிரஸ் (Papyrus) பற்றைகளுக்கு இடையே பறவைகள் காட்டப்பட்டுள்ளதோடு, அதற்கு அருகே உள்ள வேட்டைப்பூனை, கால்களால் இரண்டு பறவைகளையும் வாயினால் ஒரு பறவையையும் பிடித்துக்கொண்டிருக்கும் விதம் காட்டப்பட்டுள்ளது.
- மனித உருவங்கள் மரபார்ந்த பாணி ரீதியாக பக்கத்தோற்றமாகவும், பிராணிகளும் தாவர இலைகளும் மிக இயல்பான வகையிலும் சித்தரிக்கப்பட்டுள்ளன.
- பட்டிகைச் சித்திரிப்பாகக் குறிப்பிட்டுள்ளது. இச்சித்திரச் சட்டகத்தினுள் பல்வேறு நிகழ்வுகளின் சேர்மானம் காட்டப்பட்டுள்ளதோடு, அதன் மூலம் ஓவியத்தின் தொழிற்பாட்டுத்தன்மை எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.
- இது உலர்ந்த சாந்தின் மீது பிரெஸ்கோ சிக்கோ நுட்ப முறையில் வரையப்பட்ட ஓர் ஓவியமாகும்.
- உருவங்களுக்கு நிறந்தீட்டுவதற்காக மஞ்சள், சிவப்பு, வெள்ளை, கறுப்பு போன்ற நிறங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, ஓவியங்கள் இருபரிமாணத் தன்மையுடையன.
- ஓவியத்தின் பின்னணியில் ஹைறொக்லிபிக்ஸ் (Hierglyphics) அதாவது உருவ அட்சரங்களைக் காணலாம்.
- தற்போது இது லண்டனில், பிரித்தானிய அரும்பொருட் காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**தேர்ச்சி 7.0 :** வரலாற்று ரீதியான உண்ணாட்டு, வெளிநாட்டு சித்திர, சிற்ப செதுக்கல் மற்றும் கட்டட நிர்மாணக் கலைகளின் தனித்துவங்களை இனங்கண்டு, அவற்றின் கலைப் பண்புகளை படைப்பாக்கத்திற்காகப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம் 7.4 :** எகிப்திய, கிரேக்க கலைப்படைப்புக்களைக் கற்பார்.

**செயற்பாடு 7.4.2 :** கிரேக்க சிற்பக்கலைப்படைப்புக்கள்

**பாடவேளைகள் :** 2

**கற்றற் பேறுகள்:**
- கிரேக்க சிற்பக்கலைப் படைப்புக்களைப் பெயரிடுவார்.
- கிரேக்கக் கலைப்படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியாராய்வார்.
- கிரேக்கக் கலைப்படைப்புக்களின் பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும் நுட்பமுறைகளையும் விவரிப்பார்.
- கிரேக்க கலைப்படைப்புக்களின் கலைப்பண்புகளை மதிப்பிடுவார்.

**தர உள்ளீடு:**
- கிரேக்கச் சிற்பங்களின் வர்ண ஒளிப்படங்கள்.
- வீனஸ் டிமெலோ
  - பரிதிவட்டம் எறிபவர்
  - ஹேர்மிசும் டயோனிசும்
  - அதீனாத் தேவதை
  - லக்கூன்
- இணைப்பு 7.4.2.1 செயற்பாட்டுப் பத்திரப் பிரதிகள்.
- இணைப்பு 7.4.2.2 வாசிப்புப் பத்திரப் பிரதிகள்.

## செயற்பாடுகளைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:

**படிமுறை 7.4.2.1**
- கிரேக்கச் சிற்பக்கலைப் படைப்புக்களின் ஒளிப்படங்களைக் காட்சிப்படுத்தி மாணவரின் கவனத்தை அவற்றின்பால் ஈர்க்குக.
- அக்கலைப்படைப்புக்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.
- கிரேக்கச் சிற்பக்கலைப்படைப்புக்களுக்குரிய தகவல்களைத் திரட்டுமாறு மாணவரை வழிப்படுத்துக.

(15 நிமிடம்)

**படிமுறை 7.4.2.2**
- இணைப்பு 7.4.2.1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரப் பிரதிகளை மாணவர்க்கு வழங்குக.
- இணைப்பு 7.4.2.2 இல் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரப் பிரதிகளை வழங்கி, அதனை வாசிக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- வாசிப்புப்பத்திரத்தைத் துணையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளிக்குமாறு மாணவர்க்கு அறிவுறுத்தல் வழங்குக.

(50 நிமிடம்)

**படிமுறை 7.4.2.3**

- பொருத்தமான ஓர் உத்தியைக் கையாண்டு விடைத்தாள்களை மதிப்பிடுக.
- ஒட்டுமொத்த செயற்பாட்டை மீளாய்வு செய்க.

(15 நிமிடம்)

## கணிப்பீடு, மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்தி, இணைப்பு 7.4.2.1, இணைப்பு 7.4.2.2 ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.

- கிரேக்கச் சிற்பக்கலைப் படைப்புக்களின் கருப்பொருள்களையும் அக்கலைப் படைப்புக்களையும் பெயரிடுதல்.
- கிரேக்க கலைப்படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைத் தேடியறிதல்.
- கிரேக்கக் கலைப்படைப்புக்களின் பாணிக்கு அடிப்படையாக அமைந்த ஊடகங்களையும் நுட்பமுறைகளையும் விவரித்தல்.
- கிரேக்கக் கலைப்படைப்புக்களின் சிறப்பான கலைப்பண்புகளை மதிப்பிடுதல்.

**இணைப்பு 7.4.2.1**

## செயற்பாட்டுப்பத்திரம்:

- காட்சிப்படுத்தியுள்ள கிரேக்கக் கலைப்படைப்புக்களைக் கவனமாக அவதானியுங்கள்.
- உங்களுக்குத் தரப்பட்டுள்ள வாசிப்புப்பத்திரத்தைக் கவனமாக வாசியுங்கள்.
- கிரேக்கக் கலைப்படைப்புக்களின் சிறப்பியல்புகளை இனங்கண்டு கொள்ளுங்கள்.
- பின்வரும் வினாக்களுக்கு விடையளியுங்கள்.
    1. கிரேக்கக் கலைப்படைப்புக்களின் வரலாற்றுப் பின்னணியைச் சுருக்கமாக விளக்குக.
    2. கிரேக்கச் சிற்பக்கலைப்படைப்புக்களைப் பெயரிடுக.
    3. அவ்வொவ்வொரு கலைப்படைப்பையும் சுருக்கமாக விளக்குக.
        - காலம்/ யுகம்
        - கலைஞன்
    4. சிற்பங்களின் கலைப்பாணிக்கு அடிப்படையாக அமைந்த பின்வரும் அம்சங்களை விவரிக்குக.
        - பாரம்பரியம்
        - ஊடகம்
        - நுட்ப முறைகள்
        - கலைப்பண்புகள்
            - உருவங்களின் பயன்பாடும் தன்மையும்
            - பாவ – உணர்ச்சி வெளிப்பாடு
- நீங்கள் தேடியறிந்தவற்றை வகுப்பில் முன்வைப்பதற்க்கு ஆயத்தஞ்செய்து கொள்ளுங்கள்.
- நிர்மாணங்களை வகுப்பில் காட்சிப்படுத்தி அதைப் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க தயாராகுக.
- தேவையேற்படும் வேளைகளில் ஆசிரியரின் உதவியை நாடுக.

இணைப்பு 7.4.2.2

## வாசிப்புப்பத்திரம் :

## வீனஸ் தி மெலோ (Venus de melo)








- பிரான்சு நாட்டில் லூவர் அரும்பொருட்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள வீனஸ் டி மெலோ சிற்பமானது கிரேக்கத் தொன்மை யுகத்தைச் சேர்ந்த கலைப்பண்புகளைக் கொண்ட ஒரு கலைப்படைப்பாகும்.
- கைகளிரண்டும் உடைந்து போயுள்ள இந்த சலவைக் கற்சிற்பம் கி.பி. 1820 இல் மெலோ தீவில் கண்டுபிடிக்கப்பட்டது.
- இடது கையில் ஏந்திய கண்ணாடியினால் தனது உடலழகைப் பார்க்கும் ஒரு பெண் இச்சிற்பத்தினால் காட்டப்பட்டுள்ளது என்பது கலைவிமர்சகர்களின் கருத்தாகும்.
- பெண்ணின் அழகும், பெண் உடலின் லலிதத்தன்மையும் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ள இச்சிற்பம், கிரேக்கச் சிற்பக்கலைப்படைப்புக்களுள் உயரிய தரமுடைய ஒரு படைப்பாகக் கருதப்படுகின்றது.
- பெண் உருவின் இடையைச் சுற்றியுள்ள ஆடையின் மடிப்புகள் சரியும் விதம் இயல்பான முறையிற் காட்டப்பட்டுள்ளது.
- இச்சிற்பம் அன்ரிசொவ் எனும் கலைஞரால் படைக்கப்பட்டது.

## பரிதிவட்டம் எறிபவர் (Discobolus)






- பரிதிவட்டம் எறிபவர் சிற்பமானது கிரேக்கத் தொன்மை யுகத்தைச் சேர்ந்த கலைப்பண்புகளைக் கொண்ட ஒரு படைப்பாகும்.
- பரிதிவட்டம் எறிய ஆயத்தமாகும் விளையாட்டு வீரர் ஒருவர் இச்சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளது.
- இப்படைப்பில் விளையாட்டு வீரனின் மெய்ந்நிலையின்படி, ஆண் உடலின் வலிமை, வலுவான அசைவு, உடலின் சமநிலை, சந்தம் போன்றவை மிகச்சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளன.
- தசைச்செயற்பாட்டைக் காட்டும் வகையில் விளையாட்டு வீரனின் மெய்நிலை சிறப்பாகக் காட்டப்பட்டுள்ள இச்சிற்பம் சலவைக் கல்லினால் வடிக்கப்பட்டுள்ளது.
- கி.மு. 450 காலத்தைச் சேர்ந்த பரிதிவட்டம் எறிபவர், சிற்பத்தின் மூலப்படைப்பு வெண்கலத்தினால் செய்யப்பட்டிருக்கக்கூடும் என நம்பப்படுவதோடு அது சிறப்புக் கலைஞர் மைரன் (Myron) இனது படைப்பாகும்.

## ஹேர்மிகாம் டயோனீசும் (Hermes and Dionysus)








- கி.மு. 330 - 320 காலத்தைச் சேர்ந்த இச்சிற்பம் கிரேக்க நாட்டு, ஒலிம்பியாவிலிருந்து கண்டுபிடிக்கப்பட்ட ஒரு சிறப்பான முழுமைப்புடைப்புச் சிற்பமாகும்.
- கிரேக்க தொன்மை யுகத்தைச் சேர்ந்த கலைப்பண்புகளைக் கொண்ட இது பிரெக்சிடேல்ஸ் (Praxiteles) எனும் சிற்பக் கலைஞரால் வடிக்கப்பட்ட ஒரு படைப்பாகும்.
- இச்சிற்பம் 7 அடி 1 அங்குல உயரமுடையதாக, சலவைக் கல்லினால் வடிக்கப்பட்டுள்ளது.
- ஹேர்மிஸ் தனது வலது காலை ஊன்றி, இடது காலை முழங்காலில் மடித்து வைத்திருப்பதோடு, இடது கையில் டயொனீசஸ் எனும் குழந்தையைத் தூக்கி வைத்திருப்பதாக இச்சிற்பம் வடிக்கப்பட்டுள்ளது.
- ஹேர்மிஸ் இனது உருவத்தில் வலது கை உடைத்து போயுள்ளதோடு, அதன் மிச்சமுள்ள பகுதியை நோக்குகையில், அக்கையை மேலே உயர்த்தி வைத்திருக்கும் நிலையே காட்டப்படுகின்றது.
- அக்கையில் ஒரு கொத்து திராட்சைப் பழங்கள் இருந்திருக்கக்கூடும்.
- ஆணின் உடலில்காணத்தக்க தசைகளின் தன்மை, குணப் பண்புகள், விகிதாசாரம், போன்ற இயல்புகள் சிறப்பாக இச்சிற்பத்தில் காட்டப்பட்டுள்ளன.
- இடது கையில் தாங்கியிருக்கும் துணி காரணமாக சிற்பத்தின் சமனிலை பேணப்பட்டுள்ளது.
- இங்கு காட்டப்பட்டுள்ள குழந்தை உருவில் மென்மை, மழலைக்குணம் போன்ற இயல்புகளைக் காட்டுவதில் கலைஞன் வெற்றிபெறவில்லை எனத் தோன்றுகின்றது.
- இச்சிற்பம் தற்போது கிரேக்க நாட்டு, ஒலிம்பியாவில் தொல்பொருட் காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

## அதீனா தேவதையின் உருவம் (Athena Parthenon)







- சிற்பம் கி.மு. 5ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பீடியஸ் (Phidias ) எனும் கலைஞனால் வடிவமைக்கப்பட்டதாகும்.
- தொன்மை யுகத்தைச் சேர்ந்த இச்சிலை ஏறத்தாழ 48 அடி உயரமானது.
- ஓர் மரத்தில் செதுக்கப்பட்டு தங்கத்தினாலும், யானைத் தந்தத்தினாலும் கவசமிடப்பட்டுள்ள அதீனா தேவதையின் உருவம் மிகச் சிறப்பானதொன்றாகும்.
- இடது கையில் ஓர் ஈட்டியையும் ஒரு கேடயத்தையும் தாங்கியுள்ளது.
- வலது உள்ளங்கையில் நைக் (nike) அதாவது வெற்றி என்பதை குறியீடாகக் காட்டும் பண்டைய கிரேக்கத் தேவதையின் உரு காணப்படுகின்றது.
- கேடயம், பாதம், தலைக் கவசம், பாதணி ஆகிய பண்டைய கிரேக்க நாட்டு ஆடையணிகளுடன் காட்டப்பட்டுள்ளது.
- மென்மையான ஆடையின் தன்மையைக் காட்டுவதாக மடிப்புக்களை நுணுக்கமாக வெளிப்படுத்துவதில் கலைஞர் வெற்றி கண்டுள்ளார்.
- அதீனா தேவதை உருவத்தின் மூலம் வலிமை, போர், வீரத்துவம் (நிமிர்ந்த நிலை) பெண்ணுக்குரிய நளினம் போன்ற இயல்புகள் நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**லக்கூன் சிற்பம் (Laocoon )**











- லக்கூன் சிற்பம் ஹெலனிஸ்ரிக் காலத்தைச் (கி.மு.5) சேர்ந்த கலைப் பண்புகளைக் கொண்ட ஒரு படைப்பாகும்.
- இது சலவைக் கல்லினால் வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு கலைப்படைப்பாகும்.
- பாரிய கடற் பாம்பொன்றிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஒரு தந்தையும், இரண்டு புதல்வர்களும் எடுக்கும் முயற்சி இச்சிற்பத்தில் வடிக்கப்பட்டுள்ளது.
- தந்தையின் முதுமையையும் புதல்வர்களின் இளமையையும் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. வயோதிபத் தந்தையின் தைரியமும் வலிமையும் பாம்பிடமிருந்து தப்பித்துக் கொள்வதற்கு எடுக்கும் முயற்சியும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது.
- யாதார்த்த பாணிக்கு அமைவாக முகத்தில் வேதனை, அச்சம், திகில், விடாமுயற்சி, போன்றவை நன்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.
- எட்டு (8) அடி உயரமான இச்சிற்பம் தற்போது உரோமபுரியில் வத்திக்கான் அரும்பொருட்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.